
கோகுலம்

GOKULAM

மார்ச் '88 விலை ரூ. 3.





விபுலானந்த அடிகள்

பிறந்த தேதி: 29·3·1892 மறைந்த தேதி: 19 ஆடி 1947





உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும். — பாரதியார்.

கோகுலம்

1988 மார்ச் மாத இதழ்
மலர் 6 : இதழ் 2
தனிப்பிரதி ரூ. 3/—
ஆண்டுச் சந்தா ரூ. 36/—
கௌரவ ஆசிரியர்: — அழ. வள்ளியப்பா.

அருமைச் சிறுவர் சிறுமியரே,

அதிசய உலகில் ஆலிஸ் (ALICE IN WONDERLAND) என்ற உலகப் புகழ்பெற்ற சிறுவர் கதை உங்களுக்குத் தெரிந்திருக்கும். அந்தக் கதையை எழுதியவர் புகழ் பெற்ற ஒரு கணிதப் பேராசிரியர். பல உயர் கணித நூல்களை எழுதியவர். சார்லஸ் டட்விட்ஜ் டாஜ்சன் என்பது அவரது பெயர். ஆனாலும், பிள்ளைகளுக்கு எழுதும் போது, தம்முடைய பெயர் தெரியக் கூடாது என்பதற்காக, 'லூயி கரால்' என்ற புனை பெயரில் ஒளிந்து கொண்டு அந்த ஆலிஸ் கதையை அவர் எழுதி வெளியிட்டார்.

'சின்ட்ரல்லா' கதையை எழுதிய சார்லஸ் பெரால்ட் என்பவர், தம் பெயரிலே அக் கதையை வெளியிட்டார். ஆனாலும், 'பியரி' என்ற தம்முடைய மகனிடமிருந்தே அந்தக் கதையைத் தெரிந்து கொண்டதாக அவர் கூறி வந்தார்.

'சிறுவருக்கு எழுதுவது பெருமைக்குரிய செயலன்று' என்று வெளிநாட்டிலும், நம் நாட்டிலும் உள்ள பலர் நினைத்த காலம் ஒன்று இருந்தது.

மகாகவி பாரதியார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, ராஜாஜி போன்றவர்கள் குழந்தைகளுக்கும் எழுதத் தொடங்கிய பிறகுதான், 'குழந்தைகளுக்கு எழுதுவதும் பெருமைக்குரிய செயல்தான்' என்று பலரும் கருதினார்கள். இவர்களைப் போலவே, தமிழ் எழுத்தாளர்களில் தலைசிறந்து விளங்கியவர்களில் ஒருவரான அகிலன் அவர்களும் உங்களுக்காகப் பல கதைகளை எழுதுவதிலே இன்பம் கண்டார். பெரியவர்களுக்காகப் பல புத்தகங்களை எழுதி ஞான பீடப் பரிசு, சாகித்ய அகாதமிப் பரிசு போன்ற பற்பல பரிசுகளைப் பெற்ற அவர், 'நல்ல பையன்', 'தங்க நகரம்', 'சிகப்பு விளக்கு', 'கண்ணான கண்ணன்' போன்ற சிறுவர் நூல்களை எழுதினார். இவற்றில் 'கண்ணான கண்ணன்' தமிழக அரசின் பரிசைப் பெற்றது. சிறந்த எழுத்தாளர், இனிய இயல்பு கொண்டவர், தேச பக்தி மிக்கவர்; பிறருக்கு உதவும் பெருங்குணம் கொண்டவர் அகிலன். இவர் கோகுலம் டிசம்பர் மாத இதழில் எழுதிய 'என் குழந்தைப் பருவம்' கட்டுரையைப் படித்து நீங்களெல்லாம் மகிழ்ந்தீர்கள். உங்களில் பலர் அக்கட்டுரையைப் பாராட்டியும் எழுதியிருந்தீர்கள்.


இத்தகைய எழுத்தாளர் சென்ற ஜனவரி 31 — ஆம் தேதி காலமான செய்தி கேட்டு எழுத்துலகம் பெரும் துக்கத்தில் ஆழ்ந்தது. தொடர்ந்து பல கதைகளை உங்களுக்காக எழுதித் தர வேண்டுமென அவரிடம் நான் அடிக்கடி கேட்டு வந்தேன். விரைவில் எழுதித் தருவார் என்ற நம்பிக்கையோடும் இருந்தேன். எதிர்பாராதது நடந்து விட்டது. என் செய்வது?

— அழ. வள்ளியப்பா

இந்த இதழ் எழுத்தாளர்கள்


திருவையல் செயமணி


பெரியதம்பி


சி. இராஜசேகரன்


ஜெ. சீனுவாசன்


பிருந்தாவனக் கவிஞர்கள்


வி. ஜெயராமன்


ஜி. பிரபா

பிருந்தாவனக் கதாசிரியர்கள்


எஸ். கிருத்திவாசன்


ஜெ. தமிழ்ச் செல்வன்


ச. சந்திரகுமார்


அட்டை வண்ணப்படம்: கே. வி. ஆனந்த்.

சித்திரப் புதிர்! 25

ஆழி



1 இந்த எவரெஸ்ட் சிகரத்திற்கும் இவருக்கும் ஒரு தொடர்பு உண்டு. என்ன அது?




2 இது குரங்கு என்பது தெரியும். ஆனல், குரங்குகளில் இது எந்த வகையைச் சேர்ந்தது?

அ. கொரில்லா.
ஆ. சிம்பன்ஸி.
இ. உராங் உட்டான்.
ஈ. பாபூன்.



3 இவர் வாசிப்பது என்ன வாத்தியம்?



4 இது மிகவும் சிறப்பான சங்கு. ஏன் என்று சொல்ல முடியுமா?




5 உலகிலேயே மிகவும் விலை உயர்ந்த பூ இந்தச் செடியில் தான் பூக்கிறது. என்ன செடி இது?

விடை வேறு பக்கம்

மின்மினிக் கதைகள்

குதிரை கொடுத்த உதை!



உள்ளூரிலிருந்து வெளியூர் சென்று கொண்டிருந்த ஒருவன் வழியில் ஒரு சத்திரத்தைக் கண்டான்.

தன் குதிரையை அருகிலிருந்த மரத்தில் கட்டிவிட்டு அது உண்பதற்காகப் புல் போட்டுவிட்டுச் சத்திரத்திற்குள் நுழைந்தான். அப்பொழுது அங்கிருந்த குறும்பன் ஒருவன் குதிரையின் வால்முடியைப் பிடித்து இழுத்தான்.

இதைப் பார்த்த அவன், ''தம்பி! இது முரட்டுக் குதிரை, வால்முடியைப் பிடித்து இழுக்காதே. உதைத்தால் உன் பற்கள் எல்லாம் போய்விடும்'' என்று எச்சரித்துவிட்டு உள்ளே சென்றான்.

ஆனால் அந்தக் குறும்பன் இந்த எச்சரிக்கையைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. மீண்டும் குதிரையின் வால்முடியைப் பிடித்து இழுத்தான்.

குதிரையால் வலியைப் பொறுக்க முடியவில்லை. அவ்வளவுதான்! விட்டது ஒரு உதை! அவன் நான்கைந்து குட்டிக் கரணங்கள் போட்டுச் சிறிது தொலைவில் விழுந்தான். முன்பற்கள் விழுந்ததோடல்லாமல் நல்ல காயமும் அவனுக்கு ஏற்பட்டது.

'என் இந்த நிலைக்கு முரட்டுக் குதிரையின் சொந்தக்காரன்தான் காரணம்' என்று அவன் நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தான்.

நீதிபதி குதிரையின் சொந்தக்காரனைப் பார்த்து, ''இந்த முரட்டுக் குதிரை உம்முடையதுதானா?'' என்று கேட்டார்.

ஆனால் அவனோ ஏதும் பேசவில்லை.

''உன் குதிரையால்தான் இவனுக்கு இவ்வளவு காயம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு என்ன சொல்கிறாய்?'' என்று மீண்டும் கேட்டார் நீதிபதி.

இப்பொழுதும் அவன் ஒன்றும் பேசவில்லை.

இதைக்கண்ட நீதிபதி, ''இவன் செவிட்டு ஊமை போல் இருக்கிறான். என்ன கேட்டாலும் பதில் பேசாமல் நிற்கின்றானே'' என்றார்.

உடனே வழக்குத் தொடுத்தவன், ''என்ன, வாயிலே கொழுக்கட்டையா வைத்திருக்கிறாய்! 'இது முரட்டுக் குதிரை; வால்முடியைப் பிடுங்காதே! உதைத்தால் பல்லெல்லாம் போய்விடும்' என்று அப்பொழுது கத்தினாயே! இப்பொழுது செவிடு போல நடித்து ஏமாற்றவா பார்க்கிறாய்'' என்று கோபத்துடன் கத்தினான்.

இதைக் கேட்டதும் நீதிபதிக்கு உண்மை புரிந்தது. வழக்குத் தொடுத்தவனைப் பார்த்து, ''அவர் எச்சரித்த பிறகும் குதிரையின் வால்முடியைப் பிடித்து இழுத்தாயா?'' என்று கேட்டார்.

அவன் தலை கவிழ்ந்து நின்றான்.

குதிரையின் சொந்தக்காரன், ''நீதிபதி அவர்களே! தங்களுக்கு உண்மை தெரிய வேண்டும் என்பதற்காகவே ஊமை போல நடித்தேன். என்னை மன்னித்து விடுங்கள்'' என்றான்.

வழக்குத் தொடுத்தவனைக் கடுமையாகக் கண்டித்து அனுப்பிய நீதிபதி குதிரையின் சொந்தக்காரனின் அறிவுக்கூர்மையை மிகவும் பாராட்டினார்.

அறிவுள்ள அரசன்

முன்னொரு காலத்தில் பேரரசன் ஒருவன் குறுநில மன்னன் ஒருவனது நாட்டிற்கு வருகை தந்தான்.

பேரரசனுக்கு அந்நாட்டில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. இருநாட்டு அரசர்களும் மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது பேரரசன், ''உம் நாட்டு அமைச்சன் அறிவுக் கூர்மையில் சிறந்தவன் என்று சொல்கிறார்களே, அது உண்மையா?'' என்று கேட்டான்.

''உண்மைதான் அரசே!'' என்று பதில் சொன்னான் குறுநில மன்னன்.

''அப்படியானால் அந்த அமைச்சனை அழைத்து நம் இருவர்க்கும் குடிப்பதற்குப் பால் கொண்டுவரச் சொல்லுங்கள். அவன் உண்மையில் அறிவுள்ளவன் தானா என்பதை நான் கண்டுபிடித்து விடுகிறேன்'' என்று சொன்னான் பேரரசன்.



உடனே அமைச்சனை அழைத்த குறுநில மன்னன், ''நாங்கள் இருவரும் குடிப்பதற்குப் பால் கொண்டு வா'' என்றான்.

அமைச்சனும் அழகான தட்டில் இரண்டு கிண்ணங்களில் பால் வைத்து அங்கே கொண்டு வந்தான்.


அப்பொழுதுதான் அவனுக்கு யாரிடம் முதலில் தட்டை நீட்டுவது என்ற குழப்பம் ஏற்பட்டது. 'நம் அரசரிடம் முதலில் தந்தால் பேரரசன் தன்னை அவமானப்படுத்தி விட்டதாகக் கோபம் கொண்டு என்னைக் கொன்று விடுவான். மாறாகப் பேரரசனிடம் தந்தால் நம் அரசன் என் தலையை எடுத்து விடுவான்! என்ன செய்வது?' என்று சிந்தித்தபடி தயங்கி நின்றான்.

குறுநில மன்னனுக்கு இப்பொழுது அமைச்சனின் சிக்கல் நன்கு தெரிந்தது. 'அவன் என்னதான் செய்கின்றான், பார்ப்போம்' என்ற எண்ணத்தில் அமைதியாக இருந்தான்.

ஆனால் அறிவுள்ள அந்த அமைச்சனோ தட்டைத் தன் அரசனிடம் நீட்டி, ''அரசே! தங்கள் விருந்தினரான பேரரசருக்கு என் கையால் பால் தருவது தகுதி ஆகாது. அதைத் தாங்களும் விரும்ப மாட்டீர்கள். தங்கள் திருக்கரங்களாலேயே தந்து விருந்தினரைப் பெருமைப்படுத்துங்கள்'' என்றான்.

தன்னையும், விருந்தினரையும் ஒரே சமயத்தில் பெருமைப்படுத்திய அமைச்சனின் அறிவுக் கூர்மையை வியந்த அரசன் அவனுக்குப் பல பரிசுகளைக் கொடுத்துச் சிறப்பித்தான்.

அடிமையின் திறமை!



முன்னொரு காலத்தில் உம்சேயான் என்ற அரசன் தன் நாட்டை நல்ல முறையில் ஆண்டு வந்தான். ஒரு சமயம் அவனுடைய நாட்டை விட்டுத் தப்பியோட முயன்ற அடிமை ஒருவனை வீரர்கள் கைது செய்து அரசன் முன் கொண்டு வந்தனர்.

தன்னருகே இருந்த அமைச்சனைப் பார்த்து, ''தப்பியோட முயன்ற இந்த அடிமைக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?'' என்று கேட்டான் அரசன்.

ஏற்கெனவே அந்த அடிமையின் மீது பகை கொண்டிருந்த அமைச்சன், ''அரசே! இந்த அடிமைக்குத் தூக்குத் தண்டனை விதியுங்கள். தப்பிச் செல்ல எண்ணும் மற்ற அடிமைகளுக்கும் இது பாடமாக அமையட்டும்'' என்று சொன்னான்.

இதைக் கேட்டு அரசன் திடுக்கிட்டான்.

ஆனால், அறிவுள்ள அந்த அடிமை, ''அரசே! நான் பெரிதாக எந்தக் குற்றமும் செய்யவில்லை. என்னை நீங்கள் கொன்று விட்டால், ஆண்டவனின் திருமுன்னர் ஒரு கொலையாளியாக நிற்க வேண்டிவரும். என்னைக் கொன்ற பிறகும் தங்கள் மீது பழி வராமலிருக்க நல்ல வழி ஒன்று சொல்லுகிறேன்'' என்றான்.

''என்ன வழி?'' என்று கேட்டான் அரசன்.

''உங்கள் மீது பழி ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த இந்த அமைச்சரைக்

படிப்பு சுமையல்ல

ரு. துளசிதாஸ்



தேர்வுக் காலம் வந்தாச்சு;
திறமை காட்ட வாருங்கள்!
தேர்வுக் காலம் என்றாலே
திறமை காட்டும் காலம்தான்!

படிக்கும் நேரம் படிக்காமல்
பயனில் லாமல் ஊர்சுற்றும்
விடலைக் கூட்டம் சேராமல்
வெற்றி காணப் படித்திடுவோம்.

நமக்கு முன்னே உயர்ந்தோரும்
நம்மைப் போலப் படித்தவரே;
சுமையாய்ப் படிப்பை எண்ணாமல்
சுவையாய் அதனை ஏற்போமே!

அம்மா அப்பா நினைவெல்லாம்
அருமைச் செல்வம் நம்முடைய
செம்மை யான எதிர்காலம்;
சிறப்பு மிக்க புகழ்வாழ்க்கை.

சின்னச் செடியே பின்னாளில்
செழித்துப் பெரிய மரமாகும்;
சின்ன வயதுப் பழக்கம்தான்
திறமை என்று வளர்ந்திடுமே!

நாளைத் தலைவர் நாமென்று
நம்பும் பெரியோர் கனவதனை
நாளும் எண்ணிக் கடமையென
நம்மை உயர்த்தும் வழிநடப்போம்!



கொல்வதற்கு எனக்கு அனுமதி கொடுங்கள். பிறகு அமைச்சரைக் கொன்ற குற்றத்திற்காக எனக்குக் கொலைத் தண்டனை விதியுங்கள். அப்படிச் செய்தால் உங்கள் மீது பழியும் சேராது'' என்றான் அடிமை.

இதைக் கேட்ட அமைச்சன் நடுங்கி விட்டான்.

அவனைப் பார்த்து அரசன், ''சிறு தண்டனை பெற வேண்டிய இந்த அடிமையை அநியாயமாகக் கொல்லச் சொன்னீர்களே! இப்பொழுது நான் என்ன செய்வது?'' என்று கேட்டான்.


அந்த அடிமை மிகத் தந்திரமாகத் தன்னையும் சேர்த்துச் சூழ்ச்சி வலை பின்னியிருப்பதை அறிந்த அமைச்சன், ''அரசே! இறைவனுக்காக இவன் குற்றத்தை மன்னியுங்கள். அப்பொழுதுதான் என் குற்றமும் மன்னிக்கப் படும்'' என்றான்.


அடிமையும் அப்பொழுதே விடுதலை செய்யப்பட்டான்!

— பேராசிரியர் எ. சோதி தொகுத்து, புதுச்சேரி நன்மொழிப் பதிப்பகம் வெளியிட்டுள்ள 'கெட்டிக்காரன் கதைகள்' என்ற புத்தகத்திலிருந்து.

பேராசையின் விளைவு

படக்கதை÷ எஸ்.கே.ராமானுஜம் (ராஜு÷)





என்ன ஆச்சரியம்! இந்த ஏரியில் போகப்போக... பெரிய மீன்களாக வந்து கொண்டே இருக்கின்றனவே! இன்னும் கொஞ்சம் பொறுத்திருந்து பார்க்கலாம்.
மிகப்பெரிய இரண்டு மீன்கள் கொக்கினிடம் வந்தன...
இதைவிடப்பெரிய மீன்கள் வந்தால் தான்.. சாப்பிடுவேன்.
பேசாமல் கொக்கு வெகு நேரம் நின்று கொண்டிருந்தது.
கொக்குக்குப் பசி வயிற்றைக்கிள்ளியது. ஆனாலும் அதற்குப்பேராசை விடவில்லை.
ஐய்யோ! இருட்டாகப் போகுதே! ஒரு மீனைக்கூடக் காண வில்லையே...!
ஹா!..ஹா.. ஏதோ சப்தம் கேட்கிறது.. கண்டிப்பாக மிகப்பெரிய மீனாகத்தான் இருக்கும்....
ஐய்யோ!.. முதலை...!!

பிருந்தாவனக் கதையரங்கம்



மாறனும், குமரனும் சகோதரர்கள். அவர்களுடைய தந்தைக்கு மிகவும் வயதாகி விட்டது. எனவே அவர் நோய்வாய்பட்டு இறக்கும் தறுவாயில் இருந்தரார். அவர் தமது மகன்களுக்கு அறிவுரை கூற வேண்டும் என நினைத்து அருகில் அழைத்தார். பிறகு, "நீங்கள் நிழலிலேயே சென்று நிழலிலேயே வர வேண்டும்'' எனக் கூறிய உடனே இறந்து விட்டார்.

மூத்த மகனாகிய மாறன் தன் தந்தை கூறிய அறிவுரையை நினைத்து, தான் செல்லும் இடம் எங்கும் பந்தல் போடச் செய்து சென்று வந்தான். இதனால் அவனுடைய செல்வம் முழுவதையும் அவன் வெகு விரைவிலேயே இழந்தான். 'தந்தை கூறியபடி செய்ததால், செல்வம் முழுமையும் இழந்தோமே!' என வருந்தினான்

இளையவனான குமரன் தன் தந்தை கூறிய அறிவுரையை மனத்தில் கொண்டு, விடியற்காலையிலேயே எழுந்து வயல்களுக்குச் சென்று உழைத்து சூரியன் மறைந்த பின்னர் வீடு வந்தான். இதனால் அவனுடைய செல்வம் பெருகியது.

மாறன் தந்தை கூறிய வார்த்தையின் பொருளைச் சரியாகப் புரிந்து கொள்ளாததால், விரைவிலே தன் செல்வத்தை இழந்தான். தன் தம்பியைப் போல் விடியற்காலை சூரியன் எழும் முன்பே எழுந்து, சூரியன் மறையும் வரையிலும் உழைக்காமல் போனேனே! 'நிழலிலேயே போய் நிழலிலேயே வர வேண்டும் எனத் தந்தை கூறியதன் பொருளைப் புரிந்து கொள்ளாமல் இருந்தேனே!' என வருந்தினான். வருந்திய பின் திருந்தினான். மெல்ல மெல்லச் செல்வம் சேர்ந்தது. மகிழ்ச்சியாக வாழ்ந்தான்.

நண்பனால் வெற்றி!

தங்கபுர அரசவையில் அமர்ந்து இருந்த அரசன் தனபாலனுக்கு வாயிற் காவலாளி வாழ்த்துரை வழங்கிவிட்டு, ''அரசே, தங்கள் நண்பரும், செம்மங்கல நாட்டு அரசருமான செந்தமிழன் தங்களுக்கு ஓலை அனுப்பி இருக்கிறார்'' என்று கூறினான். உடனே ஓலை கொண்டு வந்த தூதுவனை உள்ளே அனுப்பக் கட்டளையிட்டான் அரசன்.

ஓலையைப் படித்த அரசன் திடுக்கிட்டான். ஏனென்றால், ஓலையில், 'அடுத்து வரும் பௌர்ணமியன்று உன் கோட்டையை என் படை முற்றுகையிடும்' என்று இருந்தது.

தனபாலனுக்கோ ஒரே அதிர்ச்சி! 'நான்கு நாள் முன்தானே இருவரும் வேட்டைக்குச் சென்று திரும்பினோம். அதற்குள் இந்தச் செந்தமிழனுக்கு என்ன வந்தது? யாராவது தூண்டி விட்டிருப்பார்களோ? அல்லது இத்தனை நாள் நண்பனாகப் பழகியது வெறும் வேஷமோ?' என்று செந்தமிழன் மீது சந்தேகம் கொண்டான் தனபாலன்.

'சிறு வயதில் என்னுடன் ஒன்றாகப் படித்து, உண்டு, உறங்கி, மகிழ்ந்த செந்தமிழனா இப்படி?' என்று ஆச்சரியப் பட்டான்.

கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தவனாக, 'பௌர்ணமிக்கு இன்னும் 20 நாட்கள் உள்ளன. அதற்குள் நம் படையைத் தயார் செய்ய வேண்டும்' என்று எண்ணி, படைத் தளபதியை அழைத்து, படையைத் தயார் செய்யும் படியும், நன்கு பயிற்சி அளிக்கும்படியும் கட்டளையிட்டான்.

படைகளுக்கு நன்கு பயிற்சி அளிக்கப்பட்டது. புதிதாகப் பல வீரர்களையும் படையில் சேர்த்தனர். இதனால் ஒரு மாபெரும் சேனையே திரண்டு போருக்கு ஆயுத்தமாக இருந்தது.

பௌர்ணமி வந்தது.

செந்தமிழன் படையை எதிர்பார்த்து, தனபாலன் கோட்டையைச் சுற்றிக் காவல் போட்டதால் எப்போதும் தயார் நிலையில் போர் வீரர்கள் இருந்தனர். பௌர்ணமி அன்று செந்தமிழனின் படை வரவில்லை.

இரண்டு நாள் கழித்து ஒரு படை வருவது தெரிந்தது. உடனே போர் முரசு கொட்டியது. எல்லோரும் ஆயுதங்களுடன் தயார் நிலையில் இருந்தனர். படை அருகில் வந்தவுடன்தான் தெரிந்தது. 'இது செந்தமிழனின் படை அல்ல. என் பரம எதிரியான சுந்தரராஜன் படைத்தான்' என்று தனபாலன் அறிந்தான்.

உடனே போர் மூண்டது. போர் ஆரம்பம் ஆன மறுநாள் செந்தமிழனின் படை வந்தது கண்டு தனபாலன் திடுக்கிட்டான். இரண்டு படைகளும் சேர்ந்து போரிட்டால் நமக்குத் தோல்வி நிச்சயம் என்று மனம் வேதனைப்பட்டான். ஆனால், செந்தமிழனின் படை வந்ததும், அது தன் படையைத் தாக்காமல் தன் எதிரியான சுந்தர ராஜனின் படையைத் தாக்குவதைப் பார்த்து ஆச்சரியமுற்றான். சுந்தர ராஜன் படையை இரண்டு பக்கங்களிலிருந்தும் தாக்கியதால், தாக்குப் பிடிக்க முடியாமல் அது சிதறி ஓடியது. போரில் சுந்தரராஜன் மடிந்தான்.

உடனே வெற்றி முழக்கம் ஓங்கி ஒலித்தது. தனபாலன் தன் நண்பன் செந்தமிழனைக் கட்டித் தழுவி இன்முகத்துடன் வரவேற்று உபசரித்தான். பிறகு ''ஓலையை நீதான் அனுப்பினாயா?'' என்று வினவினான்.



அதற்குச் செந்தமிழன், ''ஆம் நண்பா, நீ சரியாகப் படை நிர்வாகத்தைக் கவனிக்காதது குறித்து எத்தனை முறை உன்னிடம் சொன்னேன். நீ கேட்கவில்லை. சுந்தரராஜன் உன் நாட்டின் மீது பௌர்ணமி சமயத்தில் படை எடுக்கத் திட்டமிட்டிருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்தது. அதனால் அப்படி ஒரு ஓலையை அனுப்பினேன். நீ உடனே படை நிர்வாகத்தைக் கவனித்தாய். இப்போது நாம் வெற்றி பெற்றோம். இல்லையென்றால் தோல்வி உறுதி'' என்று கூறினான்.

இப்படி முன்னெச்சரிக்கை கொடுத்து வெற்றி பெற உதவிய நண்பன் கிடைத்ததற்காகப் பெரு மகிழ்ச்சி கொண்டான் தனபாலன். அந்த மகிழ்ச்சியால் ''நீ உதவி செய்யா விட்

டால் என் நாட்டை இழந்து இருப்பேன். வெற்றி பெற நீயும் உதவியதால் சுந்தரராஜனுடைய பரந்த நாட்டை நீ பாதி ஆண்டு கொள்'' என்று பாராட்டி வழி அனுப்பினான்.

நேர்மையால் உயர்ந்தவன்!



எஸ். கிருத்திவாசன் (9277)

குன்றத்தூர் என்னும் ஊரில் இராமன், முருகன் என்று இரு சிறுவர்கள் இருந்தனர். இருவரும் உயர்நிலைப் பள்ளியில் படித்து முடித்த பின் வியாபாரம் செய்தனர்.

இராமன் தன் கடையில் தேங்காய்களை வைத்திருந்தான். முருகன் தன் கடையில் காய்கறிகளும் பழங்களும் வைத்திருந்தான்.

முருகன் கடையில் எல்லாம் விற்று, கடைசியாக ஒரு முலாம் பழம் மட்டும் தான் இருந்தது. இராமச்சந்திரன் என்ற பெரிய மனிதர் முருகன் கடைக்கு வந்தார். அவர் முலாம் பழத்தின் விலையைக் கேட்டார்.

''இது நல்ல பழம் போலத் தோன்றினாலும், இது ஒரு பக்கம் கொஞ்சம் அழுகி இருக்கிறது'' என்றான் முருகன்.

பெரியவர், ''தம்பி, உன் பழத்தைப் பற்றி நீயே குறை கூறலாமா?'' என்றார்.

''ஐயா! 'நெஞ்சாறப் பொய் தன்னைச் சொல்ல வேண்டா' என்னும் நெறியை நான் பின்பற்றி நடக்கிறேன். கற்றபடி நடக்கா விட்டால் படித்து என்ன பயன்?'' என்றான் முருகன்.

''ஆமாம் தம்பி, இந்த நெறியை எப்பொழுதும் பின்பற்றி நட. உனக்கு எந்தக் குறையும் நேராது. நான் உன்னை மறக்கவே மாட்டேன்'' என்று சொல்லி விட்டுப் பக்கத்திலிருந்த இராமனுடைய கடைக்குச் சென்றார். அங்குள்ள தேங்காயை விலை பேசினார்.

''தம்பி, இது நல்ல தேங்காயா? பால் பிழிய வருமா?'' என்றார்.

''ஆம், ஐயா! நல்ல தேங்காய். நேற்றுத்தான் மரத்திலிருந்து பிடுங்கியது. நான் தான் உரித்தேன்'' என்று நயவஞ்சகமாகப் பேசி அவரிடம் அதை விற்று விட்டான்.

பிறகு, இராமன் முருகனைப் பார்த்து ''நீ சரியான மூடனாக இருக்கிறாயே! உன் பழத்தில் உள்ள குறையை நீயே கூறலாமா? இனி யார் அதை வாங்கப் போகிறார்கள்? இனி அதை வீட்டுக்குச் சுமந்து போக வேண்டியதுதான். நான் எப்படி அந்த அழுகல் தேங்காயை விற்று விட்டேன் பார்த்தாயா? நல்ல தேங்காய்களை விற்ற விலைக்கே தான் அதையும் விற்றேன். நீதான் சத்தியவான் மாதிரி பேசி உன் வியாபாரத்தைக் கெடுத்துக் கொண்டாய்'' என்றான்.

சித்திரப் புதிர்-25

விடைகள்:

1. எவரெஸ்ட் சிகரத்தைக் கண்டு பிடித்த இந்திய சர்வேயர் ஜெனரல் ஸர். ஜார்ஜ் எவரெஸ்ட்.
2. (ஆ.) சிம்பன்ஸி
3. கிடார்
4. வலம்புரிச் சங்கு மிகவும் அரிதாகக் கிடைப்பது. பல லட்சம் இடம்புரிச் சங்குகளுக்கு இடையில் இது ஒன்றுதான் கிடைக்கும்.
5. குங்குமப்பூச் செடி.

''ராமா! இன்று காலையிலிருந்து விற்றுச் சம்பாதித்தது போதும். அதைப் போல் இன்னும் ஒரு மடங்கு பணம் கிடைத்தாலும் நான் ஏமாற்றிப் பொருள் சேர்க்கப் போவதில்லை. நான் உண்மை பேசியதால், எனக்கு ஒரு வாடிக்கையாளர் கிடைத்தார். அவர் இனி என் கடையில்தான் பொருள்களை வாங்குவார். உன் கடைக்கு வரவே மாட்டார். இப்பொழுது சிந்தித்துப் பார்! யாருக்கு நன்மை, யாருக்கு இழப்பு என்று'' முருகன் பதிலுரைத்தான்.

முருகன் கூறியது போலவே மறுநாள் அந்தப் பெரியவர் வந்தார். முருகன் கடையில் தமக்குத் தேவையான பொருள்களை வாங்கினார். அந்தப் பெரியவர் தமக்குத் தெரிந்தவர்களிடம் 'முருகன் கடையில் நல்ல பொருட்கள் கிடைக்கும். விலையும் மலிவு. பொய் சொல்ல மாட்டான்'' என்று கூறி முருகனுக்கு விளம்பரம் செய்யத் தொடங்கினார்.

அந்தப் பெரியவரும் மற்ற மக்களும் இராமன் கடைக்குச் செல்வதில்லை. அதனால், அவனுடைய வருவாய் குறைந்தது. பெரியவருக்குச் சொந்தமாக இராமச்சந்திரன் பண்டக சாலை என்ற ஒன்று உள்ளது. அதில் நேர்மை, உண்மை, உழைப்பு முதலிய நற்குணங்கள் கொண்ட முருகனை ஒரு பங்காளியாக அந்தப் பெரியவர் ஆக்கிக் கொண்டார். முருகன் பெரும் புகழும் பெற்றுச் செல்வச் செழிப்புடன் இனிது வாழ்ந்து வருகிறான்.



விசித்திரச் செய்திகள்




20,00,744 பற்களைப் பிடுங்கியவர்!




உலக சாதனையாளர் விவரம் கொண்ட 'கின்னஸ்' புத்தகத்தில் இப்போது ஒரு பல் டாக்டரும் இடம் பெற்றிருக்கிறார். அவர் செய்த சாதனை: தனது 36 ஆண்டு பணிக் காலத்தில் 20,00,744 பற்களைப் பிடுங்கியிருப்பதுதான்!

தலைகீழாக மலை ஏறியவர்!

தென் கொரியாவைச் சேர்ந்த 'ஷி ன் சாங்—மாக்' என்பவர் தலைகீழாக — கைகளால் — 'நடந்து' அந்த நாட்டின் 1950 மீட்டர் உயரம் உள்ள ஹல்லா மலைச் சிகரத்தை அடைந்து உலக சாதனை புரிந்திருக்கிறார்! ஆரம்பித்து இரண்டு நாட்களுக்குள்ளாகவே அவர் சிகரத்தை அடைந்து விட்டார். உலகில் உள்ள முக்கிய மலைகளையும், உயர்ந்த கட்டடங்களையும் இது மாதிரி தலைகீழாகவே நடந்து ஏறத் திட்டமிட்டிருக்கிறார் அவர்!




மிகப் பெரிய தங்க நாணயம்!




17—ஆம் நூற்றாண்டில், இஸ்லாமியர் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த ஒரே ஒரு தங்க நாணயத்தின் எடை 12 கிலோ! உலகிலேயே மிகப் பெரிய தங்க நாணயம் இதுதான். ஜெனிவாவில் உள்ள ஏலக் கம்பெனியில் இதை விற்பனைக்குக் கொண்டு வந்தார்கள். இதன் மதிப்பு ரூ.11 கோடி என்று சொல்லப்பட்டது. ஆனால், அவ்வளவு தொகை கொடுத்து யாரும் வாங்க முன்வராததால் அந்தத் தங்க நாணயம் ஏலத்தில் விடப்படவில்லை.

மலிவான வாகனம்!




நீரில் நன்றாக நீந்தக் கூடியவை எருமைகள். இந்தோனேஷியாவில், எருமையின் முதுகில் மரப் பெட்டி போன்ற இருக்கையைப் பொருத்தி அதில் ஏறிக் கொண்டு ஆற்றைக் கடக்கிறார்கள். படகை விட எருமைகள் மிக மலிவாம்!

மனிதத் தோல் செருப்பு!




கர்நாடக மாநிலத்தில் குடாலா சங்கமா என்னும் இடத்தில் உள்ள சங்கமேஸ்வரர் கோவிலில் விசித்திரமான காணிக்கை ஒன்று செலுத்தப்பட்டது. குல்பர்க்காவைச் சேர்ந்த பசவனப்பா என்னும் பக்தர், தம் உடலில் இருந்து தோலை உரித்துச் செருப்புத் தைத்து அதைக் காணிக்கையாகச் செலுத்தியிருக்கிறார்.

முதலைச் சண்டை!



மலேசியாவில் எஸ்.எம். நூர் பூங்காவில் முதலைகள் ஏரி உள்ளது. அதில் 100க்கு மேற்பட்ட முதலைகள் இருக்கின்றன. அந்த முதலைகளுக்குள் யார் தலைவனாக இருப்பது என்பதில், ஜாகு என்ற 800 கிலோ எடையுள்ள முதலைக்கும் ஜானி என்ற 900 கிலோ எடையுள்ள முதலைக்கும் சண்டை நடந்தது. 6 மணி நேரம் பயங்கரச் சண்டை. கடைசியில் ஜானி தான் ஜெயித்தது. ஜாகு படுகாயம் பட்டு இறந்து விட்டது!

மிக நீளமான கடிதம்!



கேரள மாநிலம் வண்டிப் பெரியாரில் உள்ள ரீகன் ஜோன்ஸ் என்னும் 27 வயது எம்.ஏ., பட்டதாரி, உலக சமாதானம் குறித்து, உலக கத்தோலிக்க மதத் தலைவரான போப் 2வது ஜான்பாலுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பியிருக்கிறார். அந்தக் கடிதத்தின் நீளம் 2.4 கி. மீட்டர். எடை 100 கிலோ. உலகில் இதுவரை எழுதப் பட்ட கடிதங்களிலேயே இதுதான் மிக நீளமான கடிதம்!


அடுத்த இதழில்...



என் குழந்தைப் பருவம்

— சை.வே.சிட்டிபாபு

(முன்னாள் துணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)



* மறைந்த முதல்வர் எம். ஜி. ஆர். அவர்களின் பெருமையை எத்தனையோ பத்திரிகைகளில் படித்தேன். ஆனாலும், எங்களுக்கு ஏற்றபடி மிகச் சுவையாக அமைந்த கட்டுரை 'பிள்ளைகளைப் போற்றிய வள்ளல்' என்ற புத்தனேரி சுப்பிரமணியம் அவர்கள் எழுதியதுதான்.

எஸ். தாமோதரன், மதுரை — 2.

* 'பிள்ளைகளைப் போற்றிய வள்ளல்' படிக்கப் படிக்க ஆர்வத்தைத் தூண்டியது. கடைசியில், நெஞ்சை நெகிழ வைத்தது. கண்ணீர் சிந்தினேன்.

இரா. லிங்கன் (18139), பெரியகோட்டை.

* எம். ஜி. ஆர். மறைவுக்கு 'கோகுலம்' சார்பில் அஞ்சலி செலுத்திய விதம் மிகவும் எங்களை அதோடு ஒன்றச் செய்து, கண் கலங்கச் செய்து விட்டது.

திருமதி. பிரசன்னா ராஜன், கும்பகோணம் — 1.

* கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம் தொகுத்தளித்த கட்டுரை, மக்கள் திலகத்தின் கருணை உள்ளத்தை எங்களுக்குப் படம் பிடித்துக் காட்டி விட்டது.

த. அருள்சிவபாலன், செங்கற்பட்டு.

* லீப் வருடத்தின் கதையை, லீப் வருடத்திலே, அதுவும் லீப் மாதத்திலேயே வெளியிட்டு இருப்பது புதுமை. இதுவரை அறியாத பல புதிய தகவல்களையும், கணக்குகளையும் அறிந்து கொண்டேன்.

எஸ். ராஜா, குத்தாலம்.

* லீப் வருடத்தின் கதை மிகவும் பயனுள்ள கட்டுரை. ஜானகி மணாளன் அவர்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை.

பெ. கோகுல கிருஷ்ணன் (8567), மேட்டூர் அணை — 1.

* குழந்தைக் கவிஞரின் 'பழைய கதை: புதிய பாடல்' சுவையான கதைப் பாட்டு. என் பாராட்டு.

எஸ். கலைவாணன், திருநெல்வேலி — 7.

* பல்கலை வித்தகர் திரு. மீ. ப. சோமு அவர்கள் 1954—56—ல் 'கல்கி' வார இதழ் ஆசிரியராகவும் பணியாற்றியவர் என்ற செய்தியை சென்ற இதழ் மூலம் அறிந்து மகிழ்ந்தேன்.

மு. செந்தில்வாசன், திருமங்கலம் — 609 702.

* வீர. வசந்தன் வழங்கிய 'பயணம் தந்த பாடம்' சோம்பேறிகளுக்கு நல்லதொரு புத்தி புகட்டியது.

செ. குமார் (9102), மயிலாடுதுறை.

* 'பந்தும் பாப்பாவும்', 'வேட்டை நாய்' போன்ற கதைகள் அருமையிலும் மிக அருமை.

ஆர். முருகேசன், கரூர் — 4.

* நண்பர்களின் அன்பை விளக்கிய சிற்பி சோமுவின் 'உஷாவைக் காணோம்' மிகவும் சிறப்பாக இருந்தது.

எம். ஏ. சுப்ரமணியன், முருகன்புதூர், கோபி.

* ஜான்ஸி ராணியைப் பற்றி எங்களுக்கு ஓரளவுதான் தெரிந்திருந்தது. ஆனால், தாங்கள் வெளியிட்ட கதை மூலம் முழுமையாகத் தெரிந்து கொண்டேன்.

தி. முத்துக் குமார், சட்டநாதபுரம்.

* 'ஜான்ஸி ராணி லட்சுமிபாய்' வீர உணர்ச்சியை ஊட்டக் கூடிய படக் கதை. எழுதிய ஆனந்திக்கும், படங்கள் வரைந்த 'வினு'வுக்கும் எங்கள் பாராட்டுக்கள்!

ச. செந்தில்குமார் (17183), மயிலாடுதுறை.

* திருமதி சந்திரா குமாரசாமி எழுதிய 'கண்ணனின் பிறந்த நாள்' கதையினைப் படித்தவுடன் மனம் நெகிழ்ந்தேன். அந்தப் பிஞ்சு உள்ளத்தில் எத்தனை ஏக்கம்! நரகாசுரன் இறந்த நாளை நாம் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறோம். அது போல், என் பிறந்த நாளைக் கொண்டாடுவது என் தாயின் இறந்த நாளைக் கொண்டாடுவது போல் ஆகிறதே!' என்று கண்ணன் கூறும் இடம் மிகவும் உருக்கம்....

— செல்ல செந்தில்குமார், (19930), கீழ்வேளூர்.


* 'கால் கை வலிப்பு'த்தான் நாளடைவில் மருவி 'காக்கை வலிப்'பாகி விட்டது என்ற உண்மையை உணர்த்திய டாக்டர் கணேசன் அவர்களுக்கு நன்றி.

— மு. தமிழ்ச் செல்வன், ஆப்பக் கூடல்.

* சரவணனைப் போல் கைக் கடிகாரம் கேட்டுக் கொண்டிருந்த நான் இக் கதையைப் படித்தவுடன் திருந்தி விட்டேன். இதை எழுதிய சரஸ்வதி ராஜேந்திரன் அவர்களுக்கு என் நன்றி.

— ஜே. குருக் கண்ணன் (19889), வையச்சேரி.

பழமொழிப் புதிர்





ஒவ்வொரு படமும் ஒரு பழமொழியை நினைக்க வைக்கும். பழமொழிகள் யாவை?

விடை **25** — ஆம் பக்கம்.



* செக்கோஸ்லோவாக்கியா படத்தில்...

சிறுவருக்குத் திரைப்படம் தேவையா?

இந்திரா அனந்தகிருஷ்ணன்

இதென்ன கேள்வி? இவ்விதழைப் படிக்கும் சிறுவர்களே! என்னைத் தாக்காதீர்கள். சிறுவர்கள் மிகவும் பிரியப் பட்டுப் பார்ப்பது திரைப்படங்கள் என்று நான் நம்புகிறேன். பள்ளிப் பாடங்களின் சுமையை இறக்கிவைத்து விட்டு, அதைச் சற்று மறந்து, ஓய்வெடுத்துக் கொள்வதற்குத் திரைப் படங்கள் ஒருவிதமான கருவியாகும்— சந்தேகமில்லை. மேலும், ஒரே இடத்தில் அமர்ந்தபடி, படம்பார்க்கும் சிறுவன் எங்கெல்லாமோ சுற்றி வருகிறான்; பலவித அனுபவங்களைப்பெறுகிறான்.

இப்படியிருக்கையில், சிறுவர்களுக்கென்று தனிப்பட்ட முறையில் திரைப்படங்கள் தயார் செய்ய வேண்டுமென்ற கொள்கைக்கு நம் நாடு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதுதான் என் கேள்வி. 'சிறுவர் படம்' என்பதற்கு ஒரு விசேஷமான தன்மை இருக்கிறதா? வெவ்வேறு நாடுகளில் ஆண்டுதோறும் தயாரிக்கப்படும் திரைப்படங்களைக் கணக்கிட்டால், அதிகமான படங்கள் தயாரிக்கும் நாடுகளில் மூன்றாவதாக நிற்கிறது நம் நாடு. ஆனால், இவற்றில் எவ்வளவு சதவீதம் சிறுவர் படங்கள்? சிறுவர் படம் தயார் செய்ய எவ்வளவு செலவு செய்கிறது நம் அரசாங்கம்? சிறுவர் படங்களைக் குறைந்த அளவுக் கட்ட

ணத்தில் நாடெங்குமுள்ள சிறுவர்கள் பார்க்கிறார்களா? வெளியூர் உயர்தரச் சிறுவர் படங்களை வரவழைத்துக் காண்பிக்க முற்படுகிறதா அரசாங்கம்? 'பிசு—பிசு'வென்று இவ்வளவு கேள்விகள் திடீரென்று இப்பொழுது எழும்புவதற்குக் காரணம்? யார் கேட்கும் கேள்விகள் இவை?

இம்மாதிரியான பலவகைக் கேள்விகளைக் கேட்டு விவாதித்தது சிறுவர்களே! எங்கே? எப்போது? இவ்விவாதங்களின் விளைவு என்ன? இதோ சொல்கிறேன்:

சமீபத்தில், அதாவது, நேரு மாமாவின் பிறந்த தினத்தையொட்டி, ஒரிஸ்ஸாவின் தலைநகரான புவனேஸ்வரத்தில், ஐந்தாவது சர்வதேசச் சிறுவர் திரைப்பட விழா (5 th International Children's Film Festival) கோலாகலமாகப் பத்து நாட்களுக்கு நடைபெற்றது. இவ்விழாவையொட்டி சிறுவர்கள் திரைப்படங்களைப் பற்றிய ஒரு கருத்தரங்கம் (seminar) நடந்தது. இதில் கலந்து கொண்டவர்கள் பிரபல திரைப்படத் தயாரிப்பாளர்களும், (நம் நாட்டிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும்), மற்ற பிரமுக ர்களும் மட்டுமல்ல; அநேக சிறுவர்களும் கூடக் கலந்து கொண்டார்கள். ஒரிஸா கவர்னர் பாண்டே அவர்கள் சிறப்பு அழைப்பாளராக வந்து பார்த்து, சிறுவர்கள் தைரியமாகத் தெரிவித்த கருத்துக்களை மிக்க ஆர்வத்துடன் கவனித்தார்.

மத்தியப்பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு சிறுமி துணிச்சலுடன் கூறினாள்:—

''சிறுவர்கள் திரைப்படங்களை மிகவும் விரும்பிப் பார்க்கிறார்கள். ஆனால், நம் நாட்டில் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் தயாரிக்கப் படும் படங்கள் குறைவு. ஆகையால், தியேட்டரிலும், டீ. வி. யிலும் பெரியவர்களுக்குள்ள படங்களையே சிறுவர்களும் பார்த்து அனுபவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஏன் நம் நாட்டில் இன்னும் நிறையச் சிறுவர் படங்கள் தயார் செய்யக் கூடாது?''

முகம்மது ஸித்திக் என்னும் பத்தாவது படிக்கும் இளைஞன், ''நம் நாட்டில் சிறுவர்களுக்கு உயர்தரப் படங்களே கிடையாது'' என்று குறைப்பட்டுக் கொண்டான். தயாரிப்பாளர்கள் சிறுவர் படங்களில் வேண்டிய அக்கறை காட்டுவதில்லை. ஏனென்றால், அதில் வரும்படி குறைவு. தவிர, சிறுவர்களின் விருப்பு — வெறுப்புக்களைத் தெரிந்து கொண்டு, எந்த வயதுச் சிறுவர்கள் எந்த விதமான படங்களை விரும்பிப் பார்க்கிறார்கள் என்று அவர்கள் கவனிக்க முற்படுவதில்லை. தங்களுக்குப் பிடித்தாற்போல் படம் தயாரித்தால் அது சிறுவர்களுக்குப் பிடிக்குமென்று என்ன நிச்சயம்?

தானி பாலு என்பவள் நாகாலாந்தைச் சேர்ந்தவள். அங்கிருந்து விழாவில் கலந்து கொள்ள அழைக்கப்



• டென்மார்க் திரைப்படத்தில் ஒரு காட்சி.



* 'ஸ்வாமியும் நண்பர்களும்' படத்தில் நடித்துப் பரிசு பெற்ற மாஸ்டர் மஞ்சுநாத்.

பட்ட அச் சிறுமி, "நாகாலாந்து, மீஜோராம் போன்ற காட்டு— மலைப் பிரதேசங்களிலுள்ள சிறுவர்கள் சிறுவர் படங்களைப் பார்த்ததே இடையாது" என்று தெரிவித்தாள்.

"எனக்கு அடித்தது அதிர்ஷ்டம். இவ்விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிட்டியது. ஆனால், என் நாட்டிலுள்ள மற்ற சிறுவர் — சிறுமிகளுக்கும் இந்த மாதிரிச் சிறுவர் படங்களைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்க வேண்டாமா? வெவ்வேறு மாநிலங்களுக்கு, சிறந்த நம் நாட்டு, வெளி நாட்டுச் சிறுவர் படங்களை விநியோகம் செய்து, அங்குள்ள சிறுவர்களுக்கு அவற்றைப் பார்த்து அனுபவிக்கும் வாய்ப்பைக் கொடுக்க வேண்டாமா?" என்று கேட்டான் கணேஷ் என்ற பங்களூரிலிருந்து வந்திருந்த பையன். புத்திசாலி. சிறுவர் படங்களைத் தயாரிக்கச் சிறுவர்களே உதவ வேண்டுமென்பது அவனுடைய யோசனை. "எங்களுக்கு எம்மாதிரியான படங்கள் தேவை என்பது எங்களுக்குத்தானே தெரியும்?" என்று கேட்டான் அவன். மேலும், "கல்வி சம்பந்தமான உயர்ந்தரகத் திரைப் படங்கள் கல்வித் திட்டத்திலேயே சேர வேண்டும். அப்போதுதான் பள்ளிச் சிறுவர்களும் முறை தவறாத கல்வியூட்டும் சிறந்த திரைப்படங்களைப் பார்க்கும் வாய்ப்பு உண்டாகும்" என்றான்.

அரசாங்கத்தின் சார்பில் நடக்கும் நிறுவனம் Children's Film Society என்பது. இந்த அமைப்புத்தான் சிறுவர் திரைப்பட விழாவை நடத்தியது. கருத்தரங்கில் வெளியிடப்பட்ட வெவ்வேறு கருத்துக்களை ஏற்றுக் கொண்டு, வருங்காலத்தில் சிறப்பான சிறுவர் திரைப்படங்களைத் தயாரிக்க இந்த அமைப்பு உண்மையாக முயற்சி செய்யப் போகிறதா என்பது கவனிக்கத்தக்கது.

ஒருசில உயர்தரப் படங்களை விழாவில் கலந்து கொண்ட சிறுவர்கள் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. மற்றவர்கள் அப்படங்களைப் பற்றிப் படித்தாவது தெரிந்து கொள்ளலாமே!

விழாவில் பரிசுபெற்ற 'ஸ்வாமியும் நண்பர்களும்' (Swami & His Friends) பல பேர் டீ.வி.யில் பார்த்து அனுபவித்திருக்கிறார்கள். அதில் நடித்த மஞ்சுநாதுக்கு சிறந்த சிறுவர் நடிகன் பரிசு கிடைத்தது பொருத்தமே! நடுவர் குழு மட்டுமல்ல; எல்லோருடைய 'வோட்டும்' இப்படத்திற்கும், மஞ்சுவுக்கும்தான்!

மேலும், 'பெட்டட ஹூவு' எனும் கன்னடப் படத்தைச் சிறுவர்களும், பெரியோர்களும் மிகவும் விரும்பிப் பார்த்தனர். இதில் மாஸ்டர் புனீத், (கர்நாடகத்தின் புகழ்மிக்க நடிகர் ராஜகுமாரின் மகன்), ராமு எனும் கதாபாத்திரத்தில் தத்ரூபமாக நடித்தது எல்லோருடைய மனத்தையும் கவர்ந்தது. சிறுவர் திரைப்படத்தில், கதை மிகவும் முக்கியமான அம்சம். நல்ல கருத்துள்ள, மனத்தில் ஆழமாகப் படியும்படியான ஒரு நல்ல கதையைப் படமாக்கினால், அது சிறந்ததாயிருக்கும். 'What then Raman?' எனும் அழகான நாவலை இப் படரூபத்தில் கொண்டு வந்தவர் பிரபல படத் தயாரிப்பாளர் திரு. லக்ஷ்மிநாராயணன்.

சமீபத்தில் தயாரிக்கப்பட்ட மற்றொரு சிறுவர் படம் 'ரைனோ' (Rhino).

அஸ்ஸாமிலுள்ள காஸிரங்கா எனும் காட்டுப் பிரதேசத்தில் ஒரு காண்டா மிருகம் நிம்மதியாக வாழ்ந்து வருகிறது. ஆனால், பொல்லாத ஒரு மனிதன் அதை வேட்டையாடி, அடித்து, அதன் கொம்பை எடுத்து வியாபாரம் பண்ணுகிறான். அடித்துப் போடப்பட்ட காண்டா மிருகத்தைக் கண்ட மூன்று சிறுவர்கள் கடும் முயற்சி செய்து காட்டினுள் துணிச்சலுடன் சென்று, கூர்மையாகக் கவனித்து, யார் அந்தப் பொல்லாத வேட்டைக்காரர் என்று கண்டுபிடித்து விடுகின்றனர். இதுவும் ஒரு புத்தகத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு தயாரிக்கப்பட்ட படம்தான். (The Kaziranga Trail by A. K. Dutta Published by Children's Book Trust, New Delhi.)

பிரபல விஞ்ஞானி நார்லிகர் அவர்கள் வால்நட்சத்திரத்தைப் பற்றி எழுதிய ஒரு கதை சிறுவர்களுக்கான ஒரு திரைப்படமாக மாறியுள்ளது. 'தூமகேது' என்னும் விஞ்ஞான அனுபவம் சிறுவர்களுக்குக் கிடைக்கிறது.

வெளிநாட்டிலிருந்தும் பல சிறந்த திரைப்படங்கள் விழாவில் காண்பிக்கப்பட்டன.

ஆனால், இம்மாதிரியான படங்கள், விழாவில் மட்டுமல்லாமல், நாடெங்குமுள்ள கோடிக்கணக்கான சிறுவர்கள் பார்க்கும்படியாக ஆங்காங்கே, அடிக்கடி காண்பிக்கப்பட வேண்டுமல்லவா?

முனைந்து, சிறுவர்களுக்கு ஏற்றாற் போல், கவனக்குறைவில்லாமல், சிரத்தையுடன், பணத்தைச் சற்று கூடுதலாகச் செலவு செய்து சிறந்த படங்களைத் தயார் செய்வதுடன் மேன்மையான வெளிநாட்டுச் சிறுவர் படங்களையும் வரவழைத்து, அவைகளை நாடெங்கும் அனுப்பி வைக்கலாமல்லவா? நம் நாட்டுச் சிறுவர்களுக்கு ஓர் அருமையான பொழுது போக்காகவும், கல்வியூட்டும் கருவியாகவும் விளங்கும் சிறுவர் படங்களை இவ்வாறு காட்ட வேண்டியது அர

* காண்டாமிருகத்தின் கொம்பை ஒடித்தவனைக் காட்டுக்குள் துணிச்சலுடன் சென்று கண்டுபிடிக்கும் சிறுவர்கள்.





• 'பெட்டட ஊவெ' (மலையில் பூத்த மலர்) என்னும் கன்னடப் படத்தில் நடித்துப் பரிசு பெற்ற மாஸ்டர் புனீத்.

சாங்கத்தின் பொறுப்பல்லவா? Children's Film Societyயின் மூலம் அரசாங்கம் நம் நாட்டுச் சிறுவர்களுக்கு இப்படியானதொரு கைங்கர்யம் செய்தாக வேண்டும்.

பின் குறிப்பு:

(இக்கட்டுரையைப் படித்து அனுபவிக்கும் சிறுவர்கள், சிறுவர் திரைப் படங்களைப் பற்றிய அவரவர் கருத்துக்களை, கீழ்க்கண்ட இக்கட்டுரையாளரின் முகவரிக்கு எழுதி அனுப்பலாம் Children's Film Society — யில் இவர் ஓர் அங்கத்தினராக இருப்பதால், ஏதேனும் சீர்திருத்தங்கள் ஏற்படுத்த முயற்சி செய்யக் கூடும்.)

Mrs. Indira Ananthakrishnan,
C – 115, Inderpuri,
New Delhi – 110.

வெள்ளி யானைப் பரிசு பெற்ற மஞ்சுநாத்

தொலைக் காட்சியில் ஒளிபரப்பான 'மால்குடி நாட்கள் சுவாமி'யை யாரும்மறந்திருக்கமாட்டார்கள். சுவாமியாக நடித்த மாஸ்டர் மஞ்சுநாத், சமீபத்தில் புவனேஸ்வரத்தில் நடந்த ஐந்தாவது குழந்தைகள் திரைப்பட விழாவில் சிறந்த குழந்தை நட்சத்திரத்துக்கான 'வெள்ளி யானை' விருதைப் பெற்றிருக்கிறான்.

''இத்தொடர் ஒளிபரப்பாகும் போது என்னைப் பலரும் பெண் குழந்தை என்றே நினைத்து இருந்தார்கள்.'' என்று கூறும் மஞ்சுநாத்திற்கு வயது பத்து. பெங்களூரில் ஆறுவது வகுப்பு படிக்கும் மஞ்சுநாத் 40 கன்னடப் படங்களிலும், இந்திப் படமான ''உத்ஸவ்''லும் நடித்து இருக்கிறான். நன்றாகப் பாடத் தெரியும். மஞ்சுநாத்திற்குத் தாய் மொழியான கன்னடம் தவிர, தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் சரளமாக எழுதப் பேசத் தெரியும்.

— பெந்தக்காளூரான்.



உறுப்பினர் வரைந்த ஓவியங்கள்




S. லோகநாதன் (17150)



S. குருநாதன (8407)



S. சரவணன் (17150)



S. கனகராஜ் (1174)

கடவுள் தந்த பரிசு!

விஜயா சீனிவாசன்



பஸ் ஸ்டாண்டில் நல்ல கூட்டம். இளைஞர்களின் அரட்டைக் கூட்டம் ஒருபுறம். பசியைத் தவிர வேறு எதையுமே அறியாது. பரிதாபக் குரல் கொடுத்துப் பிச்சை கேட்கும் பிச்சைக்காரர்கள் ஒரு பக்கம். வால் போஸ்டரை சுவாரஸ்யமாகச் சாப்பிட்டுக் கொண்டு நின்ற மாடுகள் ஹாரன் சப்தம் கேட்டு அலறி அடித்துக் கொண்டு ஓடின.

இடையே கிளம்பிக் கொண்டிருந்த பஸ்ஸிலிருந்து 'திருவண்ணாமலை, திருவண்ணாமலை' என்று கூக்குரலுடன் ஹாரன் ஒலியும் பின்னிசையாகச் சேர்ந்து செவிப்பறையைத் தாக்கியது. இடையே 'வாளப்பளம், வாளப்பளம்' என்று விற்றுக் கொண்டு அலையும் சிறுவர்கள்.

இத்தனை சப்தத்திற்கும் செவி மடுக்காமல் ஓர் ஓரமாக முறுக்கு விற்றுக் கொண்டிருந்தாள் அந்தக் கிழவி. கிழவிக்கு எதைப் பற்றியும் கவலை இல்லை. அவள் எண்ணமெல்லாம் 'இன்று பூரா முறுக்கும் விற்குமா, விற்காதா' என்ற சிந்தனைதான்.

அவள் பக்கத்திலேயே கிழவியின் பேத்தி ஏழாங்கல் ஆடிக் கொண்டிருந்தாள். பழைய கிழிசல் பாவாடை அழகாக ஒட்டுபோட்டுத் தைத்திருந்தது. மேலே சற்றும் பொருத்தமில்லாத ஆண் சட்டையுடன் காட்சி அளித்தாள். வழிய வழிய எண்ணெய் தடவி, ஒரு ஜாண் பின்னல் நாய் வால் வ்டிவத்தில் வளைந்திருந்தது. வறுமையில் வாடினாலும் கிழவி தன் பேத்திக்கு 'ராஜாத்தி' என்று பெயர் சூட்டி இருந்தாள்.

கிழவியின் ஒரே மகள் நாகு. ராஜாத்தியைப் பெற்ற மறு வருடமே காசநோய் கண்டு இறந்து விட்டாள்.

கிழவி எல்லையில்லாச் சோகத்தில் துடித்தாள். ராஜாத்தியைத் தன்னிடம் வைத்துக் கொண்டு வளர்த்தாள். அவள் பேச்சிலும் விளையாட்டிலும் தன் துன்பத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக மறந்திருந்தாள்.

மாப்பிள்ளை பக்கிரி போன வருடம் இரண்டாம் திருமணம் செய்து கொண்டு, ராஜாத்தியைத் தன்னுடன் அழைத்துச் சென்று விட்டான். கிழவி ஆசைப்படும் போது ராஜாத்தியை

அனுப்பி வைப்பான்.

கிழவியும் ராஜாத்திக்குத் தன் சக்திக்குத் தகுந்தபடி பலகாரங்கள் செய்து கொடுப்பாள். ரிப்பன், வளையல் வாங்கிக் கொடுத்து மகிழ்வாள். முறுக்கு வியாபாரம் செய்யும் அவளால் வேறு என்ன வாங்கித் தர முடியும்? கிழவிக்கு வெகுநாட்களாகவே ஒரு பெரிய ஆசை. இந்தப் பொங்கலுக்கு எப்படியாவது பேத்திக்கு சீட்டியில் ஒரு பாவாடை, சட்டை எடுத்துத் தர வேண்டும். அதை ராஜாத்தி போட்டுக் கொண்டு அடையும் மகிழ்ச்சியைக் காண வேண்டும் என்பதுதான். அதற்காக எத்தனை கஷ்டப் படுகிறாள் கிழவி!

கிழவி தன் இடுப்பிலிருந்த சுருக்குப் பையை எடுத்து, கையை விட்டுத் துழாவி அதிலிருந்த பணத்தை எடுத்துப் பார்த்தாள். இரண்டு பத்து ரூபாய் நோட்டு, கசங்கிய ஒற்றை ரூபாய் நோட்டு ஒன்று சிறிதளவு சில்லறைகள். இவை அவளது சேமிப்பு. கிழவியின் முகம் பூரிப்பாய் மலர்ந்தது.

''பாட்டி வளையல் வாங்கித்தா பாட்டி!'' சிணுங்கினாள் ராஜாத்தி.

''ஆவட்டும் கண்ணு. நம்ப வளையல்கார மாணிக்கம் தம்பி வரட்டும். வாங்கித் தாரேன்'' என்றவள், 'இந்த மாணிக்கம் பயலை எங்கே காணோம்? வளையல் வியாபாரத்துக்கு இங்கிட்டுத்தானே வந்து குந்துவான்..' கிழவி குழிவிழுந்த கண்களால் மாணிக்கத்தைத் தேடி அலுத்தாள்.

இதோ அதோ என்று முறுக்குகள் பரபரப்பாக விற்பனையாகிக் கொண்டிருந்தன. இன்னும் ஆறு முறுக்குகள் தான் பாக்கி. கிழவியின் மனக்கணக்கு ஆரம்பமாயிற்று.

'எப்படியோ இருபத்தஞ்சு ரூபா சேர்ந்துடிச்சி. மீதி முறுக்குகளை விற்றதும் 'சவுளி'க்கடைக்குப் போய்த் துணி வாங்கி 'பாய்' கடையிலே தைக்கக் கொடுக்கணும். 'பாய்' நல்ல மனுசன். 'ஏழை'ன்னு கூலி கூட வாங்க மாட்டாரு. மவராசன்.' கிழவி திருப்தியாகப் புன்னகைத்தபடி தன் பேத்தியை நோக்கினாள். ராஜாத்தி சிணுங்கியபடி, ''பாட்டி! சீக்கிரம் வளையல் வாங்கித்தா பாட்டி'' என்று ராகமிழுத்தாள்.

''அந்தப் பய மாணிக்கத்தைக் காணோமே! அவன் வரட்டும் வாங்கித் தாரேன்.''

''அதோ பாட்டி வளைவி'' என்று பஸ்ஸிலிருந்து இறங்கிய ஒரு வளையல்காரனைச் சுட்டிக் காட்டிக் கூவினாள் ராஜாத்தி.

''எங்கேடி?'' என்று கேட்ட கிழவி கைகளால் கண்களுக்கு அணை போட்டு இடுங்கிய கண்களால் பஸ்ஸை நோக்கி விட்டு, 'பாழுங் கண்ணு சரியாத் தெரியலை' என்றாள்.

பஸ்ஸை விட்டு இறங்கிய வளையல் வியாபாரியைச் சுற்றிப் பெண்கள் கூட்டம்.

''ஏ வளையல்காரரே இங்கிட்டு வாங்க!'' கூவினாள் கிழவி.

''அட கூவாத கிழவி. இன்னா அவசரம்?'' ஆணவமாக வந்தது பதில்.

வியாபாரம் செய்ய வந்த பெண்களுடன் உரத்த குரலில் சண்டை போட்ட அவனை வெறுப்புடன் நோக்கிய கிழவி, ''நம்ப மாணிக்கம் தம்பியும்தான் வியாபாரம் செய்யுது. ஒரு சண்டை, கூச்சலுண்டா! இந்தாளு புதிசாயிருக்கு. மருவாதி இல்லாம

பழமொழிப் புதிர்-விடை

புதிர் — 31: சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்.

புதிர் — 32: எரிகிற கொள்ளியில் எண்ணெய் வார்த்தது போல்.

எண்ணம் தூய்மை எய்திட...



குடியிருக் கின்ற வீட்டினிலே
குப்பை கூளம் சேர்ந்திடுமே;
படியும் அசுத்தம் அகற்றிடவே
பாங்காய் வீட்டைத்
துடைக்கின்றோம்.

வெள்ளை ஆடை அணிகையிலே
விரைவில் அழுக்குச் சேர்ந்திடுமே;
தொல்லை அழுக்கை நீக்கிடவே
சோப்புப் போட்டுத்
துவைக்கின்றோம்.

ஓடி ஆடித் திரிகையிலே
உடலில் அழுக்குச் சேர்ந்திடுமே;
கூடும் அழுக்கைக் களைந்திடவே
குளிர்ந்த நீரில் குளிக்கின்றோம்.

மண்ணில் வாழும் மனிதருக்கே
மனத்தில் மாசு தோன்றிடுமே;
எண்ணம் தூய்மை எய்திடவே
இறைவன் தாளைத்
தொழுதிடுவோம்.

—சித்ர ரதன்

பேசுறான். கழுதை, கழுதை!'' பக்கத்துப் பொரிகடலைக்காரரிடம் முறையிட்டாள் கிழவி. ராஜாத்தி பொறுமை மீறி அழ ஆரம்பித்து விட்டாள். கிழவிக்குக் கோபமான கோபம்.

''ஏ வளையல்காரத் தம்பி, இங்கிட்டு வாப்பா.'' என்றாள் சத்தமாக. வளையல்காரன் ஏதோ முணுமுணுத்தபடி வளையல்களுடன் கிழவியின் பக்கம் வந்து அமர்ந்தான். கிழவி நல்ல வளையல்களாக எடுத்து ராஜாத்தியின் கைகளில் மாட்டினாள். 'எம்மாங்காசு தம்பி' என்றாள் சாந்தமாக. அவனுடன் பேரம் பேசுவதில் அவளுக்கு இஷ்டமில்லை.

''ஒண்ணே முக்கா ரூவா. எடு சீக்கிரம். பஸ் வந்துடுச்சு'' அவசரப்படுத்தினான் வளையல்காரன். கிழவி அவசரமாக சுருக்குப் பையைத் திறந்தாள். ''இந்தா ஒரு ரூபாய். மிச்சம் முக்கால் ரூபாயா? இந்தா சில்லறை'' என்று எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

வளையல்காரன் ரூபாய் நோட்டை வாங்கி உற்றுப் பார்த்துவிட்டு 'சட்'டென்று தன் சட்டைப் பையில் வைத்துக் கொண்டு ஓட்டமாக ஓடி, கிளம்பும் பஸ் ஒன்றில் ஏறினான்.

கிழவி அங்கு வந்த வியாபாரத்தைக் கவனித்து மீதி முறுக்குகளை விற்றுச் சில்லறைகளைச் சுருக்குப் பையில்

போட்டுக் கொண்டாள். ராஜாத்தி புது வளையல்களைக் குலுக்கி குலுக்கி மகிழ்ந்தாள்.

'இன்னிக்கு என்ன இவ்வளவு கூட்டம்! இந்த மாணிக்கம்பயலே எங்கே காணோம்?' கிழவி யோசித்தபடி 'ஜே ஜே' என்று பஸ்ஸிலிருந்து இறங்கும் கூட்டத்தைக் கண்டு வியந்தாள்.

'சரி போ. பணத்தை எடுத்துக் கிட்டுக் கிளம்ப வேண்டியதுதான் ஜவுளிக் கடைக்கு' என்று முணுமுணுத்தபடி சுருக்குப் பையை எடுத்து அதிலுள்ள பணத்தை மடியில் கொட்டிக் கொண்டாள். ரூபாய்த்தாளை எடுத்து உற்று நோக்கியவள் பரபரத்தாள். திரும்ப சுருக்குப் பையை விரல்விட்டு ஆராய்ந்தவள், 'அட சாமி. ஒரு ரூபாய்னு நெனேச்சு பத்து ரூவா நோட்டை வளையல்காரன் கிட்டே கொடுத்துட்டேனே. என் ஆசையிலே மண் விழுந்துடிச்சே சாமி. வளையல்காரன் நல்லா இருப்பானா! நான்தான் கண் தெரியாமே கொடுத்துட்டா, அந்தப் பாவியும் இதுதான் சாக்குனு ரூபாயைத் தூக்கிக்கிட்டுப் போயிட்டானே! ஐயோ கடவுளே! ஏழையைச் சோதிக்காதீங்க சாமீ!, என்று கண்ணீர் தளும்பத் தெய்வத்திடம் முறையிட்டுப் புலம்பிய போது, அவசர அவசரமாக ஓடி வந்தான் மாணிக்கம்.

மாணிக்கத்தைப் பார்த்ததும் தேம்பியபடி 'மாணிக்கம் தம்பி' என்று அழைத்தாள். நடந்ததை அவனிடம் கூறினாள். வளையல்காரனைத் திட்டினாள். மாணிக்கம், ''அழுவாதீங்க ஆயா. ஒரு நல்ல சமாச்சாரம் சொல்லத்தான் ஓடி வந்தேன். பிரபல நடிகர் சபேசன் ஏழைக் குழந்தைங்களுக்குப் பொங்கலுக்காக பாவாடை, சட்டை, திண்பண்டம் எல்லாம் தராராம். நீ ராஜாத்தியைக் கூட்டிக்கிட்டுப் போய் துணி வாங்கிக்கோ. சீக்கிரம் ஓடு. நம்ப பெரிய மைதானத்திலேதான் கொடுக்கிறாங்க.'' கிழவியை அவசரப் படுத்தினான் மாணிக்கம். கிழவி ராஜாத்தியை இழுத்துக் கொண்டு பெரிய மைதானத்தை நோக்கி விரைந்தாள்.

அதோ ராஜாத்தி கள்ளமில்லாச் சிரிப்புடன் நடிகர் சபேசன் கையால் துணிகளையும், அத்துடன் இனிப்பு பாக்கெட்டையும் பெற்றுக் கொண்டு கிழவியை நோக்கி மகிழ்ச்சியுடன் ஓடி வருகிறாள். கிழவிக்கு ஏற்பட்ட சந்தோஷத்திற்கு அளவே இல்லை.

இந்த ஏழைக் கிழவியின் குரலுக்கு இரங்கி பொங்கல் பரிசு கொடுத்து கிழவியை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திய அந்தக் கடவுள், பத்து ரூபாயுடன் ஓடிய வியாபாரியைச் சும்மா விடவில்லை.

அவசர அவசரமாக பஸ்ஸிலிருந்து இறங்கிய வளையல் வியாபாரி, வாழைப் பழத் தோல் சறுக்கிக் கீழே விழ, ''ஐயோ, பாவம்'' என்று சிலர் தூக்கி விட்டனர். உடைந்து விழுந்த வளையல்களை வைத்து நஷ்டக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தான் அவன். நஷ்டம் இருபது ரூபாய்! பாட்டியை ஏமாற்றியதற்குக் கடவுள் கொடுத்த பரிசு!

விளக்கெண்ணெய் விளக்கு...



1760—ஆம் ஆண்டில் சென்னையில் உள்ள வீடுகளில் விளக்கெண்ணெய் விளக்குகளே எரிந்து கொண்டிருந்தன. தெருக்களில் விளக்குகள் கிடையாது. பிறகு தேங்காய் எண்ணெய் விளக்குகள் ஏற்றப்பட்டன. 1908—ல் மண்ணெண்ணெய் விளக்குகள் எரிந்தன. நிலாக் காலம் வந்து விட்டால் இவற்றை அணைத்து விடுவார்களாம். 1914—ல் கியாஸ் விளக்குகள் உபயோகிக்க ஆரம்பித்தார்கள். 1941—ஆம் ஆண்டிலிருந்து மின்சார விளக்குகள் வீடுகளிலும் தெருக்களிலும் எரிய ஆரம்பித்தன. சென்னை நகர வரலாறு கூறும் தகவல்கள் தாம் இவை.

— ஆர்.எஸ். சுப்பிரமணியன்.

முதல் முதலாக தபால் தலை சேகரிக்கும் பழக்கம் 1841—ஆம் ஆண்டு ஏற்பட்டது. லண்டனைச் சேர்ந்த ஒரு பெண்மணி 1841—ஆம் ஆண்டு 'டைமஸ்' நாளிதழில் விளம்பரம் கொடுத்து, தபால் தலைகளைச் சேகரிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தினர். தபால் தலைகளை உலகில் அதிகம் சேகரித்தவர் இரண்டாம் எலிசபெத்.

— எஸ். ஜெயஸ்ரீ (1254),
திருச்சி—14


A
B
ஒரே கோட்டில் விநாயகர்
கோடு 'A'யில் ஆரம்பித்து
'B'யில் முடிவடைகிறது!



ஜெர்மன் கதை

வீரனின் தேசபக்தி

1

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதி. பிரெஞ்சு நாட்டு அதிபதி நெப்போலியன் வீறு கொண்டெழுந்து ஜெர்மனியை நாலாபுறமும் தாக்கி நாசப்படுத்திக் கொண்டிருந்த நேரம். எங்கு பார்த்தாலும் போர் வெறி; எங்கு பார்த்தாலும் குத்து, வெட்டு, இரத்தவெள்ளம். பிரெஞ்சுக்காரர்கள் ஜெர்மனியைப் படாதபாடு படுத்தினர். உலக சர்வாதிகாரியாக வேண்டுமென்ற பேராசை கொண்டான், நெப்போலியன். தன் வீரர்களையெல்லாம் வெறியர்களாக்கி விட்டான். அதன் விளைவாக அவர்கள் செய்த அட்டூழியங்கள் அளவுக்கு மிஞ்சிவிட்டன!

ஸ்டப்ஸ் (Stubbs) என்பவன் ஒரு ஜெர்மானியக் குடியானவன். தன் மானமும், நாட்டுப்பற்றும் நிறைந்த நல்ல மனிதன். அவனுக்கு நெப்போலியன் போக்குப் பிடிக்கவில்லை. தன் நாட்டின் மீது படை எடுத்து, நாட்டைக் காடாக்கி, மக்களைக் கொன்று மயானமாக்கும் வெறியன் நெப்போலியனை எப்படியும் கொன்று விட வேண்டுமென்று அவன் முடிவு செய்தான். உடனே, கூரிய வாளை எடுத்துக் கொண்டு போர்க்களம் நோக்கி ஓடினான்.

அப்போது அமாவாசை இருட்டு. எங்கும் ஒரே இருள். பகலில் போர்

தமிழில்:
கே. கண்ணுச்சாமி

நடந்ததற்கு அறிகுறியாகப் போர்க்களமெங்கும் பிணங்கள் குவிந்து கிடந்தன; முறிந்து போன, நொறுங்கிப் போன ஆயுதங்கள் கணக்கில்லாமல் கிடந்தன. இரத்தம் கட்டி கட்டியாக உறைந்து கிடந்தது. நரிகளும், ஓநாய்களும் ஊளையிட்டவாறு செத்த பிணங்களை ருசிபார்த்துக் கொண்டிருந்தன. நரி, ஓநாய் இவற்றின் ஊளைகளோடு ஆந்தைகளின் அலறலும் சேர்ந்து கொண்டது. அப்போது 'அந்தப் போர்க்களம் ஒரு பயங்கரப் பிரதேசமாகவே காட்சி அளித்தது.

அந்நேரம், அப்பிரதேசத்திற்குள் நுழைய எவனுமே அஞ்சுவான்! ஆனால், ஸ்டப்ஸ் அதன் வழியாகவே சென்று கொண்டிருந்தான், நெப்போலியனின் பாசறையை நோக்கி. ஆம், அவன், தன் உடலை வெறுத்து, உயிரை வெறுத்து, உலகை வெறுத்துச் சென்று கொண்டிருந்தான், தன் நாட்டை நாசப்படுத்திய நாசகாரன் நெப்போலியனைக் கொல்ல! போகும் போது போர்க்களத்தில் தலை வேறு, கைவேறு, கால் வேறாக மாண்டு கிடக்கும் தன் அருமைத் தாய் நாட்டு வீரர்களைப் பார்த்துப் பார்த்து அவன் கண்ணீர் விட்டான். அப்படியே நடந்து சென்றான்.


அதோ! நெப்போலியனின் பாசறை நெருங்கிவிட்டது! ஸ்டப்ஸ் பதுங்கிப் பதுங்கிச் சென்றான். கூடாரங்களைக் காவல் புரியும் பிரெஞ்சு வீரர்கள் க்ண்களில் படாமல் மறைந்து மறைந்து சென்றான். அதோ! பிரெஞ்சு மன்னன் — சர்வாதிகாரி நெப்போலியனின் கூடாரம்! விநோதமாக அலங்கரிக்கப்பட்டுவெகு அற்புதமாயிருந்தது அந்தக்கூடாரம். தன்னுள் பிரெஞ்சு சர்வாதிகாரி நெப்போலியன் துயில்கிறான் என்று பெருமைப்பட்டுக் கொண்டிருந்தது, அந்தக் கூடாரம்! அதன் வாயிலில் நின்ற காவலாளியோ அரைத் தூக்கத்திலிருந்தான்.

ஸ்டப்ஸ் மெதுவாகச் சந்தடியின்றிக் கூடாரத்திற்குள் நுழைந்தான். தன்னை மறந்து பஞ்சணையில் தூங்கும் நெப்போலியனைக் கண்டான். உடனே, கடுங்கோபத்துடன் அவனை வெட்டுவதற்காக வாளை ஓங்கினான்.

என்னே துரதிர்ஷ்டம்! இது வரை அரைத் தூக்கத்திலிருந்த காவலாளி திடீரென்றுவிழித்துவிட்டான்! அவன் விழித்தவுடனே ஸ்டப்ஸ் நெப்போலியனைக் கொல்ல முயலும் காட்சியைக் கண்டான்!

உடனே அவன், 'குபீர்' எனப் பாய்ந்து ஸ்டப்ஸைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்; கூச்சலிட்டான்! உடனே, நெப்போலியன் திடுக்கிட்டெழுந்தான். மற்ற கூடாரங்களிலிருந்த வீரர்களும் விரைந்தோடி வந்தனர்.

பிறகு? நெப்போலியனை — பிரெஞ்சு மன்னனை — சர்வாதிகாரியைக் கொலை செய்ய முயன்ற ஸ்டப்ஸ், பிரெஞ்சு நாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டுச் சிறையிலிடப்பட்டான்!




காலம் எனும் செடியில் வருடம் எனும் மலர்கள் இரண்டு பூத்தன. பாவம்! ஸ்டப்ஸ் இந்த இரண்டு வருட காலமாகப் பிரெஞ்சுச் சிறையில் கிடந்து வாடினான்; வதங்கினான்; வருந்தினான். பாவம்! அவன் ஆசை நிராசையாகி அவனும் சிறையில் சிக்க வேண்டியதாகிவிட்டது. அவன் சரியாகச் சாப்பிட்டு எத்தனையோ நாட்களாகின்றன; சரியாக உறங்கி எத்தனையோ நாட்களாகின்றன. அவனுக்கு எப்போதும் தன் அருமைத் தாய் நாடான ஜெர்மனியைப் பற்றியே நினைவு, கனவு.

அவன் இப்போதும் இரண்டு வருடங்களுக்கு முன்பு நெப்போலியனைக் கொலை செய்ய முயன்றபோது அணிந்திருந்தானே, அதே ஆடையைத்தான் அணிந்திருந்தான். அந்த ஆடை இப்போது கிழிந்து கந்தலாகி விட்டது. ஆம், ஸ்டப்ஸ் அந்த ஆடையை அணிந்து அரை நிர்வாணமாயிருந்தான்!

அன்று சிறைக் கைதிகளைப் பார்வையிட்டுக் கொண்டு வந்தார் ஒரு சிறை அதிகாரி. அவர் அரை நிர்வாணமாயிருக்கும் ஸ்டப்ஸைக் கண்டு இரக்கங் கொண்டார்; உடனே புதிய ஆடை ஒன்றைக் கொண்டு வந்து அவனிடம் கொடுத்தார்.

ஸ்டப்ஸ் அந்த ஆடைகளைக் கையிலே வாங்கினான். பைத்தியம் பிடித்தவன் போல் உற்று உற்றுப் பார்த்தான்; கூர்ந்து கூர்ந்து பார்த்தான்; புரட்டிப் புரட்டிப் பார்த்தான்.



பிறகு, அந்த அதிகாரியை நோக்கி, "ஐயா, இந்த ஆடை எங்கு நெய்யப் பட்டது?" என்று கேட்டான்.

"இந்த ஆடையா! சீரும் சிறப்பும் மிக்க நாடாகிய எங்கள் பிரான்சில் நெய்யப்பட்டது. உலகையே தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்துவிட வேண்டும் — தான் உலகாதிபதியாகி விட வேண்டும் என்ற ஆசையுடனும், விடாமுயற்சியுடனும் போர் புரியும் வீரர் நெப்போலியனை மன்னனாகக் கொண்ட இந்தப்பிரான்சில்தான் இது நெய்யப்பட்டது" என்று பெருமையாகக் கூறினார் அந்த அதிகாரி.

அவ்வளவுதான்! ஸ்டப்ஸ் அடைந்த கோபத்திற்கு அளவில்லை!

"ஆ! என் நாட்டை நாசப்படுத்திய நாசகாரர்கள் கையால் நெய்யப் பட்ட ஆடையா இது! என் நாட்டு மக்களைக் கொன்று குவித்த கொலைகாரர்களால் நெய்யப்பட்ட ஆடையா இது! இது எனக்கு வேண்டவே வேண்டாம்! நான் அணிந்திருக்கும் ஜெர்மன் நாட்டுத் துணி — கந்தல் கந்தலாயிருக்கும் இந்தத் துணி — முழுதும் பாழாகி நான் நிர்வாணமானாலும் சரி, இந்தப் பிரெஞ்சுப் பேயர்களால் நெய்யப் பட்ட ஆடையை அணியவே மாட்டேன்!" என்று வீரகர்ஜனை புரிந்தான், ஸ்டப்ஸ். உடனே, பிரெஞ்சு ஆடையை அந்த அதிகாரியிடமே வீசி எறிந்து விட்டான்!

அந்த அதிகாரி, ஸ்டப்ஸ் தம்முடைய நாட்டை அவமதிப்பதைக் கண்டார்; உடனே அளவில்லாத கோபம் கொண்டார். சென்றார் விரைவாக, மன்னன் நெப்போலியனிடம். சொன்னார், ஸ்டப்ஸ் பிரெஞ்சு நாட்டை அவ



மதித்த விஷயத்தை.

இது கேட்ட மன்னன் நெப்போலியன் சீறினன்; பற்களை நறநறவென்று கடித்தான்; கைகளைப் பிசைந்தான்; தரையில் ஓங்கி மிதித்தான்.

''ஆ! அந்த அற்ப ஜெர்மன் காரனுக்கு எவ்வளவு துணிச்சல்! என் பொன்னான நாட்டையா அவன் அவமதித்தான்? என்னுடைய நாட்டிலே நெய்யப்பட்ட நல்ல உயர்ந்த ஆடையையா அவமதித்தான்...? ஆ! அவனுக்கு அவ்வளவு திமிரா? இப்போதே அவன் திமிரை அடக்க வேண்டும். என் நாட்டை இகழ்ந்து பேசிய அவனை நாளைக் காலை தூக்கிலிட வேண்டியது! ஆம், என் கண்ணான, பொன் நாட்டைத்தூஷித்த அந்த அற்பனுக்குத் தூக்குத் தண்டனையே சரியான தண்டனை!'' என்று சிங்கம் போலக் கர்ஜித்தான்.

3

மறுநாள் காலை சூரியன் உதித்து விட்டான். அந்நேரம் தூக்கு மேடையில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான், அஞ்சாநெஞ்சன் — தாய்நாட்டுப்பற்றுநிறைந்தசுத்தவீரன் ஸ்டப்ஸ்.

தன் தலைக்கு உயரே தொங்கும் சுருக்குக் கயிற்றைக் கண்டான்; தூக்கு மேடைக்கு எதிரே வீற்றிருக்கும் மன்னனைக் கண்டான். அவனுடைய பரிவாரங்களைக் கண்டான். கண்டதும் ஒரு முறை ஏளனமாகச் சிரித்தான்!

இச்சமயம் 'டங் டங் டங்' என்று ஆலய மணி அலறிற்று. ஆம், ஸ்டப்ஸ் தூக்கில் தொங்க வேண்டிய நேரம் நெருங்கி விட்டதென்பதையே அந்த மணியோசை அறிவித்தது.

இச்சமயம், ''ஏய் கைதி, உன் கடைசி ஆசை என்ன? அறிவிப்பாயாக!'' என்று கம்பீரமாகக் கேட்டான், மன்னன்.

''என் கடைசி ஆசை இதுதான். தூக்குத் தண்டனை நிறைவேறிய பின் என் சவத்தை என்னுடைய தாய் நாட்டுத் துணியால் — ஜெர்மன் துணியால் போர்த்தி அடக்கம் செய்ய வேண்டும். இதுவே என் கடைசி ஆசை'' என்று கம்பீரமாகக் கூறினன், ஸ்டப்ஸ்.

பிறகு, அவன் முகம் கறுப்புத் துணியால் மூடப்பட்டது. அவன் கழுத்தில் சுருக்குக் கயிறு போடப்பட்டது.

'சர்ர்ரக்!' — கயிறு சுண்டியிழுக்கப்பட்டது. அந்தோ! வீரன் ஸ்டப்ஸ் பிணமாகத் தொங்கினன்.

அந்தக் காட்சியைக் கண்ட நெப்போலியனுக்கு அப்போதுதான் சுய உணர்வு வந்தது. ''ஆ! இவனுக்கு எவ்வளவு தேச பக்தி இருக்கிறது!'' என்று எண்ணிவியந்தான்.மாவீரன்—அஞ்சாநெஞ்சன் — நாட்டுப் பற்று நிறைந்த நல்லறிவாளன் ஸ்டப்ஸை நினைத்து நினைத்துக் கண்ணீர் விட்டான். பின், ஸ்டப்ஸின் விருப்பப்படியே அவன் சவத்தை ஜெர்மன் துணியில் சுற்றி அடக்கம் செய்யுமாறு கட்டளையிட்டான். சவ அடக்கமும் அவ்வாறே நடந்தது.

○ கவிதை பிறந்த கதை:



ஆமை பிடித்த கதை

முரசு நெடுமாறன்


மலேசியக் கவிஞர் திரு முரசு நெடுமாறன் அவர்கள், தம் கவிதை ஒன்று எப்படிப் பிறந்தது என்பதைச் சுவைபட விளக்குகிறார்:

நான் குழந்தைகளோடு அதிகம் பழகுபவன். மாலை வேளையில் உலாச் செல்லும்போது அவர்களை உடன் அழைத்துச் செல்வது எனக்கு மிகவும் பிடிக்கும். என்னுடன் அடிக்கடி உலா வருபவள் எங்கள் வீட்டுக் குழந்தை மாதவி. நான் உலாவப் புறப்படுவதை அறிந்ததும், எனக்கு முன் ஓடி வழி காட்டிபோல் முன்னால் நடப்பாள்.

அவள் காட்டும் வழியில் செல்லாமல், வேறு வழியில் செல்ல அழைத்தால் அழுது அடம் பிடிப்பாள். அவள் பின்னாலேயே நடந்து சென்றால், திரும்பும்போது கடைத் தெரு வழியாகத்தான் திரும்பியாக வேண்டும்!

கடைத் தெருவுக்கு வந்ததும், ஒன்றும் தெரியாதவள் போல் அமைதியாக நடப்பாள். எனக்கு மனம் கேட்காது. கடைக்கு அழைத்துச் சென்று ஏதாவது வாங்கித் தரவேண்டுமென்று நினைப்பேன். 'சரி, வா மாதவி, கடைக்குப் போகலாம்!' என்று அழைத்ததும் துள்ளிக் குதிப்பாள்... அவளின் திட்டம் வெற்றி பெற்று விட்டதல்லவா?

கடைக்குச் சென்றதும், என்ன வேண்டும் என்று கேட்கவே தேவையில்லை. 'எனக்கு மிட்டாய் வேண்டும்!' என்று கடையைக் காட்டுவாள். அதை வாங்கிக் கொடுத்ததும், கடையி





லுள்ள மற்ற பொருள்களையும் வாங்கித் தரும்படி அடம் பிடிப்பாள். அவளைச் சமாதானப்படுத்தி அழைத்து வருவதற்குள் போதும் போதுமென்றாகிவிடும்!''

மேற்கண்ட இந்த நிகழ்ச்சி, கவிஞர் மனத்தில் அலைமோதியது. அதுவே அழகிய கவிதையாக உருவெடுத்தது. அந்தக் கவிதை இதுதான் —

கடைக்கு வாராய் என்றாலே
கையை வீசி வரும்பாப்பா!

என்ன வேண்டும் என்றாலே,
இனிப்பைக் காட்டிச் சிரித்திடுமே!

இனிப்பை வாங்கித் தந்தவுடன்,
இன்னொரு பொருளைக் கேட்டிடுமே!

வாங்கித் தரவே மறுத்தாலோ,
வம்பு செய்தே அழுதிடுமே!

இந்தப் பாடல், மலேசிய வானொலியில் ஒலிபரப்பானபோது, ஏராளமான குழந்தைகள் கேட்டு மகிழ்ந்து கடிதம் எழுதினார்களாம்.

கவிஞர், பள்ளிக்குச் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார். தென்னந்தோப்பினிடையே செம்மண் சாலையில் வண்டி ஓடிக் கொண்டிருந்தது. அந்தச் சாலைக்கு அருகில் சிறிய வடிகால் ஒன்றிருந்தது. அந்த வடிகாலில் ஒரு சிறிய ஆமை படுத்திருப்பது போல் இருந்தது. அதைக் கண்டதும், கவிஞர் சைக்கிளிலிருந்து இறங்கினார்.

அந்த ஆமையை எடுத்துச் சென்று, பள்ளிக்கூடக் குளத்தில் விட்டால், மாணவர்கள் பார்த்து மகிழ்வார்கள் என்று எண்ணி, ஆர்வத்தோடு அருகில் சென்று அதைத் தூக்கினார்... கவிஞருக்கே சிரிப்பு வந்துவிட்டது. ஆம், அது ஆமை அல்ல, தென்னம் மட்டை!

ஒரு தேங்காயின் பாதிப் பகுதி மட்டை, கவிழ்ந்த நிலையில் அங்கே கிடந்ததால், அது ஆமையைப் போல் தோன்றியது!

கவிஞர் பள்ளி சென்றதும் மாணவர்களிடம், தாம் 'ஆமை பிடித்த கதை'யைச் சொன்னாராம். அதைக் கேட்ட மாணவர்கள் விழுந்து விழுந்து சிரித்தார்களாம்.

''வடிகால் ஓரம் செல்லுகையில்
வளைந்த முதுகுடை ஆமையொன்று
மடங்கிக் கைகால் உள்ளிழுத்து
மகிழ்வாய்ப் படுத்துக் கிடந்ததுவே!''

— என்று கவிஞரின் 'ஆமை கண்ட காட்சி' கவிதையாய் மலர்ந்து, கதையாய் நீண்டு;

''உரித்த தென்னை மட்டையொன்று
உண்மையில் ஆமை போலங்கே
விறைத்துக் கிடந்தது சேற்றினிலே,
விழுந்து விழுந்து சிரித்தோமே!''

என்று நகைச்சுவையுடன் முடிக்கிறார்.

பேட்டி: பி. வி. கிரி.

காலதேவனின் கணக்கு

இ.ஜெ.தீன்

காட்டை நோக்கிச் செல்லும் ஒற்றையடிப் பாதையில் அவர்கள் இருவரும் நடந்து கொண்டிருந்தார்கள்.

திட்டமிட்டதைப் பெற்றுவிட வேண்டும் என்ற ஆவேசம் அவர்கள் இருவர் நடையிலும் வேகத்தை அதிகரித்தது.

இரவின் நிசப்தத்தில் எங்கோ ஊளையிடுகின்ற நரிகளின் பயங்கரக் குரல் இடையிடையே எழுந்து அச்சத்தைக் கிளறியது. மரங்களுக்கும், செடிகளுக்குமிடையே கரடு முரடான அந்தப் பாதையில் இருவரும் வேக வேகமாக நடந்தார்கள்.

சாதாரண மனிதர்கள் அந்தக் காட்டுக்குள் பகலில் செல்லவும் அஞ்சுவார்கள். ஆனால், இவர்கள் இருவருக்கும் இரவில் செல்லுவதே தண்ணீர் பட்டபாடு! இதைவிடப் பயங்கரமான எத்தனையோ காடுகளில் பல நாட்கள் பதுங்கி இருந்து பழக்கப்பட்டவர்களாயிற்றே அவர்கள்!

அவர்கள் இரண்டுபேரும் இரண்டு வகையில் கெட்டிக்காரர்கள்.

மனித உயிர்களைக் கிள்ளுக்கீரை போல் கிள்ளி எறிவதில் சடையன் கெட்டிக்காரன்.

எந்த இடத்திற்கு எந்த நேரத்தில் போனால் சுலபமாகக் கொள்ளையடிக்க முடியும் என்று திட்டந்தீட்டுவதில் முனியன் கெட்டிக்காரன்.

முன்னவனிடத்தில் உடல் பலமிருந்தது. பின்னவனிடத்தில் அறிவு பலமிருந்தது. இரண்டு பலமும் சேர்ந்து இழைத்த கொடுமைகள் கணக்கில் அடங்காதது.

இவர்கள் பெயரைக் கேட்டாலே அந்த வட்டாரத்து ஜனங்களுக்கு சிம்ம சொப்பனம்தான்!

இன்று அவர்கள் திட்டமிட்டுச் செல்லும் வேட்டை இத்தனை காலம் அவர்கள் ஆடிய வேட்டைக்கெல்லாம் மிகப் பெரியது. இதில் மட்டும் அவர்கள் வெற்றி பெற்றுவிட்டால் அவர்கள் நிலையே மாறிவிடும். அந்தப் பேராசையில்தான் அச்சம் தருகின்ற அந்தக் காட்டைத் துச்சமாக மதித்து நடந்து கொண்டிருக்கிறார்கள்.

காட்டைக் கடந்துவிட்டார்கள்.

அதோ நெடுஞ்சாலை தெரிகிறது!

ஊரெல்லாம் உறங்குகின்ற நடுநிசி. ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியாத மையிருட்டு. இருவரும் தங்கள் இடுப்பில் இருந்த பிச்சுவாக்கத்தியைத் தொட்டுப் பார்த்துக் கொண்டார்கள்.

அவர்கள் தேடிவந்த கட்டடம் அதோ தெரிகிறது!

சுற்றியிருக்கும் மையிருட்டில், அந்தக் கட்டடத்தில் எரிகின்ற ஒரு சிறு விளக்கைக் குறிவைத்து இருவரும் நடந்தார்கள்.

ஊருக்கு ஒதுக்குப்புறமான அந்த இடத்தில் இப்படித் தன்னந்தனியாக ஒரு கட்டடம் இருப்பதன் மர்மம் என்ன?

வெளிநாடுகளிலிருந்து தங்கம் கடத்தும் ஒரு கடத்தல் கூட்டத்தின் கூடாரம்தான் அது. இந்த முறை அவர்கள் கடத்தி வந்திருக்கும் தங்கத்தை அபகரிக்கத்தான் சடையனும், முனியனும் அந்தக் கட்டடத்தை நோக்கி நடந்து கொண்டிருக்கிறார்கள்.

முனியனுக்குக் கிடைத்த தகவலின்படி இப்போது அந்தக் கட்டடத்தில் பல லட்சம் ரூபாய் பெறுமான முன்ன தங்கம் இருக்கிறது. அது இன்று இரவு மட்டும்தான் அந்தக் கட்டடத்

தில் இருக்கும். பிற்பாடு அது வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுவிடும். இத்தனை ரகசியங்களும் தெரிந்திருந்ததால் தான் இன்று இரவுக்குள் அபகரிக்கத் திட்டமிட்டான் முனியன்.

கட்டடத்தை நெருங்கி விட்டார்கள் —

முனியன், சடையனுக்கு ஏதோ சைகை காட்டிவிட்டு முன்னால் நடந்தான்.

கட்டடத்தின் வாசலில் இரண்டு காவலாளிகள் அரைத் தூக்கத்தில் உட்கார்ந்து இருந்தார்கள்.

முனியன் ஒரு கல்லை எடுத்து, கட்டடத்தின் மேல் வீசிவிட்டு, மறைந்து கொண்டான்.

கல் விழும் சத்தம் கேட்டு காவலாளிகளில் ஒருவன் என்ன என்று பார்க்க எழுந்து வந்தான். மறைந்து நின்ற முனியன் தன் கையிலிருந்த கோணியால் அவன் முகத்தை மூடி, நன்றாகக் கட்டிப் போட்டுவிட்டான்.

பிறகு, முனியன் கதவருகே வந்தான் —

தூங்கி விழுந்து கொண்டிருந்த மற்றொரு காவலாளி முனியனைக் கண்டதும், தன் கைத்துப்பாக்கியை நீட்டியபடி, "யார் நீ?" என்று மிரட்டினான். அதே நேரத்தில் அவனுக்குப் பின்னால் வந்து நின்ற சடையன், காவலாளியின் துப்பாக்கியைத் தட்டி விட்டு, அவனை மடக்கினான். முனியனும், சடையனும் சேர்ந்து அவனையும் நன்றாகக் கட்டிப் போட்டு விட்டுக் கட்டடத்தின் உள்ளே நுழைந்தார்கள். அவர்களுக்கு அதற்குமேல் எதிர்ப்பொன்றுமில்லை. அவர்கள் வந்த காரியம் சுலபமாகவே வெற்றி பெற்று விட்டது.

ஒரு பெட்டி நிறைய அடுக்கி வைக்கப்பட்டிருந்த தங்கக் கட்டிகளைப் பார்த்து இருவரும் ஆனந்தக் கூத்தாடினார்கள்.

பின்பு, அந்தத் தங்கக் கட்டிகளை, இரண்டு மூட்டைகளாகக் கட்டி, ஆளுக்கொரு மூட்டையைத் தூக்கிக் கொண்டு வெளியில் வந்தார்கள்.

வெளியில் வந்த அவர்கள் தாங்கள் கட்டிப்போட்ட காவலாளிகளைப் பார்த்துச் சிரித்துவிட்டு, காட்டை நோக்கி நடந்தார்கள்.

மூட்டையில் இருப்பது தங்கமேயா



பாடம் நல்ல பாடம்



சுறுசுறுப்பாய் வாழ்வோர்க்கு
எறும்பு பாடம்

சோம்பேறி மனிதருக்கு
எருமை பாடம்

இனம் காக்கும் மனிதருக்குக்
காக்கை பாடம்

இனம் அழிக்கும் மனிதருக்கு
மீன்கள் பாடம்

நன்றியுள்ள பேர்களுக்கு
நாய்கள் பாடம்

நன்றியில்லா மனிதருக்கு
நாகம் பாடம்

சேகரிக்கும் மனிதருக்குத்
தேனீ பாடம்

சேமிக்கும் மனிதருக்கும்
அதுவே பாடம்.



-சிறுவயல் செயமணி

னாலும், அதன் சுமை அதிகமாக இருந்ததால், இருவர் நடையிலும் சோர்வை உண்டாக்கியது. பல்லைக் கடித்துக் கொண்டு பாதிக்காட்டைக் கடந்து விட்டார்கள். அதற்கு மேல் தூக்கிச் சுமக்க இருவருக்குமே இயலவில்லை. இரண்டு பேருமே மூட்டைகளை இறக்கிக் கீழே வைத்துவிட்டு, ஒரு மரத்தடியில் உட்கார்ந்து விட்டார்கள். பசியும், சோர்வும் அவர்களை அசர வைத்துவிட்டன.

''முனியா, விடிகின்ற நேரமாச்சு. எனக்குப் பசியும் அதிகமா இருக்கு. இப்ப என்ன செய்யலாம்?'' என்றான் சடையன்.

''சரி, இப்படிச் செய்யலாம். நீ மூட்டைகளை வைத்துக் கொண்டு அதோ அந்தப் புதருக்குப் பின்னால் இரு. நான் போய்ச் சாப்பிடறதுக்கு ஏதாச்சும் வாங்கியாறேன். பகல் பொழுதை இங்கயே கழித்துவிட்டு, இருட்டினதும் இங்கிருந்து வெளியேறுவோம்...''

''ஆமாம். அதுதான் சரி. நாம் இப்போதே மூட்டைகளோடு வெளியேறினால், யார் கண்ணிலாவது பட்டுவிடுவோம், நீ போய்ச் சாப்பிடறத்துக்கு ஏதாச்சம் வாங்கிட்டு சீக்கிரமா வந்துடு...'' என்று முனியனை அனுப்பினான் சடையன்.

முனியன் காட்டைக் கடந்து நெடுஞ் சாலைக்கு வரும் போது நன்றாகப் பொழுது விடிந்து விட்டது.

கடை வீதியை நோக்கி நடந்து கொண்டிருந்த அவன் மனத்தில் ஒரு விபரீதமான பேராசை தலைதூக்கியது. அந்தப் பேராசைக்கு அவன் அறிவு சூழ்ச்சிவலை பின்னிக் கொண்டிருந்தது.

கடை வீதியை அடைந்த முனியன் ஓட்டலுக்குள் புகுந்து வயிறுபுடைக்கத் தின்றான். தின்று முடித்ததும், ஒரு பெரிய உணவுப் பொட்டலத்தைக் கட்டி வாங்கிக் கொண்டு, வெளியில் வந்தவன், ஒரு மருந்துக்கடையை நோக்கி நடந்தான். அங்கே ஒரு சிறு பொட்டலத்தை வாங்கிக் கொண்டு காட்டை நோக்கி நடந்தான்.

ஆட்டிப் படைக்கும் பேராசையோடு காட்டில் நடந்து கொண்டிருந்த முனியன், ஒரு மரத்தடியில் உட்கார்ந்து, உணவுப் பொட்டலத்தைப் பிரித்து, அவன் மருந்துக்கடையில் வாங்கிய சிறு பொட்டலத்தை அதனோடு கலந்து கிளறினான்.

அவன் ஆசை அதிக சிரமமில்லாது நிறைவேறப் போவதில் அவனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி, அவனை வேக வேகமாக நடக்க வைத்தது.

அதே நேரத்தில் —

நடுக்காட்டில் தங்க மூட்டைகளோடு உட்கார்ந்திருந்த சடையனின் மனத்தையும் பேராசை அரித்துக் கொண்டிருந்தது. தன் முரட்டு மீசையை முறுக்கி விட்டுக் கொண்டு, தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்த அவன் ஒரு முடிவெடுத்து விட்டான். தன் இடுப்பில் இருந்த பிச்சுவாக் கத்தியைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

'ஆம், அதுதான் சரி, எல்லாத் தங்கமும் எனக்கே சொந்தம். ஹா! ஹா! இத்தனைக்கும் நானே அதிபதி!' தன் மனத்துக்குள் எண்ணிக் கொண்டான் சடையன்.

சடையன் இருந்த இடத்தை நெருங்கி விட்டான் முனியன் —

சடையனும் எழுந்து தயாராக நின்றான்.

சடையனுக்கு உணவுப் பொட்டலத்தைத் தர அவனுக்கு அருகில் வந்தான் முனியன். அவன் கையிலிருந்த உணவுப் பொட்டலம் சடையனின் கைக்கு மாறியது. அதே நேரத்தில் சடையன் தன் கையில் மறைத்து வைத்திருந்த பிச்சுவாக்கத்தி முனியனின் வயிற்றில் பாய்ந்தது. இதைச் சற்றும் எதிர்பாராத முனியன் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தான்.

சடையன் அட்டகாசமாகச் சிரித்தான்! 'ஹா அத்தனையும் எனக்கே சொந்தம்! இதில் பங்கு கேட்க ஆள் கிடையாது. நான் இனி ராஜா மாதிரி வாழ்வேன்!' என்று ஆனந்தக் கூத்தாடிய சடையன்,

உணவுப் பொட்டலத்தைப் பிரித்து அவசர, அவசரமாகத் தின்றான். சில நொடிகளில் அவன் கையையும், காலையும் உதைத்துக் கொண்டான். 'விஷம்' கலந்த உணவு அவன் உயிரையும் குடித்துவிட்டது!

இவன் அவனை ஒழிக்க நினைத்தான்; அவன் இவனை ஒழிக்க நினைத்தான். முடிவில் இருவரையும் ஒழித்து விட்ட தங்கத்தைப் பார்த்துக் காலதேவன் சிரித்துக் கொண்டிருந்தான்.





முத்துவின் கேமிரா

அ.சுப்பையன்

முத்து, குமார் இருவரும் இணை பிரியாத நண்பர்கள்! பள்ளிக்கூட நாட்கள் மட்டுமன்றி, மற்ற விடுமுறை நாட்களிலும் கூட அவர்கள் இருவரையும் சேர்த்தேதான் பார்க்க முடியும்!

குமார் புகைப்படக் கருவி வைத்திருந்தான்! எங்கு சென்றாலும் கூடவே எடுத்துச் செல்வான்! தனக்குப் பிடித்த காட்சிகளையெல்லாம் படம் பிடித்துக் கொள்வான்!

முத்துவிற்கும் புகைப்படக் கருவி மேல் ஆசை வந்து விட்டது! தனக்கும் ஒன்று வேண்டுமென்று அப்பாவிடம் கூறினான். 'கொஞ்ச நாள் போகட்டும், வாங்கித் தருகிறேன்! இப்பொழுது நன்றாய்ப் படி!' என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்! ஆனால், அவன் ஆசை தணியவில்லை! முத்துவின் ஆசையைக் கண்டு அவர், "முத்து, துபாய் மாமாவுக்கு வேண்டுமானால் ஒரு கடிதம் போடு! விடுமுறையில் வரும் போது வாங்கி வரட்டும்! என்னால் இப்பொழுது வாங்கித் தர இயலாது!" என்று சொல்லி விட்டார்!

சரியென்று முத்துவும் துபாய் மாமாவுக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டான்!


என்ன ஆச்சரியம்! எண்ணிப் பத்தே நாள்தான்! திடுமென வந்து இறங்கி விட்டார் துபாய் மாமா! திடீரென விடுமுறை கிடைத்ததாயும், அதனால் கடிதம் கூடப் போட முடியவில்லையென்றும் கூறினார்! கூடவே மறக்காமல் முத்துவிற்கு ஒரு சின்ன, அழகான புகைப்படக் கருவி ஒன்றும் வாங்கி வந்திருந்தார்!

முத்துவிற்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை! ஒரே குதிதான்! கும்மாளம்தான்! மாமாவைக் கட்டிப் பிடித்தான்! முத்தம் கொடுத்தான்! விழுந்து விழுந்து உபசரித்தான்!

புகைப்படக் கருவியை வாங்கி அதற்கும் முத்தம் கொடுத்தான்! தோளில் மாட்டிப் பார்த்துக் கொண்டான்! ஏற்கெனவே அனுபவம் உள்ளதால் ஒரே நாளில் எல்லாம் கற்றுக் கொண்டான்!

அன்று இரவே அவன் மாமா ஊருக்குக் கிளம்பி விட்டார். வழியனுப்புவதற்கு அவன் பெற்றோர்களோடு அவனும் பேருந்து நிலையத்திற்குச் சென்றிருந்தான். அன்று அங்கு நல்ல கூட்டம்.

திடீரென்று மின் விளக்குகள் எல்லாம் அணைந்து விட்டன. எங்கும் ஒரே இருள். ஐந்து நிமிடம் கூட ஆகியிருக்காது. கூட்டத்தில் குய்யோ



தாய்: அடையாறு தாத்தா வீட்டிலேபோயி என்ன டிபன் சாப்பிட்டு வந்தே?

மகன்: அடை ஆறு!

— சீர்காழி சாமா.



முய்யோ என்று ஒரே கூச்சல்; குழப்பம். எவனோ இருட்டில் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடிவிட்டானாம்.

சிறிது நேரத்தில் விளக்குகள் மீண்டும் எரியவும் காவலர்கள் ஓடி வந்தனர்; விசாரித்தனர். ஆனால், யாராலும் திருடனை அடையாளம் சொல்ல முடியவில்லை. பறிகொடுத்த பாட்டியோ பரிதாபமாக அழுதார்கள். 'பத்துப் பவுன் சங்கிலி போச்சே!' பரிதவித்தார்கள்.

முத்து, தன் தோளில் மாட்டிய புகைப்படக் கருவியோடு காவலர்களை நோக்கி ஓடி வந்தான்.

"ஐயா, நான் அந்தத் திருடனைப் புகைப்படம் எடுத்துள்ளேன். கழுவிப் பார்த்தால் தெரியும்" என்றான்.

காவலர்கள் ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தார்கள்.

துபாய் மாமா, "நீ எப்படி அவனைப் படம் பிடிச்சே?" என்று கேட்டார்.

கூட்டத்திலே அவன் பொம்பளைங்க பக்கம் திரிஞ்சதும், முழிச்ச முழியும் எனக்குச் சந்தேகத்தை உண்டாக்கிடுச்சு. அப்பவே நான் அவனை யாருக்கும் தெரியாம 'கிளிக்' பண்ணிட்டேன்."

"இந்தப் பாட்டி கிட்டே திருடினது அவன்தான்னு எப்படிடா உறுதியாச் சொல்றே?" — அவன் அப்பா கேட்டார்.

"விளக்குகள் எல்லாம் அணையற சமயம் அவன் அந்தப் பாட்டி பக்கத்திலேயேதான் நின்னுக்கிட்டிருந்தான்."


படச் சுருளைக் கழுவிப் பார்த்ததில் ஏற்கெனவே அவன் ஒரு கேடி என்பது தெரிய வந்தது. பிடித்து விசாரித்ததில் உண்மையை ஒப்புக் கொண்டு சங்கிலியையும் கொடுத்து விட்டான்.

"ஏங்க, இப்ப பார்த்தீங்களா? ஒரு புகைப்படக் கருவியை வாங்கிக் கொடுக்க யோசிச்சீங்க! பத்துப் பவுன் சங்கிலியையல்லவா இப்ப மீட்டுக் கொடுத்திருக்கான்." — அம்மா பூரித்துப் போனாள்.

"ஆமாம்மா. உங்க மகன் முத்து ரொம்பக் கெட்டிக்காரன்தாம்மா! இந்த வருடம் ஜனாதிபதி பரிசுக்கு முத்துவைத்தான் சிபாரிசு செஞ்சிருக்கோம்!" என்றார்கள் காவலர்கள்.





ஒரு சமயம் குபேரன் சிவபெருமானை வணங்கி...
தமிழ் நாட்டில் பல திவ்யத் தலங்கள் உள்ளனவாம்; அவற்றைத் தரிசிக்க அனுமதி தரவேண்டும்!
குபேரன் பெற்ற செல்வம்!
கதை: ஆனந்தி
படம்: வினு
அப்போது விநாயகர், முருகன்....
அப்பா நானும் குபேரனுடன் போய் வருகிறேனே.
...நானும் போவேன். ..காவிரியில் குதித்து விளையாடுவேன்...
சரியாப் போச்சு... தேவி! அப்போ நாமும் கிளம்ப வேண்டியது தான்!
நந்தியோடு சிவகணங்களும் புறப்பட்டு விட்டன.
ஹர, ஹர!
சிவ, சிவ!
பல தலங்களுக்குச் சென்றனர். யாரும் அவர்களைக் காண முடியவில்லை. திருவாலங்காட்டில் மட்டும்....
காரைக்கால் அம்மையே! உமக்குத் தரிசனம் தர வந்தோம்.....


சோழநாட்டின் தலைநகர் காவிரிப்பூம் பட்டினத்தை அடைந்தனர்... குபேரன் வியந்தான்.
எத்தனை அற்புதமான நகரம்!
குபேரா! நீ இந்த நகரில் வசிக்க விரும்புகிறாய்! சரி, இங்கே தனவணிகனாகப் பிறந்து சில காலம் வாழ்வாயாக!
குபேரன் வணங்கி...
சுவாமி! என்னை இங்கே விட்டுச் செல்வது போல் என் ஆயுட்காலம் முடிந்ததும் திரும்ப அழைத்துப் போகவும் தாங்களே வரவேண்டும்!
அப்படியே ஆகட்டும்!
காவிரிப் பூம்பட்டினத்தில் சிவநேசச் செட்டியாரின் மகனாகப் பிறந்தான் குபேரன்.
நயமுள்ள நன்மணியே! நான் பெற்ற நவமணியே!
திருவெண்காடு ஈசன் அருளால் பிறந்தான். சுவேதாரண்யன் என்று பெயர் சூட்டுவோம்.



ஐந்து வயதில் தந்தையை இழந்த சுவேதாரண்யன் மனம் பக்தி மார்க்கத்தில் திரும்பியது...
ஈசன் அருளைப் பெறுவதே பிறவிப் பயன்...
தினம் கோவிலுக்குச் சென்றான்.
களையான முகம்... ஞான சம்பந்தன் மாதிரி இருக்கிறானே!...
படிப்பிலும் சுட்டி!
கோவிலில் ஓதுவார் பாடக் கேட்டுப் பரவசமடைந்தான்...
கண்காட்டும் நுதலானும் கனல்காட்டும் கையானும் .... வெண்காட்டில் உறைவானும் மெய்காட்டி அருள்வானே...
வீடு திரும்பி...
அம்மா! வெண்காட்டில் உறைபவன் எனக்கு எப்போது அருள் புரிவான்?
கடவுளை நம்பினோரை அவர் ஒரு நாளும் கைவிட மாட்டார்.
அன்றிரவு சுவேதாரண்யன் கனவில்....
நாளைய தினம் சூரியோதயத்துக்கு முன் கோவிலுக்கு வா....



விடியும் முன் தாயாரை எழுப்பி...
அம்மா! என்னை ஒரு வேதியர் கோவிலுக்கு வரச் சொல்லியிருக்கிறார்... இப்போதே போகிறேன்...
குளித்து விட்டுக் கிளம்பு...
பூப்பறித்து வைத்திருந்தாள் தாய்...
இந்தா... சீக்கிரம் திரும்பி விடு!
கோவிலில், கனவில் கண்ட வேதியர் மண்டபத்தில் காத்திருந்தார்.....!
குழந்தாய்! உனக்கு ஐந்தெழுத்து மந்திரம் உபதேசிக்கிறேன், வா!
பெரியவர் பாதங்களை அலம்பி, மலர்களால் அர்ச்சித்தான் சுவேதாரண்யன்.
மெய்ஞானியாக விளங்குவாய்...
வேதியர் உபதேசம் செய்தார்...
ஓம், நமசிவாய...
ஓம், நமசிவாய....



வேதியர் ஒரு சிறு பெட்டியை அளித்தார்...
குழந்தாய்! இதை வைத்துக் கொள்!
சுவேதா ரண்யன் பெட்டியைத் திறந்தபோது....
அட! மரகத விநாயகர்! ஸ்படிக லிங்கம்!
வேதியர் மறைந்தார்...
குருவைக் காணோமே!... சிவனே தான் வேதியர் உருவில் என்முன் தோன்றி யிருக்க வேண்டும்!
வீடு திரும்பிய சுவேதாரண்யன்...
கண்டேன், அவர்திருப்பாதம்; கண்டறியாதன கண்டேன்!
ஒரே பரவசமாய் இருக்கிறாயே! அப்படி என்ன கண்டாய்!
தாயிடம் நடந்ததைக் கூறிய மகன்...
அம்மா! இன்று முதல் சிவ பூஜை செய்து அடியார்க்கு அன்ன மிட வேண்டும்!
பல ஆண்டு காலம் சுவேதா ரண்யனும் அவன் தாயும் சிவ பூஜை செய்து அன்ன தானம் பண்ணி வந்தார்கள்...



ஒரு நாள்...
நாளைக்குப் பூஜைப் பொருள்கள் வாங்கவோ அன்னமிடவோ காசில்லையே...
கோயிலுக்குப் போவோம். ஈசன் வழி காட்டுவார்!
கோயிலில் நீண்ட நேரம் பிரார்த்தித்த பிறகு....
...இரவு தீர்த்தக் கரை மண்டபத்தில் உறங்க.... கனவில்...
வீட்டுக்குப் போ! வேண்டிய நிதி இருக்கிறது!
இருவரும் வீடு திரும்ப...
என்ன அதிசயம்!
நினையின் மனனே! நினையின் மனனே! சிவபெருமானைச் செம்பொனம்பலவனை நினையின் மனனே! நினையின் மனனே!




சுவேதாரண்யன் இளம் காளையாக வளர்ந்தான். ஒரு நாள் சிவ சிதம்பர செட்டியார் வந்து...
சுவேதாரண்யன் போன்ற சிவபக்தனுக்கே என் மகள் சிவகலையை மணமுடித்துக் கொடுக்க விரும்புகிறேன்...
திருமணம் விமரிசையாக நடைபெற்றது...
சுவேதாரண்யன் வாணிபம் கொழித்தது... தொட்டதெல்லாம் பொன்னாயிற்று...
எல்லாம் சிவகலை இந்த வீட்டுக்கு வந்த வேளை...
சுவேதாரண்யனை எல்லோரும் பட்டினத்துச் செட்டியார் என்று மரியாதையுடன் அழைத்தனர்... இவ்வளவிருந்தும்....
ஏன் வாட்டமாயிருக்கிறீர்கள்?
நமக்கு எந்தக் குறையும் வைக்காத இறைவன், ஒரு பிள்ளையை மட்டும் தரவில்லையே...
திருவிடை மருதூர் மகாலிங்கரை வேண்டி நோன்பிருப்போம். குறை தீரும்!


திருவிடை மருதூரில் சிவசருமன் என்பவர் தினமும் கோவிலில் பூஜை செய்துவிட்டு நைவேத்தியத்துடன் வீடு திரும்புவார்... ஒரு நாள்...
ஐயா! ரொம்பப்பசியாக இருக்கிறது...
குளக்கரையில் கிழவருக்கு உணவளித்தார் சிவசருமன்...
இன்னும் போடுங்க.... இன்னும்...
கிழவர் விடை பெற்றார்...
நன்றாக இரும்! வயிறார உணவளித்தீர்!
நைவேத்தியம் முழுவதையும் சாப்பிட்டுவிட்டாரே!
பசியோடு வீட்டில் காத்திருக்கும் அடியார்களுக்கும் குழந்தைகளுக்கும் என்ன பதில் சொல்வது? வீட்டில் வேறு உணவு கிடையாதே...
வீட்டில் ஆச்சர்யம் காத்திருந்தது. மனைவி சுசீலை..
நைவேத்தியப் பண்டங்களைக் கொண்டுவந்து வைத்துவிட்டு எங்கே போனீர்? சிவனடியார்கள் காத்திருக்கிறார்களே!


சிவசருமர் வியந்து....
சுசீலை! இது இறைவன் திருவிளையாடலே... நான் கொண்டு வந்த அமுது முழுவதையும் வழியில் ஒரு வயோதிகர் சாப்பிட்டு விட்டார்.... அவர் மனிதரல்ல, தெய்வமே!
அன்றிரவு...
அற்புதங்கள் நிகழ்த்தும் உங்கள் ஈசன், நம் தரித்திரம் நீங்க உதவக் கூடாதா?
நமக்கு என்ன தர வேண்டும் என்பது அவருக்குத் தெரியும்! நாம் கேட்கக் கூடாது!
சிவசருமர் கனவில்...
வில்வ மரத்தடியில் உள்ள குழந்தையைக் காவிரிப் பூம்பட்டினத்தில் சுவேதாரண்யரிடம் தந்து, எடைக்கு எடை பொன் பெறுக!
சிவசருமரும் சுசீலையும் காருண்யாமிர்த தீர்த்தத்தில் நீராடி எழுந்து...
என்ன அழகான குழந்தை!
நம் வீட்டுக்கே கொண்டு செல்வோம்!




ஆனால் சிவசருமர் எண்ணம் ஈடேறவில்லை...
என்ன அதிசயம்! எவ்வளவு நடந்தும் வீடு வரவில்லையே!
வெகுநேரம் சென்று....
அதோ, அது என்ன ஊர் ஐயா?
தெரியாது? காவிரிப்பூம்பட்டினம்!
எதிரே பல்லக்கு பரிவாரங்கள் வர...
குழந்தையைப் பிரிய மனமின்றி வீடு திரும்ப எண்ணினோமே, என்ன நடந்தது, பார்த்தாயா?
அற்புதம்தான்!
பல்லக்கு இவர்களை நெருங்கியதும்...
சுவாமி! திருவிடை மருதூரிலிருந்து வருகிறீர்களா?
ஆம், நீங்கள் சுவேதாரண்யரா?
ஆனால் சுவேதாரண்யர்...
நீங்கள் வருவீர்கள் என்று என் கனவிலும் ஈசன் வந்து சொன்னார்....
குழந்தையைப் பெற்றுக் கொள்ளுங்கள்; பொன் வேண்டாம்.
ஈசன் கட்டளையை நான் நிறைவேற்றியே ஆகவேண்டும்.


இதென்ன மாயம்! எத்தனை பொற்காசு வைத்தும் தட்டு தாழவில்லையே!
என் ஆபரணங்களைக் கழற்றி வைக்கிறேன்...
சிவசருமர் நெகிழ்ந்தார்...
ஈசனே! எனக்கு எதற்கு இவ்வளவு பொன்னும் பொருளும்? அடியார்க்கு அமுது படைக்கப் பயன் படுத்துவேன்......
சிவசருமரும் சுசீலையும் விடை பெற...
திருவிடைமருதூரிலிருந்து வந்த குழந்தையை மருதபிரான் என்றே அழைப்போம்...
மருது நன்கு வளர்ந்தான். ஒரு நாள் கடற்கரையில் தோழர்களுடன்...
நான் இந்தப் படகில் ஏறுகிறேன்..
நானும்...
எல்லாரும் ஏறுங்கள்...
மருது தனி ஒருவனாகப் படகைக் கடலில் தள்ளிவிட்டுத் தானும் தாவி ஏறினான்...
மருது கெட்டிக்காரன்; பிரமாதமாய்ப் படகைச் செலுத்துகிறானே!




பெரிய மீன் ஒன்று தோன்றி, படகின் ஓரம் உட்கார்ந்திருந்த சிறுவனை விழுங்கி விட்டது!
ஐயோ!
ஆ! ஆ!
பயப்படாதீர்கள்!
மறுபடி வாய் பிளந்து வந்த மீனைக் காலால் உதைத்தான் மருது...
ஆகாயத்துக்கு உயர்ந்த மீன், கந்தர்வனாக மாறியது....
மருதபிரானே! நான் மணிபத்திரன் என்ற கந்தர்வன். தங்கள் பாதம் பட்டு விமோசனம் அடைந்தேன்!
கந்தர்வன் மறைய, மீனால் விழுங்கப்பட்ட சிறுவன் மீண்டும் படகில் ஏறினான்.
இந்தக் கயிற்றின் நுனியில் ஒரு மூட்டை முடிந்திருக்கிறது... மீன் கொடுத்தது...
கயிற்றை இழுத்துச் சிறுவர்கள் மூட்டையைப் படகிலேற்றினார்கள்...
ஏலேலோ! ..ஐலசா!
விடாதே! இழு!


பெற்றோர் கவலையுடன் கூடியிருக்கப் படகு கரையை அடைந்தது...
மருதப்பா, வந்தாயா!
என் கண்ணே!
நாங்கள் பயந்தே போனோம்!
மருது மூட்டையைப் பிரிக்க...
ஒரு பெரிய மீன் இந்த மூட்டையைக் கொடுத்தது!
ஆ! அத்தனையும் நல் முத்துக்கள்!
வாலிபப் பருவத்தில் கப்பலேறிப் பொருள் ஈட்டச் சென்ற மருது, பல காலம் சென்று திரும்பி வந்தான்...
அப்பா! மூட்டை எருமுட்டையும் ஐந்து மூட்டை தவிடும் கொண்டு வந்தேன்!
சீச்சீ! இதைத் தானா சம்பாதித்தாய்?
ஈட்டிய செல்வத்தை ஏழை எளியோர்க்குத் தானம் செய்தேன்! கோவில் கட்டினேன்!
கோபத்துடன் ஒரு எரு மூட்டையைத் தரையில் அடித்து உடைத்தார் சுவேதாரண்யர்.
அட, ரத்தினங்கள்!


மறுநாள் மருதுவைக் காணவில்லை! அவன் விட்டுச் சென்ற ஒரு பெட்டியைப் பட்டினத்தார் என்று அழைக்கப்பட்ட சுவேதாரண்யர் திறக்க...
ஓலைச்சுருள்; உடைந்த ஊசி! என்ன அர்த்தம் இதற்கு?
ஓலைச்சுருளைப் பிரித்துப் படித்தார் பட்டினத்தார்....
காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே!
இறைவன் தான் என் மகனாக வந்து எனக்கு உபதேசித்து விட்டு மறைந்திருக்கிறார்.
துறவு பூண்டு பட்டினத்தார், தாய், மனைவியிடம் விடை பெற்றார்...
போய் வருகிறேன்; குருவின் ஆணைப்படி நான் நடக்க வேண்டும்...
பட்டினத்தார் துறவு பூண்ட செய்தி அரசனுக்கு எட்டியது... ஊர் எல்லையில் மரத்தடியில் தவமிருந்தவரைக் காண வந்தான்...
இப்படி துறந்ததால் உங்களுக்கு என்ன கிடைத்தது?
நீர் நிற்க நேர்ந்தது; நாம் அமர்ந்திருக்க முடிந்தது!
தேசாந்திரம் சென்ற பட்டினத்தார் ஒரு நகரில்...
பிள்ளையாரப்பா! உன் அருகில் அமர்ந்து ஓய்வெடுக்கிறேன்...


ஒரு திருடன், அரண்மனையில் வெற்றிகரமாகத் திருடி முடிந்தால் பிள்ளையாருக்கு ஆரம் அளிப்பதாகப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தான். அதன்படி....
தும்பிக்கையானே! காப்பாற்று! காவலர் துரத்தி வருகிறார்கள்! இதோ காணிக்கை!
விநாயகர் அருகே நிஷ்டையிலிருந்த பட்டினத்தார் கழுத்தில் ரத்தின மாலை விழ, காவலர்....
இவனைக் கைது செய்!
கோபத்தில் அரசன் தீர விசாரிக்காமல்....
துறவி வேடம் பூண்ட இந்தத் திருடனைக் கழுவிலேற்றுங்கள்!
கழுமரம் பற்றி எரிய....
சுவாமி! ஆத்திரத்தில் மதி இழந்தேன்; மன்னிக்க வேணும்.
திருவிடை மருதூர் மருந்தீசரை தரிசித்து நற்கதி அடைவாய்!
பட்டினத்தார் பல பாடல்களை இயற்றிப் பாடிக் கொண்டு மக்களிடம் பக்தி வளர்த்தவாறு திருவொற்றியூரை அடைந்தார்...
காதல் தணியேனோ கண்டு மகிழேனோ? சாதல் தவிரேனோ? சங்கடந்தான் தீரேனோ?


திருவொற்றியூர் கடற் கரையில் கள்ளமற்ற சிறுவர்களிடம் அன்பு கொண்டார்...
சுவாமி! நீங்க கேட்டுக் கொண்டபடி பள்ளம் தோண்டி விட்டோம்!
நான் இதில் இறங்கு கிறேன். மணல் போட்டு மூடி விடுங்கள்!
விஷயம் கேள்விப்பட்டு வந்த பெரியவர்கள், பரபரப்புடன் தோண்ட....
அட! பட்டினத்தடிகள் சிவலிங்க சொரூபமாகி விட்டாரே!
திருவொற்றியூர் கடற்கரையில் பட்டினத்தாருக்கு மக்கள் கோவில் எழுப்பினார்கள்....
குபேரனை மாறிய பட்டினத்தார், சிவபெருமானை அடைந்து வணங்க....
குபேரா! பூவுலகில் என்ன கற்றாய்?
செல்வத்தைவிடப் பெரிய செல்வம், அதில் பற்றற்ற நிலையைப் பெற உதவும் பக்திச் செல்வம் என்று உணர்ந்தேன், பிரபோ!
பட்டினத்தார் பாடல்கள் பூவுலகில் என்றென்றும் பக்தி வளர்க்கின்றன....
...நின் அஞ்செழுத்தைச் சொல்லாப் பிழையும், துதியாப் பிழையும், தொழாப் பிழையும் எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய், கச்சி ஏகம்பனே!



அன்புக் குழந்தைகளே

கோகுலம் சிறுவர் சங்கம் தொடங்கிய போது, ஆயிரம் அல்லது இரண்டாயிரம் பேர் உறுப்பினராகச் சேருவார்கள் என நினைத்தோம். ஆனால், அன்புக் குழந்தைகள் கோகுலத்தின் மீது கொண்ட ஈடுபாட்டாலும், எல்லையில்லாத ஆர்வத்தாலும் ஏராளமான மனுக்களைப் பூர்த்தி செய்து அனுப்பி எங்களைத் திணறடித்து விட்டார்கள். இருபதாயிரத்தையும் தாண்டும்படி செய்து விட்டார்கள். ஆகையால், உறுப்பினர் பட்டியலைத் தொடர்ந்து வெளியிடுவதில் எங்களுக்குப் பல இடையூறுகள் ஏற்பட்டன. உறுப்பினர் சேரும் வேகத்தைப் பார்க்கும் போது, இரு பக்கங்களில் பட்டியல் வெளியிடுவது போதாது; 10 பக்கங்களாவது ஒதுக்கினால் தான் குறைந்தது 500 உறுப்பினர்களின் பெயர்களை வெளியிடலாம். 10 பக்கங்களைப் பட்டியல் வெளியிடுவதற்காக ஒதுக்கி விட்டால், படிப்பதற்கான மற்ற விஷயங்களைக் குறைக்க வேண்டிய நிலை ஏற்படும். அதைப் பெரும்பாலோர் விரும்ப மாட்டார்கள். ஓர் இதழுக்கு நூறு என்று வெளியிட்டால், பல ஆண்டுகள் ஆகிவிடும்! ஏற்கெனவே நாங்கள் நூறு நூறு பேராக வெளியிட்ட போது, ஓர் இதழ் வெளிவந்தவுடனே குறைந்தது 10, 15 உறுப்பினர்களாவது முகவரிகள் மாறியிருப்பதாகக் கடிதங்கள் எழுதி வந்தார்கள். உறுப்பினராகிப் பல மாதங்கள் ஆகிவிட்டதால், சிலரது முகவரிகளில் மாற்றம் இருப்பது இயற்கையே. ஆயினும், முகவரி மாறும் போது, உடனுக்குடன் எங்களுக்குத் தெரிவிக்காததால், நாங்கள் பழைய முகவரியையே வெளியிட்டு வந்தோம்.

இப்படிப்பட்ட சிரமங்களால்தான் தொடர்ந்து உறுப்பினர் பட்டியலை வெளியிடவில்லை. வெளியிட இயலாமைக்கு வருந்துகிறோம்.

"கோகுலத்தில் நாங்களும் உறுப்பினராகச் சேர விரும்புகிறோம். 'உறுப்பினர் மனுவை நாங்களும் அனுப்பலாம்' என்ற ஆவலில் ஒவ்வோர் இதழும் வந்தவுடனே தேடித் தேடிப் பார்க்கிறோம். பல மாதங்களாக ஏன் உறுப்பினர் மனு வெளியிடவில்லை?'' என்று வருத்தப்பட்டுத் தினமும் பல கடிதங்கள் வருகின்றன. அவர்களுக்காக அடுத்த இதழில் உறுப்பினர் மனுவை வெளியிடுகிறோம். இதுவரை உறுப்பினர் ஆகாதவர்கள் (15 வயதுக்குட்பட்டவர்கள்) மனுவை நிறைவு செய்து அனுப்பலாம்.

உறுப்பினர்களில் சிலர், கதை, கவிதை, துணுக்கு, நகைச்சுவை அனுப்பும் போது பெயரையும் உறுப்பினர் எண்ணையும் மட்டுமே குறித்து அனுப்புகின்றனர். முழு முகவரியும் இருந்தால்தானே, அவர்கள் எழுதியது வெளியாகும்போது, அந்த இதழையும், சன்மானத்தையும் அனுப்ப இயலும்?

உறுப்பினர் வரைந்த ஓவியங்களுக்குப் பலர் படங்கள் வரைந்து அனுப்புகின்றனர். வண்ணப்படங்களையோ, பென்சிலால் அல்லது சாதாரண மையால் வரைந்த படங்களையோ அச்சிடுவதற்கு வழியில்லை. இன்டியன் இங்கில் (Indian Ink) வரைந்து அனுப்பினால்தான் அச்சிட முடியும்.

கதை, கவிதை, துணுக்கு, நகைச்சுவை, ஓவியம் என்று எதை அனுப்பினாலும் அது உங்களுடைய சொந்தமாக இருக்கட்டும். சிலர், காப்பி அடித்து அனுப்பி விடுகிறார்கள். அது அவர்களுக்குக் கெட்ட பெயரைத்தான் தேடித் தரும்; பிறரது கேலிக்கும் ஆளாக நேரிடும். உங்கள் கற்பனை சிறக்க வேண்டும். நீங்கள் நிறைய நிறையக் கதை, கவிதை, துணுக்குகள் எழுத வேண்டும். உங்கள் புகழ் ஓங்க வேண்டும்.

வருங்காலத்தில் நீங்கள் தமிழகத்தின் சிறந்த எழுத்தாளர்களாக, கவிஞர்களாக, ஓவியர்களாகத் திகழ வேண்டும் என்பதே எங்கள் ஆசை.

ஆசிரியர்.



தெய்வமே துணை



ஸரோஜாரங்கராஜன்

முத்தையன் பள்ளிக்குப் புது மாணவன். சென்ற ஆண்டு வரை அவன் ஆமூர் கிராமத்தில் படித்துக் கொண்டிருந்தான். அந்தக் கிராமத்தில் ஐந்து வகுப்புக்கு மேல் இல்லை. எனவே தான் திருவாரூரில் தன் மாமா வீட்டில் இருந்து படிக்க விரும்பினான்.

முத்தையன் கிராமத்தில் வளர்ந்ததோடு யாருக்கும் அடங்காத குணம் படைத்தவன். தன்னைவிட வயதில் பெரிய பையன்களை அசாதாரணமாக 'டா' போட்டுப் பேசுவான். பெரியவர்களிடம் மரியாதையோடு நடக்க அவன் பழக்கிக் கொண்டதில்லை.

அவனுடைய சட்டையில் பித்தான் இருக்காது. இருந்தாலும் போட மாட்டான். தலையை 'ஸ்டைல்'ஆக வாரிக் கொள்வான். யாராவது இவனைப் பார்த்தால் போதும்; பெரிய மனிதனாகத் தன்னை நினைத்துக் காலரைத் தூக்கி விட்டுக் கொள்வான்.

இவையெல்லாம் கிராமத்து ஆசிரியர்கள் எப்படியோ பொறுத்துக் கொண்டார்கள். காரணம், முத்தையனின் தகப்பனார் கொஞ்சம் வசதி படைத்தவர் என்பதுதான்.

திருவாரூர் ஹைஸ்கூலில் ஆறாவது சேர்ந்ததும், தன்னை மிகவும் பெரிய மனிதனாகவே எண்ணிக் கொண்டு விட்டான். மற்ற பையன்களை மிகவும் அலட்சியமாக நோக்கினான்.

ஆறாவது வகுப்பில் படிக்கும் சுந்தரம் மிகவும் நல்ல பையன். ஆனால், பரமசாது. முத்தையன் எப்போதும் சுந்தரத்தைக் கேலி செய்வான். நான்கு பேர்கள் எதிரில் சுந்தரத்தை அவமானப்படுத்தா விட்டால், அன்றிரவு முத்தையனுக்குத் தூக்கம் வராது. அந்த அளவில் முத்தையனின் கெட்ட குணம் வளர்ந்து இருந்தது. சுந்தரம் பாவம், தந்தையில்லை. தாய் மட்டுமே இருக்கிறாள்.

சுந்தரம் எல்லோரிடமும் இதமாகப் பழகுவான். எளியவர்கள் யாராக இருந்தாலும் தன்னால் ஆன உதவிகளைச் செய்வான். வயதானவர்களிடம் அன்பு பாராட்டுவான். ஆசிரியர்களை எங்கு கண்டாலும் அவர்களிடம் மரியாதையாக நடந்து கொள்வான். இத்தகைய நற்குணங்களைப் பெற்ற சுந்தரத்தை மிகவும் அலட்சியமாக

நடத்தினான் முத்தையன்.

எப்போதுமே பள்ளிக் கூடத்தில் துஷ்ட மாணவர்களுக்கு இடையில் சில நல்ல மாணவர்கள் இருப்பது சகஜம். சுந்தரத்தின் குணத்தினால், துஷ்ட மாணவர்களிடம்கூட அவன் நல்ல பெயர் எடுத்திருந்தான்.

முத்தையன் படிப்பிலே சூன்யமாக இருந்தானே தவிர, மற்ற விஷயங்களில் தனக்கு ஒரு பெரிய சைனியம் வைத்திருந்தான்.

கணக்கு ஆசிரியர் பாடம் நடத்தி விட்டுப் போன பிறகு கரும்பலகையில் அவரைத் திட்டுவான். அவரைப் பற்றி அவதூறாக எழுதுவான். இப்படி எல்லா ஆசிரியர்களுமே அவனது சேஷ்டைகளை எப்படி அடக்குவது என்று புரியாமல் தவித்தனர். முன் காலம் மாதிரி ஆசிரியர்களுக்கு அடங்கிய பிள்ளைகளாக எல்லாருமே இல்லையே! ஆசிரியர்களுக்கு மரியாதை தராதது மட்டுமல்ல. சில பள்ளிக் கூடங்களில், ஆசிரியர்கள் இரண்டு ஜவான்களுடன் வந்தால் தான் பிழைப்பார்கள்! அந்த அளவு மரியாதை!

அன்றைக்குப்பிள்ளையார் சதுர்த்தி. வழக்கம் போல எல்லாப் பிள்ளையார்களுக்கும் பூஜை. திருவாரூரில் கேட்க வேண்டுமா? திரும்பின இடமெல்லாம் பிள்ளையார் சதுர்த்தியை முன்னிட்டுப் பள்ளிக் கூடம் விடுமுறை விட்டிருந்தனர். முத்தையனுக்குக் கொண்டாட்டம்.

பிள்ளையாரை வணங்கிவிட்டு வரும் சுந்தரத்தைப் பார்த்து விட்டான். கன குஷியாகச் சீட்டி அடித்துக் கொண்டே தனது கோஷ்டியைச் சேர்த்துக் கொண்டான். சுந்தரத்தை வளைத்தான்.

''என்னப்பா சுந்தரம்! பிள்ளையார் எப்போது நேரில் வருவாராம்? உன்னோடு பேசினாரா? பலமாக விபூதியெல்லாம் போட்டிருக்கிறாய் போலிருக்கிறது'' என்று ஆரம்பித்து தன் கோஷ்டியான மருதப்பனைப் பார்த்துக் கண்ணடித்தான்.

வானரப்பட்டாளமாக மருதப்பன், ரமேஷ், சுரேஷ் மூவரும் சுந்தரத்தின் காதைப் பிடித்துக் கன்னத்தில் அறைந்தனர். எப்படியாவது சுந்தரமும் தங்களோடு சேர வேண்டும். தங்களைப் போலவே படிப்பில் மக்காக ஆக வேண்டும் என்பது அவர்கள் கொள்கை. ஆளுக்கு ஒரு அறை விட்டால் எப்படியும் அவன் திரும்ப அடிப்பான், பிடித்துக் கொள்ளலாம் என்பது அவர்கள் தப்புக் கணக்கு. ஆனால் சுந்தரம் கலங்கவில்லை. கண்களை இறுக மூடிக் கொண்டான். ''பிள்ளையாரப்பா! ஒரு பாவமும் அறியாத என்னை இவர்கள் வதைக்கிறார்களே! நீயும் எத்தனை நாளைக்கு இதைப் பார்த்துக் கொண்டிருப்பாயோ'' என்று கண்களை மூடிக் கொண்டான்.

அந்தச் சமயத்தில் யாரும் எதிர்பாராத ஒரு அதிசயம் நிகழ்ந்தது. ஆற்றங்கரைக்குக் குளிப்பாட்டச் சென்றிருந்த யானை, பாகனுக்கு அடங்காமல் சேற்றை அள்ளிக் கொண்டு ஓடி வந்து கொண்டிருந்தது. முத்தையனைக் கண்டதும் அவன் மீது சேற்றை வாரி வழங்கியது. அத்துடன் விட்டதா? துதிக்கையால் அவனை அலாக்காகத் தூக்கியது; வேகமாகச் சுழற்றியது!

முத்தையன் பயந்து விட்டான். யாருக்கும் அடங்காமல்,தானே யானை மாதிரி சுற்றியவனுக்கு உண்மையாகவே பயம் வந்து விட்டது. அவனது துஷ்ட நண்பர்கள் அவனை விட்டு ஓடி விட்டார்கள். கோவிலுக்குப் பூஜை செய்ய வந்தவர்கள் கலங்கி நின்றார்



சரியாக ஒரு வருடம் மட்டும் உயிர் வாழ்வது எது தெரியுமா?

சரியாக ஒரு வருடமா? தெரியலையே...?

'காலண்டர்' தான்...

— இராம செந்தில் குமார் (3360),
திருக்கடையூர்.



கள். யானைப்பாகன் வந்தால், யானை அடங்கி விடும் என்று அவர்கள் நினைத்துப் பதைத்தார்கள்.

சுந்தரம் திகைத்தான். "பிள்ளையாரப்பா! நினைத்த மாத்திரத்தில் வந்து விட்டாயே! தெரியாமல் தப்பு செய்துவிட்டான் முத்தையன்! பாவம், அவனை ஒன்றும் செய்யாமல் விட்டு விடு" என்று தவித்து மனம் உருகி வேண்டிக் கொண்டிருந்தான். கண்களில் ஆறுக நீர் பெருகியது.

யானையோ சிறிதும் லட்சியமின்றி முத்தையனைத் துதிக்கையில் தூக்கி தட்டாமாலை சுற்றியது. முத்தையன், அலறோ அலறென்று கத்திக் கொண்டிருந்தான்.

தப்பித் தவறிக்கூட ஆண்டவன் பெயர் சொல்லாத அவன் நாவில் பிள்ளையார் புரண்டார். ஊர் ஜனங்கள் கைகளைப் பிசைந்து நின்றனர்.

"அப்பா! அம்மா! பிள்ளையாரே, என்னைக் காப்பாத்து. இனிமேல் யாரிடமும் தப்பாக நடக்க மாட்டேன். யாரிடமும் கடுமையாக இருக்க மாட்டேன். அப்பா தெய்வமே, இந்தத் தடவை மன்னித்துவிடு. நான் திருந்தி விடுகிறேன்" என்று அவன் அலறிக் கொண்டிருந்தான்.

யானையைக் குளிப்பாட்ட அழைத்துச் சென்ற பாகன், குளக்கரையிலிருந்து ஓடி வந்தான். அவன் யானைக்குச் செந்தில் என்று பெயர் வைத்திருந்தான் போலும்.

"அப்பா செந்தில்! பிள்ளையை ஒன்றும் செய்யாமல் விட்டு விடு" என்று சொல்லிக் கொண்டே அங்கு சத்தோடு தைரியமாக முன்னேறி, துதிக்கையைத் தடவினான். யானை சமாதானம் அடைந்த மாதிரி முத்தையனைக் கீழே இறக்கி விட்டது.

கூடியிருந்தவர் முகத்தில் ஆச்சர்யம்! ஒரே பரவசம். முத்தையன் சேற்றைப் பூசிக் கொண்ட முகத்தோடு ஓடி வந்து சுந்தரத்தின் காலில் விழுந்தான்.


"சுந்தரம்! அறுதைக்குத் தெய்வம் துணைன்னு பெரியவங்க சொல்ற வார்த்தை இன்னிக்கு மெய்யாயிடுச்சு. இத்தனை நாள் உன்னைத் துன்புறுத்தியதைப் பத்தி நீ ஆண்டவனிடம்தான் முறையிட்டிருக்கிறாய். அதுதான் உன்னைக் காப்பாற்றி என்னைத் தண்டித்து

விட்டார் பிள்ளையார், யானை உருவத்தில் வந்து.

"மிருகமாக உன்னிடம் இத்தனைநாள் நடந்து கொண்டேன். ஒரு மிருகமே என்னைத் தூக்கிய போதுதான் உன் மனம் என்னபாடுபட்டிருக்கும் என் செய்கைகளால் என்று உணர்ந்தேன். யாராலும் திருத்த முடியாத என் மனதை உன் பிள்ளையார் திருத்தி விட்டாரப்பா!

"அந்த ஒரு நிமிடத்தில் நான் பட்ட வேதனை ஆயுளுக்கும் போதுமப்பா!" என்று சுந்தரத்தின் கைகளைச் சேர்த்துப் பிடித்துக் கொண்டு கண்ணீர் விட்டான். நல்ல பையனாக மாற அன்றே பிள்ளையார் சுழி போட்டு விட்டான்.

சுந்தரமோ மெய் மறந்து கண்களை மூடி, "பிள்ளையாரப்பா! தெய்வம் இல்லை என்று சாதிப்பவர்கள் உள்ளத்தில்கூட உன் சக்தி நுழைந்து அற்புதம் செய்கிறதே! யாராலுமே திருத்த முடியாத கெட்ட மனம் படைத்தவனை ஒரு நிமிடத்தில் உணரச் செய்து விட்டாயே! உன் பெருமையை எப்படிப் புகழ்வது!" என்று நினைத்த வண்ணம் பிள்ளையார் கவசத்தை மனதுள் சொல்லிக் கொண்டான்.



ஒருவர்: என்னை வற்புறுத்தாதீங்க, எனக்கு பசியே இல்லை.


மற்றவர்: ரொம்பதான் சங்கோஜப்படாதீங்க.

ஒருவர்: போன பந்தியில்தான் சாப்பிட்டேன்.

— இ. சாகேதராமன் (4669),
திருச்சி — 14.



— கடலூர் கன்னியப்பன்.



ராமு: அவர், உன் ஒன்று விட்ட அண்ணனா?

கோபு: ஆமாம், எப்படிடா கண்டு பிடிச்சே?

ராமு: சற்று முன்னாடி, உன் கன்னத்தில் ஒன்று விட்டாரே!

— இ. சாகேதராமன் (4669),
திருச்சி — 14.

பிருந்தாவனக் கவியரங்கம்

துன்பம் நாடாது

சீலம் இன்றிச்
சிந்தை சென்றால்
சிறிதும் வெற்றி கூடாது!

பாதை தவறிச்
செல்லும் வாழ்க்கைப்
படகும் ஒழுங்காய் ஓடாது!

உழைப்பைப் பெருக்கி
உடம்பைக் குறைத்தால்
உலகில் வாழ்வும் வாடாது!

நாவை அடக்கித்
தேவை சுருக்கின்
நம்மைத் துன்பம் நாடாது!

வி. பண்டாரசிவன் (4845)
சேதுக்குவாய்த்தான்.





கோகுலத்தின் கண்ணன்

கோகுலத்தின் கண்ணன்
கோபியரின் மன்னன்
வெண்ணெய் திருடித் தின்றான்
வெற்றி பல கண்டான்


குறும்பு செய்யும் கள்வன்
குசேலருக்கு நண்பன்
குழல் எடுத்து ஊதுவான்
குழந்தை கண்ணன் ஆடுவான்

நல்லவர்க்கு நண்பனாய்
நன்மை செய்ய முந்துவான்!
கண்ணன் அவனை வணங்கினால்
கவலையென்பது இல்லையே!

— ஆர். திருப்பதி வெங்கடசாமி

(13796), சிப்பிப்பாறை.

தூயோன் தந்த குறட்பா!



தெய்வப் புலவர் யாத்தது;
திருக்குறளாய்ப் பூத்தது!
உய்யும் வழிகள் காட்டுது;
உயர்ந்த நெறிகள் ஊட்டுது.

சின்னச் சின்னப் பூக்கள்;
சிந்தை அள்ளும் பாக்கள்!
எண்ண எண்ண இனிக்கும்;
எல்லாக் குறளும் மணக்கும்!

குழந்தை வளரத் தாய்ப்பால்;
குவலயம் உயர முப்பால்!
தொழுதிடத் தக்க அருட்பா;
தூயோன் தந்த குறட்பா!

ஒன்றே முக்கால் அடிதான்;
உருவில் சிறிய குறள்தான்!
என்றும் மணக்கும் மலர்தான்;
எல்லாம் உண்டு இதில்தான்!

ஜி. பிரபா, (18540)
அருப்புக்கோட்டை.

கடல்



ஆர்ப்பரிக்கும் கடலது — நல்ல
அழகு மிக்க கடலது

நீல வண்ணக் கடலது — நம்
நெஞ்சை அள்ளும் கடலது.

குளிர்ச்சி தரும் காற்றினை — தினம்
கொண்டு வரும் கடலது.

களிப்பு தரும் கடலது — உப்பு
கலந்திருக்கும் கடலது.

சாயங் கால வேளையில் — மனச்
சாந்தி தரும் கடலது.

முழுமை நிலா இரவிலே — நன்கு
மேலே எழும்பும் கடலது.

உயர்வு, தாழ்வு இன்றியே — அனைவர்க்கும்
உவகை தரும் கடலது.

மாலை மறையும் வேளையில்
மயங்கச் செய்யும் கடலது.

கப்பல் செல்லும் கடலது — எதிர்க்
கரையே தெரியாக் கடலது.

மீன்கள் துள்ளும் கடலது — உயர்
முத்து விளையும் கடலது.

எல்லை இல்லாக் களிப்பினை — அது
எல்லோருக்கும் தருகுது.

— வி. ஜெயராமன் (5921),
ஆலம்பூண்டி.




மனைவி: பையன் பாடம் படிக்கும் போது ரேடியோ வைக்காதீங்கன்னு சொன்னா கேட்டீங்களா?

கணவன்: ஏன்? என்னாச்சு?

மனைவி: பரீட்சையிலே ஒவ்வொரு கேள்வி பதிலுக்கும் நடுவிலே ஒரு விளம்பரம் எழுதி வைத்திருக்கானாம்.

— மு. திருநாவுக்கரசு.



ஓசிப் பயணம்

லென்ஸ்

"யாருப்பா இன்னும் டிக்கெட் வாங்காம இருக்கு?..." ஜன சமுத்திரத்தில் எதிர் நீச்சல் போட்டுக் கொண்டு வந்து கொண்டிருந்தார் பஸ் கண்டக்டர்.

"டேய்! மணி...." ரகசியமாக மணியின் தோளைத் தட்டிக் கூப்பிட்ட சுரேஷ் பரிதாபமாக அவனைப் பார்த்தான்.

"சும்மா இருடா! அப்பவே சொன்னேனே...." என்று வெளிப்பக்கம் வேடிக்கை பார்க்கலானான் மணி.

"டேய்!....பயம்....மா இருக்குடா...." என்று ஈனஸ்வரத்தில் ஆரம்பித்த சுரேஷைப் பார்வையாலேயே எச்சரித்தான் மணி.

பஸ் பயணம் முடிந்து சாலையில் இருவரும் நடக்கத் தொடங்கினார்கள். சுரேஷின் மனசில் 'திருட்டு பஸ்' ஏறி வந்தது குற்ற உணர்வாக நிறைந்திருந்தது.

"டேய் மணி! கண்டக்டரை ஏமாத்தினது தப்புத்தானே?" என்றான் சுரேஷ்.

"போடா பயந்தாங் கொள்ளி. நாம டிக்கெட் வாங்காததாலே கண்டக்டருக்கு வேலையா போயிடும்?... போடா!"

"இல்லை.... 'ஓசி'யிலே நாம இந்த மாதிரிப் பயணம் பண்ணினது சரியில்லேன்னு மனசுல தோணுது."

"டேய்! அரிச்சந்திரா! எத்தனை நாள் கண்டக்டர் 5 பைசா, 10 பைசா திருப்பித் தராமல் போயிடுறான். அதுக்கு நாமெல்லாம் இப்படித்தான் பண்ணணும்." என்று மணி விடாப்பிடியாகச் சாதித்தான்.

"சம்பந்தா சம்பந்தமில்லாமே எதையோ சொல்லி, எதையோ புரிய வைக்கப் பாக்கிறே" என்று சுரேஷ் கூறும்போதே, இன்னும் குற்ற உணர்வு அதிகரித்தது.

மணியின் வீடு வந்ததும் சுரேஷ் கிளம்பப் பார்த்தான்.

"டேய்! வந்துட்டுப் போ உள்ளே" என்று மணி சுரேஷை இழுத்துக் கொண்டு உள்ளே நுழையும் போது, அங்கே எல்லோரும் ஊரிலிருந்து வந்திருந்த மாமாவைச் சுற்றி உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். மாமியும் கூட வந்திருந்தாள்.

"மாமா! சௌக்கியமா?" என்று மணி கேட்டதும், மாமாவிடமிருந்து வழக்கமாக வரும் 'கிண்டல் பேச்சு' காணாமல் போயிருந்தது. சுரத்தில்லாமல் "சௌக்யம்...." என்று ஒரே வார்த்தையில் முடித்துக் கொண்டார்.

மணியின் மாமா பார்க்காத வேலையில்லை. தியேட்டரில் வேலை பார்ப்பார்; பிறகு அதை விட்டுவிட்டு லாரி ஓட்டுவார். பிறகு ஓட்டலில் போய்ச் சேருவார். இப்போதும் ஏதோ பஸ் கம்பெனியில் கண்டக்டராக இருக்கிறார் என்ற அளவில் மணிக்குத் தெரிந்தது.

"என்ன மாமா? 'சுரத்'தில்லாமல் இருக்கிறீங்களே!" என்று மணி கேட்டதும் மாமா "அதெ...ல்லாம் இல்லியே" என்று சமாளித்தார். ஆனால், அவர் குரலே காண்பித்துக் கொடுத்தது.

"டேய் மணி! சும்மா இரு! பெரியவங்க விஷயத்துலே தலையிடாதே!" என்று அப்பா அதட்டினதும் மணி, மெதுவாக வீட்டிற்குப் பின்கட்டில் சுரேஷுடன் விளையாடப் போனான்.

அப்போது மணியின் அம்மாவும் மாமியும் கிணற்றடியில் வந்து நின்று கொண்டு என்னவோ பேசிக் கொண்டிருந்தது கேட்டது.

விஷய ஆர்வத்தில் மணியும் சுரேஷும் அந்தச் சம்பாஷணையைக் கூர்ந்து கேட்டனர்.

"என்னடி இது அநியாயம்? யாரோ டிக்கெட் வாங்காமல் போனால் இவருக்கென்ன?" என்றாள் மணியின் அம்மா.

"சாதாரண நாளா இருந்தால் பரவாயில்லை. அன்னிக்கு முதலாளியோட பையன் 'செக்கிங்' வந்தப்போ பத்து பேருக்குக் குறையாமே டிக்கெட் வாங்காமே இருந்திருக்காங்க. டிக்கெட் கொடுக்காமல் விடறது கண்டக்டர் தப்பாம். டிக்கெட் வாங்காமே இருந்ததுக்கு அவுங்களெல்லாம் ஃபைன் கட்டினார்கள். இருந்தாலும், டிக்கெட் வாங்காதவங்களைப் பார்த்து டிக்கெட் கொடுக்காமல் அஜாக்கிரதையாக நடந்ததுக்காக இவரை 'சஸ்பெண்ட்' பண்ணியிருக்காங்க. வேலை போகாதுன்னு சொன்னாக் கூட, எத்தனை கெட்ட பேர்?....... எவனோ டிக்கெட் வாங்காமப் போனதுல இவருக்குப் பாவம்.... கெட்ட பேர்." என்று பதிலளித்தாள் மாமி.

"ஆமா! இப்ப என்ன நிலைமை?"

"ஏன் டிக்கெட் கொடுக்கல்லே, எப்படி அஜாக்கிரதையா நடந்தேன் அப்படின்னு இவர் விளக்கம் கொடுக்கணும். முதலாளி மெட்ராஸிலே இருக்கார். அவரைப் பார்த்துப் பேசி மன்னிப்புக் கேட்கலாம்னுதான் இவர் வந்திருக்கார்....."

"என்னமோ எல்லாம் நல்லபடியா முடிஞ்சா சரி!...." என்று இருவரும் உள்ளே சென்று விட்டனர்.


சுரேஷ் மணியைப் பார்த்தான். "டேய்! நம்ப பஸ்ஸிலும் செக்கிங் வந்திருந்தா, உங்க மாமா மாதிரி இன்னொரு கண்டக்டருக்கு 'கடமை தவறின'துக்காக நோட்டீஸ் கொடுத்திருப்பாங்க இல்லே?"

மணியின் மனசில் தீவிர சிந்தனை போலும்!

"டேய்! தப்புன்னு புரியறதுக்கு எங்க மாமா மூலமாய்த் தண்டனை வந்திருக்க வேண்டாம்" என்றான் அழாக் குறையாக.

சுரேஷ் அவசரமாக ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்து, "இந்தாடா இனிமேல் நாம இது மாதிரி செய்யக் கூடாது. காசை உண்டியலில் போட்டுடலாம்" என்றான்.

மணி மௌனமாக இருந்தான். மௌனம் சம்மதம் தானே?



சாப்பிட வந்தவர்: ஏம்பா சர்வர், இட்லி, காப்பி எல்லாம் சூடாக இல்லையே?

சர்வர்: இந்த ஓட்டல் பெயர் "ஆறிய" பவன்.

— எஸ். கார்த்திகேயன். (18229) திருவாரூர்.

அகிம்சையின் வெற்றி

— ஜே. சீனுவாசன்

(குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய கல்லூரி மாணவர்களுக்கான சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு (செல்லப்பன் நினைவுப் பரிசு) பெற்ற கதை)


சுபாஷுக்கு விழிப்பு வந்தபோது மனம் ஒரு நிலையில் இல்லை. இரவு நெடுநேரம் விழித்ததால் கண்கள் எரிந்தன; மனத்தில் படபடப்பு.

'என்ன நடக்குமோ!' என்ற திகில் ஒருபுறம், அதை மீறி, 'என்ன நடந்தாலும் நடக்கட்டும்' என்று பொங்கி வழியும் வைராக்கியம் இன்னொரு புறம்.

படுக்கையிலே எழுந்திருக்க மனமில்லாமல் படுத்துக் கிடந்தவன் 'நேரத்தை வீணாக்காதே!' என்று மனம் இடித்துரைக்க, துள்ளி எழுந்தான்.

அவசர அவசரமாகக் காலைக் கடன்களை முடித்தான். 'சில்'லென்ற நீரில் குளித்த பின், மனத்தில் புதிய தெம்பும், உற்சாகமும் ஊற்றெடுத்தன.

"அம்மா.... டிபன் ரெடியா?"



அவன் குரலில் இருந்த அவசரத்தில் அம்மா பதறினாள்.

"என்னடா.... சுபா? இன்னைக்கு லீவுதானே..! பள்ளிக்கூடம் இருக்கா.. என்ன?"

"லீவுதான்... ஆனா, பள்ளிக்கூடத்துக்குப் போகணும்... இன்னிக்கு சுதந்திர தினமாச்சே....?"

இப்படிச் சொன்னவனுக்குத் திடீரென்று நினைவுக்கு வர, ஞாபகமாய் மூவர்ணக் கொடியை மார்பில் குத்திக் கொண்டான். கண்ணாடியின் முன் நின்று சரியாக இருக்கிறதா என்று பார்த்தவன் கண்ணில் பெருமை பீறிட்டது.

அக் கொடியின் பிம்பத்தை, கண்ணாடியில் பார்க்க, பார்க்கத் தன் மீதே சுபாஷுக்கு கோபமும், வெட்கமும் கொப்புளித்தன.

'சே... தேவையில்லாமல் பயந்தோமே...' என்று கொடிக்கு நன்றி சொன்னான்.

ஓ! அந்தக் கொடியின் மகத்துவந்தான் என்ன...! எத்தனையோ பேர்களின் தியாகத்தில் உயிர்த்தெழுந்த உன்னத சின்னமாயிற்றே அது! கத்தியின்றி, ரத்தமின்றி அறுவை சிகிச்சை செய்த அகிம்சா மூர்த்தியின் ஆயுதமாயிற்றே அது....!

மறைந்த தாத்தாவின் நினைப்பு நெஞ்சில் அலைமோத, அவர் சொன்னது காதில் ஒலித்தது.

''சுபாஷ்... நாம்ப இன்னைக்கு சுதந்திரக் காற்றைச் சுகமாய் சுவாசிக்கறதுக்கு யார் காரணம் தெரியுமா? அன்னிக்கு சுதந்திரத்தைத் தவிர வேறு எந்த லாபமும் கருதாமல் உயிரைக் கொடுத்தும், இன்னும் பல தியாகங்களும் செஞ்சாங்களே அந்த தியாகிங்கதான்! அவங்களை மறக்கறது மாதிரி ஒரு நன்றி கெட்டதனம் ஏதும் இல்லே... ஆமாம்! சுபாஷ்! கிறிஸ்தவர்கள் சொல்வாங்களே... நாம்ப நல்லா இருக்கிறதுக்கு கிறிஸ்து ரத்தம் சிந்தினார்னு... அதுபோலவே இவர்களும் நமக்காக ரத்தம் சிந்தினாங்க!

''அவுங்க சொல்வாங்களே... ஒவ்வொரு முறையும் சாப்பிடறதுக்கு முன்னாலே 'ஏசுவே, இன்றைய ரொட்டி நீ தந்தது! அதுக்கு எங்கள் நன்றி'ன்னு... அது போல ஒவ்வொரு நாளும் சாப்பிடறதுக்கு முன்னாலே, தூங்கப் போறதுக்கு முன்னாலே தியாகிகளுக்கு நாம்ப நன்றி சொல்லணும்.. அப்படிச் செய்தாலும் அவர்களுக்கு அவர்கள் சேவைக்கு நம்மாலே ஈடு கட்ட முடியாது...''

மனக்கண்ணில் தாத்தா மூச்சு வாங்கிப் படபடப்பது தெரிகிறது. ஆமாம்! அவர்களைப் பற்றிப் பேசும் போதெல்லாம் தாத்தா உணர்ச்சி வசப்பட்டுவிடுவார்!

சுபாஷின் குழந்தைப் பருவம் மற்றவர்களைப் போல வெறும் 'குரங்கு அப்பத்தைப் பங்கிட்ட கதை' கேட்டோ, 'நரி காக்காயை ஏமாற்றிய கதை' கேட்டோ, 'வால் போய் கத்தி வந்தது... டும்... டும்...' என்ற கதை கேட்டோ மகிழ்ந்தது இல்லை.

மாறாக —

திருப்பூர்க் குமரன் கொடிக்காக உயிர் நீத்த தீரம், வாஞ்சியின் சாகசம், வ.உ.சி. யின் தியாகம், பகத்சிங்கின் ஆவேசம்....

ஆகியவை கேட்டு சிலிர்த்துப் போனது அவனது 'அஞ்சு வயது...' அவனது தாத்தாவுக்கு சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடவில்லை என்ற ஆதங்கம் நிரம்பவே உண்டு! ஆம்! அக்காலத்தில் அவர் இளைஞர்... ஆனால், வீட்டுக்கு ஒரே பிள்ளையாய் இருந்ததால், அவரது துடிப்பைப் பார்த்து, ஒரே பிள்ளையை இழந்து விடுவோமோ என்ற பயத்தில், அவரை மிரட்டிப் பார்த்தார்களாம் பெற்றோர்... முடிவில் சத்தியம் வாங்கிக்கொண்டு முடக்கி விட்டனர்... அந்த வருத்தம் அவர் வேகின்றவரை போகவே இல்லை... அவனிடம் சொல்வார்:

''சுபாஷ்! சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் என் வயதுக்காரர்கள். அவர்களுடைய இளமைக்கு, வாழ்க்கைக்கு ஓர் அர்த்தம் இருந்தது... இப்படி சும்மா சாப்பிட்டுத் தூங்கி எழுந்து வாழ்வது ஒரு வாழ்க்கையா....?''

என்று அலுத்துக் கொள்வார்.

அந்த நினைப்பிலே வளர்ந்த சுபாஷுக்கு 'தியாகி' என்ற சொல்லைக் கேட்டாலே, நெஞ்சில் ஒரு தெய்வீக உணர்வு தோன்றும், அவர்களைப் பற்றி யாராவது ஏதாவது சொன்னால் ஆர்வத்துடன் கேட்பான். 'நான் ஒரு தியாகி' என்று சொல்பவரை, பய பக்தியோடு பார்ப்பான், தாத்தாவுக்குக் கிடைக்காத பெருமை இவருக்கு கிடைத்திருக்கிறதே என்று லேசாகப் பொறாமை எழும், அவர்களைப் பற்றி யாராவது தவறாகப் பேசினால் கோபப் பட்டுப் போவான்... கதைகளில், பத்திரிகைகளில் வரும் செய்திகளை சுவாரசியத்துடன் படிப்பான்...


'ம்... அப்படி வளர்ந்தது கூட ஒரு விதத்தில் தப்போ?' என்ற நினைப்பை அவசர அவசரமாய் அழித்தான்.

''சுபாஷ்... டிபன் ரெடி!'' அம்மா குரல் கொடுத்தாள்.

இட்லியை சாப்பிடும் போது அம்மாவை உற்றுப் பார்த்தான்... 'ஒரு வேளை... ஏதாவது நடந்து விட்டால்...?' என்ற நினைப்பு பொங்க, கண்ணில் கண்ணீர் கொப்புளித்தது.. அம்மா பதறிப் போய்,

''ஏன்டா... கண்ணு! மிளகாய்ப் பொடி அதிக காரமா? இன்னும் கொஞ்சம் நெய் ஊத்தட்டுமா?''

அவளது தாய்மை அவனை மேலும் உலுக்கியது... ஆனாலும், தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.



சாப்பிட்டதும் அம்மாவிடம் திரும்பத் திரும்ப விடை பெற்ற போது, அம்மா 'என்ன ஆயிற்று இவனுக்கு?' என்று வேடிக்கையாகப் பார்த்தாள்.

நண்பன் வாசு வீட்டுக்கு வந்த போது —

தூக்கம் கலையாமல் வந்த வாசு, "சுபாஷ்... போய்த்தான் தீரணுமா...?" வார்த்தைகளில் அச்சம் கவ்வக் கேட்டான்.

அவன் மீது சுபாஷுக்குக் கோபம் வந்தது. அடுத்த நிமிடம் அவன் மேல் அனுதாபமே தோன்றியது... பாவம்! அவனை நமக்காக எதற்கு வம்பிற்கு இழுக்க வேண்டும்?

"அப்ப... சரி! நான் வர்றேன்!"

'விர்'ரென்று கிளம்பிய சுபாஷை வாசுவின் மன்னிப்புக் குரல் அழைத்தது.

"டேய்... டேய்! என்னை தப்பா நெனைச்சுக்காதேடா... பிளீஸ்.. பிளீஸ்!"

'மாட்டேன்' என்பது போலத் தலையசைத்து முன்னேறி நடந்தவன் மனத்தில் முதல் நாள் நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது.

"வாயேன்டா... என்னமோ பீச்சிலே நம்ப மாணவர் யூனியன் அவசர மீட்டிங் போடுதாமே... என்ன முடிவு எடுக்கிறாங்கன்னு பாப்போமே..."

வாசு நச்சரிக்கவே வேண்டா வெறுப்புடன் சென்றான் சுபாஷ்.

அரசினர் மேல்நிலைப் பள்ளியான அது, உயர்நிலைப் பள்ளியாக இருக்கும் வரை ஒழுக்கத்திற்குப் பெயர் பெற்றிருந்தது. மேல்நிலைப் பள்ளி ஆனது முதல் ஒழுக்கம் சீர்குலைந்து 'தும்மினால்' ஸ்டிரைக், 'இருமினால் உண்ணாவிரதம்' என்று விளங்கியது... அதே போல சமீப காலமாக ஒரு ஸ்டிரைக் நடந்து ஓய்ந்தது.

தற்காலிகமாக நின்ற அது மீண்டும் தொடரப் போவதாகவும், அதற்கு முக்கிய முடிவெடுக்கவே, கூட்டம் கூடப் போவதாகவும் ரகசியமாய் மாணவர்களுக்குச் செய்தி வந்திருந்தது.

அவர்கள் கடற்கரையை அடைந்த போது நன்றாக இருட்டி விட்டிருந்தது. மக்கள் நடமாட்டம் இல்லாத ஒரு மூலையில் மாணவர்கள் கூடியிருந்தனர். மாணவர் தலைவன் ஆவேசமாய்ப் பேசிக் கொண்டிருந்தான்.

"... நமது கோரிக்கைக்கு கல்வித்

துறையும், அரசும் செவிசாய்ப்பது போல நடித்தாலும், மெத்தனமாக நடந்து கொள்கின்றனர். நம்மிடம் பொய்யான உறுதிமொழி கொடுத்து ஏமாற்றுகின்றனர். இவர்களைப் பழி வாங்க நமக்கு அருமையான சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது!''

என்று சொல்லி நிறுத்தவே, மாணவர்களிடையே ஒரு 'கசமுசா...' தலைவன் தொடர்ந்தான்.

''ஆம்! தோழர்களே! நாளை நமது பள்ளியின் வெள்ளி விழா! ஒரு சுதந்திர தினவிழாவில் துவங்கியதால் நாளைக்குக் கோலாகலமாய் கொண்டாட முடிவு செய்துள்ளனர். காலையில் கவர்னர் வந்து கொடியேற்றுகிறார். மாலையில் வெள்ளி விழா நிகழ்ச்சிகள்! இதை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்! நாளைக் காலை கவர்னர் வருவார்... ஆனால், நாம் போக மாட்டோம்! ஆமாம், இரண்டு நிகழ்ச்சிகளையும் நாம் புறக்கணிக்க வேண்டும்! நம்மை ஏமாற்றியவர்கள் முகத்தில் கரியைப் பூசுவோம்! எப்படி... என் ஐடியா?''

''ஒண்டர்புல்.....!''

''பெண்டாஸ்டிக்.....!''

''அருமை.... தலைவரே...''

என்ற குரல்களை மீறி,

''மடத்தனமா இருக்கு....''

சுபாஷ் குரல் ஆவேசமாய் ஒலித்தது. எழுந்து நின்ற அவன் உடல் கோபத்தால் நடுங்கியது.

''யார்டா... அவன்... ஐந்தாம் படை.....?''

''அடிடா... அவனை !''

''உதைடா...''

ஆக்ரோஷமாய்க் குரல்கள் பின்னுக்குத் திரும்பின. வாசு பயத்தால் நடுங்கி,

''உக்காருடா... இல்லேன்னு வீட்டுக்குப் போய்டலாம்.. வா...'' என்று கிசுகிசுத்தான்.

மாணவர் தலைவன் கொதிக்கும் மற்றவர்களைப் பெருந்தன்மையுடன் அடக்கி,

''நண்பர்களே... ஆவேசத்துக்கு இப்போது இடம் கொடுத்தால், நமது திட்டம் வீணாகிவிடும்.. அமைதியைக் கடைப்பிடிப்போம்! முகம் தெரியாத நண்பனே... எந்த விதத்தில் திட்டம் மடத்தனமானது... சொல்ல முடியுமா?''

நின்று கொண்டிருந்த சுபாஷிடம் கேட்க,

''நாளைக்கு... என்ன நாள்? சுதந்திர தினம்! எவ்வளவு பாடுபட்டுப் பெற்றது சுதந்திரம்! அதற்காகப் பாடுபட்ட பெரியோர்களுக்கு நன்றி சொல்லவே கொடி வணக்கம் செய்கிறோம்.. அதைப் புறக்கணிக்கிற மாதிரி கொடுமையானது இல்லே... வேணு... ஒண்ணு... செய்வோம்!''

''என்ன?..''

''காலையிலே கலந்துக்குவம்! மாலை நிகழ்ச்சிகளைப் புறக்கணிச்சிடலாம்''

''கொடிகாத்த குமரன் போய்!''

''என்ன அருமையான ஐடியா...''

''வெட்கம்... வெட்கம்...!''

கேலியாய்க் குரல்கள் ஓங்கி ஒலித்து அடங்கின. தலைவன் மீண்டும்,

''நம்ப திட்டத்தின் உயிர் நாடி காலை நிகழ்ச்சிகளைப் புறக்கணித்தல் தானே?'' என்று சொல்ல,


''நான் நிச்சயம் கலந்துக்குவேன்!''

உறுதியாய் சுபாஷ் சொல்ல,

''அவன் மண்டையை உடைடா...''

மீண்டும் கோப அலைகள் பொங்க.. தலைவர்-அவர்களை அடக்கி,

''நண்பர்களே! கோபத்துக்கு இடம்



மகன்: அப்பா அறிவாளியா? இல்லை மகன் அறிவாளியா?

தந்தை: அதிலென்ன சந்தேகம்: அப்பா தான் அறிவாளி.

மகன்: பின்ன ஏம்பா, ரேடியோவை மார்க்கோனியின் அப்பா கண்டுபிடிக்கலை?

தந்தை: ? ? ?

— அண்ணாமலைநகர் வைரம்.

கொடுத்தால், நமது திட்டம் வீணாகி விடும்! துரோகிகள் எங்கும், எதற்கும் இருப்பார்கள்.. அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்! நாளைய நமது புறக்கணிப்பு முழுவெற்றியடைய உங்கள் ஒத்துழைப்புத் தேவை... இத்துடன் கலையலாம்....!''

பலத்த கைத்தட்டலுடன் கூட்டம் கலைய, அப்போதே சிலர் சுபாஷை இருட்டில் தேடினர். வாசு அவனை அமைதிப்படுத்தி சாமர்த்தியமாக அழைத்துக் கொண்டு போய் விட்டான்.

இரவெல்லாம் 'யார் வந்தாலும்... வராவிட்டாலும் கொடியேற்ற நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டும்! காலையில் சீக்கிரமாகவே கிளம்பிவிட வேண்டும்! பள்ளியின் எல்லா வாயில்கள் அருகேயும் மாணவர்கள் போகாமல் தடுக்க மாணவர் தலைவர்கள் நிற்பார்கள். ஆங்! பள்ளிக் கூடத்தின் மேற்குப் புறத்தில் அதை ஒட்டிய குறுகிய தெரு இருக்கும்.. அங்கே வேலி மட்டுமே இருக்கும்.. அது வழியாக உள்ளே நுழைந்திடலாம்... அதுதான் சரி!''

தீர்மானத்துடன் தூங்கிப் போனான் சுபாஷ்..

பழைய நினைவுகள் முடியவும், பள்



"பாட்டு ஒன்று" பாடு!


'ப்ரிதி' - இரா. வேங்கடேசன்

பாட்டு ஒன்று பாடு.
  பண்ணில் இன்பம் தேடு.
கூட்டுத் தாளம் போடு.
  குரலில் ஒன்று கூடு.. (பாட்டு)

தாய் மொழியில் பேசு.
  தவறு செய்யக் கூசு.
வாய்மை காந்தி, ஏசு
  வழியில் மணம் வீசு. (பாட்டு)

சோதனையில் தேறு.
  சுற்ற மேநம் பேறு.
பேதம் என்ன நூறு?
  பிரிவு இல்லை கூறு. (பாட்டு)

அறிவு நூல்கள் ஓது.
  அவைபோல் இன்பம் ஏது?
நெறியில் நிற்கும் போது
  நீயும் இடலாம் வாது. (பாட்டு)



ளிக்கூடம் வரவும் சரியாக இருந்தது.. அடடா.. எமகாதகர்கள்!

மாணவர் தலைவர்கள் அங்கேயும் நிற்கிறார்கள்! ஒரு வீட்டின் குறட்டில் சில சைக்கிள் செயின்கள், பெட்ரோல் டின்கள், விறகுக் கட்டைகள் — எப்படிப் போராட்டம் நடத்துவதென அரசியல்வாதிகளிடம் அவர்கள் கற்றுக் கொண்ட பாடம்!

அவர்களைக் கவனிக்காதவன் போலப் போனவனை யாரோ ஒருவன்,

"யார்ரா... அவன்?"

என்று கத்த,

"நான்தான் நேத்தே சொன்னேனே... போகப் போறேன்னு...?" என்று சுபாஷ் பதில் குரல் கொடுக்க,

"ஓ.. நீதானே... அந்தத் துரோகி...?"

"விடாதேடா... அவனைப் பிடி!"

உடனே நான்கைந்து மாணவர்கள், சுபாஷை இறுகப் பற்றிக் கொண்டிட, சுபாஷ் திமிறினான்.. இந்த சத்தத்தில் இன்னும் பல மாணவர்கள் 'திபுதிபு' வென்று ஓடி வந்தனர்.

அந்தத் தெருவில் உள்ள வீடுகளில் இருக்கும் சிலர் பயத்துடன் எட்டிப் பார்த்தனர். அதில் ஒரு கிழவர் இறங்கி, "அவனை விடுங்கப்பா..." என்று சொல்ல வாயெடுத்தார்.

"அப்பா... வீட்டை விட்டு இறங்காதீங்க..."

உள்ளிருந்து வந்த ஒரு கண்டிப்பான குரல் அவரைக் கட்டிப் போட்டது... மாணவ சக்தியின் மீது அவ்வளவு மதிப்பு!

அந்த நேரத்தில் —

அப்படியொரு கொடுமையான —

எண்ணம் அந்த மாணவன் நெஞ்சில் எப்படித்தான் உதித்ததோ... இன்னொருவன் காதில் அதை ஓத, அவன்.

"அதுதான் கரெக்ட்! டேய்... பெட்ரோல் டின்னைக் கொண்டாந்து இவன் மேல் ஊத்துங்கடா..."

என்று சொல்ல, உடனே ஒருவன் சந்தோஷமாய்க் கொண்டு வந்து அவன் மேல் ஊற்ற, இன்னொருவன் தூரத்தில் இருந்து அவன் மேல் தீக்குச்சியை எறிய,

சுபாஷ் பற்றிக் கொண்டு எரிந்து, துவண்டான்.

அவன் துவள்வதைப் பார்த்ததும் தான் தாங்கள் தவறு செய்ததை



ஒருவர்: ஏன் அந்த ஞாபக மறதிக்காரர் வீட்டைச் சுற்றி கூட்டமாக இருக்கிறது?

மற்றொருவர்: அவர் மூச்சு விட மறந்துவிட்டாராம்.

— எஸ். கார்த்திகேயன் (18229), திருவாரூர்.

உணர்ந்த மாணவர்கள்,

"ஐய்யய்யோ! பாவம்.. துடிக்கறான்! என்னடா செய்யலாம்?"

"தண்ணி ஊத்தலாமா...?"

கைகளைப் பிசைந்தனர். கண்களில் உண்மையான அச்சம் தெரிந்தது.

"தண்ணி ஊத்தாதீங்கப்பா..." என்று அந்தக் கிழவர் அலறி வீட்டுக்குள் ஓடி, கம்பளிப் போர்வை ஒன்றை எடுத்துவந்து அவன் மேல் போர்த்தி, அணைப்பதற்குள்,

சுபாஷின் உடல் கருகி, தோல் வழிந்து, கண்கள் சரிந்து, உடல் கீழே சாய்ந்தது.

மற்றவர்கள் உதவியுடன் காற்றாட ஒரு வீட்டின் குறட்டில் அவனைப் படுக்க வைத்தார், அந்தக் கிழவர்.

"தம்பீ! சூழ்ந்துக்காதீங்க... இடம் விடுங்க..." என்ற கிழவர் தடுத்தும் கேளாமல்,

"தம்பீ! தெரியாமே செஞ்சிட்டோம்.. மன்னிச்சிடப்பா.."

கண்ணில் நீர் வழிய, உண்மையாய் மன்னிப்பு கேட்டனர்.

"எனக்கு உங்கமேலே கோபமில்லே.. நான் கோபப்படாமே இருக்கணும்னு ஒண்ணு... செய்யணும்!"

அந்த வலியையும் மீறி வார்த்தைகள் வந்தன.

"நிகழ்ச்சியிலே கலந்துக்கணும்! அதுதானே?" ஒருவன் கெஞ்சினான்.

"ஆமாம்!"

"செய்யறோம்!" கோரசாய் இரைந்தனர்.

சுபாஷின் முகத்தில் நிம்மதிக் கீற்று ஓடியது!

"அப்புறம்... அப்புறம்... என்னோடு சேர்ந்து எல்லோரும் இப்போது தேசிய கீதம் பாடணும்... என்ன?"

"பாடறோம்பா... பாடறோம்...." என்று தலையசைக்க...

"இந்த நேரத்திலே என்னமோ கேக்கப் போறாய்னு நெனைச்சா..." என்று கிழவர் குலுங்கினார்.

அடுத்த நிமிடம்.

அந்த வட்டாரமே தேசிய கீதத்தில் எதிரொலித்தது. அந்த மாணவர்கள் தங்கள் வாழ்வில் அத்துணை ஆத்மார்த்தமாகப் பாடியிருப்பார்களா... சந்தேகமே!

பாடல் முடியும் போது 'சல்யூட்' அடிக்க கையைத் தூக்கவும், அவன் ஆவி பிரியவும்...

மாணவர் தலைவர்கள் உண்மையாகக் குலுங்கி அழுதனர்.

கூட்டத்தை விலக்கிக் கொண்டு வாசு, சுபாஷின் தந்தையோடு வர,


"மோசம் பண்ணிட்டுப் போயிட்டேடா..."

என்று அவர் அலற,

"சார்...! இந்த புள்ளையோட அப்பாவா... நீங்க...? மோசம் பண்ணிட்டுப் போவலே சார் அவன்! உங்களைத் தலை நிமிர வைச்சிட்டுப் போயிருக்கான்..

ஆமாம் சார்! காந்தியோட இந்த நாட்டிலே அகிம்சை செத்துப் போச்சு. வன்முறை தலை தூக்கிடுச்சின்னு சிலர் சொல்றாங்க! இல்லே.. இல்லே! அகிம்சை என்னைக்கும் சாகாது! என்னதான் வன்முறை தலை விரிச்சாலும், அகிம்சைக்கு முன்னாலே அது வலுவிழந்து போகும்னு இந்தப் பையன் நிரூபிச்சிட்டான்! ஆமாம்... நிகழ்ச்சிக்குப் போகக் கூடாதுன்னு அவனைத்தடுத்துக்கொளுத்தினவனெல்லாம் கடைசியிலே கண்ணீர் விட்டு அழுதாங்களே! நிகழ்ச்சிக்குப் போறேன்னு ஒத்துக்கிறாங்களே! அது தான் அகிம்சையோட வெற்றி!

அந்தக் கிழவர் புலம்பிக் கொண்டிருந்தார்.



தங்கப் பொட்டுப் போலே ஒன்று
தாவி வானில் வருகுது!
திங்கள் என்னும் பேரைக் கொண்டு
தினமும் நெஞ்சைக் கவருது!

'மாமா' என்றே அம்மா சொன்ன
மஞ்சள் நிலவோ ஓடுது!
பூமா தேவி பொன்னைச் சுற்றிப்
பொலிவாய் நாளும் ஆடுது!

மாதம் ஒருநாள் மதியும் கூட
மயங்கி எங்கோ போகுது!
'நீதான் கதியே!' என்னும் மாந்தர்
நெஞ்சில் ஒளியாய் வாழுது!

வானில் முகிலும் ஆசை கொண்டு
வளரும் மதியைத் தேடுது!
தேனைச் சொரியும் நிலவால் தானே
இரவும் பகலாய் ஆகுது!

அழகில் நிலவாய் ஆக என்னுள்
ஆசை நாளும் மலருது!
உலகில் நிலவின் ஒளியாய் மாற
ஊக்கம் மேலும் வளருது!

சி. இராஜசேகரன்

கோகுலம் சிறுவர் சங்கம்

கிண்டி, சென்னை - 600 032

இச்சங்கத்தில் யார் சேரலாம்?

தமிழ் தெரிந்த சிறுவர்கள், உலகில் எங்கிருந்தாலும், அவர்கள் கோகுலம் சிறுவர் சங்கத்தில் சேரலாம்.

15 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டுமே இதில் உறுப்பினராக முடியும்.

உறுப்பினர் ஆனதும்...

உங்கள் உறுப்பினர் மனு கிடைத்ததும், உங்களை உறுப்பினராக ஏற்றுக் கொண்டு, ஒவ்வொருவருக்கும் கோகுலம் முத்திரையுடன் (பிள்ளையாரும் கண்ணனும்) கூடிய உறுப்பினர் அட்டையை அனுப்புவோம்.

அதில் ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஓர் எண் கொடுக்கப்பட்டிருக்கும். உறுப்பினர் பெயர், பிறந்த நாள், முகவரி அந்த அட்டையில் இருக்கும்.

பயன் என்ன?

உறுப்பினரான பின், நீங்கள் கோகுலத்திற்குக் கதைகள், கவிதைகள், நகைச்சுவைகள், துணுக்குகள், ஓவியங்கள், இன்னும் பயனுள்ள விஷயங்களை அனுப்பலாம். யோசனைகளையும், கருத்துக்களையும் தெரிவிக்கலாம். நன்றாயிருந்தால் வெளியிடுவோம்.

நீங்கள் எழுதும் கதைகள், கவிதைகள், நகைச்சுவைகள் — யாவுமே உங்கள் சொந்தக் கற்பனையில் எழுந்ததாக இருக்க வேண்டும். அறிவியல் போன்ற ஒரு துணுக்கை அனுப்பும் போது, அதற்கு எது ஆதாரம் எனக் குறிப்பிட வேண்டும்.

ஒரு கதை அல்லது கவிதை நன்றாக இருந்தால், அதை கோகுலத்தில் வெளியிடும் முன்பாக அதை எழுதிய உறுப்பினருக்குத் தெரிவித்து, புகைப்படம் அனுப்பும்படி கேட்போம். உறுப்பினரின் எழுத்தோவியத்துடன் புகைப்படமும் கோகுலத்தில் வெளிவரும்.

உறுப்பினர் கட்டணம் உண்டா?

இல்லை. கீழேயுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து இப்பக்கத்தை (முழுப் பக்கம்) அப்படியே கோகுலம் முகவரிக்கு அனுப்பினால் போதும். தமிழ்நாட்டில் உள்ளவர்கள், தமிழிலேயே தெளிவாக முகவரியை எழுதுவதுடன், ஊர்ப் பெயரின் பக்கத்திலே பின்கோடு குறிப்பிடுவது அவசியம். தமிழ்நாட்டுக்கு வெளியில் உள்ளவர்கள் முகவரியை ஆங்கிலத்திலே எழுத வேண்டும்.

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர் மனு

பெயர்:

தகப்பனார்
அல்லது
வீட்டிலுள்ள பெரியவர் பெயர்:

முழு முகவரி:

தேதி: பின்கோடு.................... கையெழுத்து.

மீன் கடை

ஓர் ஊரில் ஒருவன் புதிதாக மீன் கடை வைத்தான். தான் கடை வைத்திருப்பது எல்லோருக்கும் தெரிய வேண்டும் என்பதற்காகப் பலகை ஒன்றில் மிக அழகாக மீன் படம் வரைந்து அதன் கீழே 'நல்ல மீன் இங்கே விற்கப்படும்' என்று எழுதிக் கடைக்கு வெளியே வைத்திருந்தான்.

சிறிது நேரத்தில் அவன் நண்பன் ஒருவன் அங்கே வந்தான். பலகையைப் பார்த்தான். பிறகு கடைக்காரனைப் பார்த்து, "நீ வேறெங்காவது கடை வைத்திருக்கிறாயா?" என்று கேட்டான்.

"இல்லையே" என்றான் கடைக்காரன்.

"அப்படியானால், தேவையில்லாமல் பலகையில் ஏன் 'இங்கே' என்ற சொல் உள்ளது. அதை அழித்து விடு" என்றான்.

நண்பனின் கருத்தை ஏற்றுக் கொண்டான் கடைக்காரன். இப்பொழுது, பலகையில் மீன் படத்துடன் 'நல்ல மீன் விற்கப்படும்' என்று இருந்தது.

அங்கு வந்த மற்றொருவன் பலகையைப் பார்த்தான். பிறகு கடைக்காரனைப் பார்த்து, "நீ கெட்டுப் போன மீனை எப்போதும் விற்பதில்லையே, எதற்காகத் தேவையில்லாமல் 'நல்ல' என்ற சொல்? அதை அழித்துவிடு" என்றான்.

இப்பொழுது மீன் படமும், கீழே மீன் விற்கப்படும்" என்ற தொடரும் இருந்தது.

அடுத்து வந்த வேறொருவன், "மீன் என்று எழுதியிருக்கும்போது மேலே எதற்கு 'மீன் படம்?'" என்று கேட்டான்.

பலகையில் இப்பொழுது 'மீன் விற்கப்படும்' என்று மட்டுமே இருந்தது.



நான்காவதாக வந்தவன், "மீனை யாருக்கும் இனாமாகக் கொடுப்பதில்லையே? எதற்காக 'விற்கப்படும்' என்ற சொல்?" என்றான்.

இப்பொழுது பலகையில் வெறும் 'மீன்' என்ற சொல் மட்டுமே இருந்தது.

அடுத்து வந்தவன், "தூரத்திலிருந்து வரும் பொழுதே மீன் நாற்றம் மூக்கைத் துளைக்கிறதே! பின்பு ஏன் 'மீன்' என்று எழுதியிருக்கிறாய்?" என்று கேட்டான்.,


கடையின் முன் இப்பொழுது வெறும் பலகை மட்டும்தான் இருந்தது.

அங்கே வந்த இன்னொருவன், "என்ன, கடைக்கு முன்னே வெறும் பலகையை வைத்திருக்கிறாய்? இதில் ஒரு மீன் படம் வரைந்து, கீழே 'நல்ல மீன் இங்கே விற்கப்படும்' என்று எழுதினால், எவ்வளவு நன்றாகவும், உன் வாணிகத்திற்குப் பயனாகவும் இருக்கும்" என்று சொன்னான்.

சொன்னவர் : ஏ. சோதி

டாக்டர் பக்கம்

மாலைக்கண் நோய்



டாக்டர் கு. கணேசன்

அது ஒரு விடுமுறை தினம்.

மாடியில் நான் அமர்ந்திருந்தேன். கீழே விளையாடிக் கொண்டிருந்த தினகர், நான் ஓய்வாக இருப்பதை அறிந்து என்னிடம் வந்தான். தினகர் என் அண்ணன் மகன். ஆறாம் வகுப்பில் படிக்கிறான். புத்திசாலிப் பையன். விடுமுறையில் இங்கு வரும் போதெல்லாம் அது என்ன, இது என்ன என்று ஆயிரம் சந்தேகங்களைக் கேட்டு என்னை அயர வைப்பான். நானும் அவனுக்குப் பொறுமையாகப் பதில் சொல்லிப் புரிய வைப்பேன்.

அப்படித்தான் அன்றும் ஆரம்பித்தான் தினகர் —

தினகர்: சித்தப்பா, மாலைக் கண் நோய் என்றால் என்ன? நான் தெரிந்து கொள்ளலாமா?

நான்: என்ன தினகர், திடீரென்று மாலைக் கண் நோயைப் பற்றிக் கேட்கிறாய்... ஏதாவது புத்தகத்தில் அதைப் பற்றிப் படித்தாயா, என்ன?

தினகர்: இல்லை சித்தப்பா! போன வாரம் எங்கள் பள்ளிக்கு இரண்டு டாக்டர்கள் வந்திருந்தனர். அவர்கள் பள்ளிக் குழந்தைகள் அனைவரையும் பரிசோதித்துப் பார்த்தனர். சில குழந்தைகளுக்கு ஏதேதோ நோய் இருப்பதாகக் கூறி வைத்தியம் செய்தனர். அதில், என் வகுப்பில் நண்பன் ஒருவனுக்கு 'மாலைக் கண் நோய்' இருப்பதாகவும், முறையாக வைத்தியம் பார்க்காவிட்டால் அவனுக்குப் பார்வை குறைந்து கண் குருடாகிவிட வாய்ப்புள்ளதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான் அந்நோயைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

நான்: அப்படியா, மிக்க சந்தோஷம் தினகர். மாலைக் கண் நோயைப் பற்றி உன்னை மாதிரிக் குழந்தைகள் தான் அதிகம் தெரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் இந்நோய் பெரும்பாலும் குழந்தைகளுக்குத்தான் அதிகமாக வரும்.

தினகர்: அப்படியென்றால் மாலைக் கண் நோயைப் பற்றி எனக்கு விவரமாகச் சொல்லுங்களேன், சித்தப்பா!

நான்: சொல்கிறேன், கேள். மாலைக்

கண் நோய் என்பது 'வைட்டமின்—ஏ' என்ற சத்துக் குறைவினால் வரக் கூடிய ஒரு வகைக் கண் நோய். இது அதிகமாக, குழந்தைகளைத்தான் பாதிக்கும். இந்நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இரவு நேரங்களிலும், வெளிச்சம் குறைந்த இடங்களிலும் பார்வை சரியாகத் தெரிவதில்லை. அதாவது பகல் வேளை முடிந்து மாலை நேரம் ஆரம்பமானதும், அக்குழந்தைகளுக்குப் பார்வை குறைய ஆரம்பித்துவிடும். அதனால்தான் இந்நோயை 'மாலைக் கண் நோய்' என்று அழைக்கிறார்கள். இதையே ஆங்கிலத்தில் 'Night Blindness' என்று சொல்கிறார்கள்.

தினகர்: ஏன் சித்தப்பா, மாலைக் கண் நோய் உள்ளவர்களுக்கு இரவில் மட்டும் ஏன் பார்வை குறைகிறது? அதற்கென்று பிரத்தியேகமாக ஏதேனும் காரணம் இருக்கிறதா சித்தப்பா?

நான்: ஆமாம், தினகர். காரணம் இருக்கிறது. அதையும் உனக்குச் சொல்கிறேன், கேள். நம் கண்ணில் உள்ள விழித்திரையில் (Retina) கோன்ஸ், ராட்ஸ் என்ற இரு பகுதிகள் உள்ளன. இவற்றில் நமக்குப் பகலில் பார்வை நன்றாகத் தெரிய கோன்ஸ் என்ற பகுதியும், இரவு நேரங்களில் பார்வை தெளிவாகத் தெரிய ராட்ஸ் என்ற பகுதியும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இதில் ராட்ஸ் என்ற பகுதி செம்மையாக இயங்க வேண்டுமானால் வைட்டமின் — ஏ சத்து நம் உடலில் தேவையான அளவு இருக்க வேண்டும். மாலைக் கண் நோய் உள்ளவர்களுக்கு வைட்டமின் — ஏ சத்துக் குறைவாக இருக்குமல்லவா? அதனால் ராட்ஸ் பகுதி சரியாக இயங்காது. எனவே, மாலைக் கண் நோயாளிகளுக்கு இரவில் சரியாகப் பார்வை தெரிவதில்லை!

தினகர்: என் சந்தேகத்திற்கு நன்றாக விளக்கமளித்தீர்கள் சித்தப்பா! நன்றி. ஏன் சித்தப்பா, இந்த மாலைக் கண் நோய் எல்லாக் குழந்தைகளுக்குமே வருமா?

நான்: இல்லை, தினகர். மாலைக் கண் நோய் பெரும்பாலும் ஏழைக் குழந்தைகளுக்கும், வறுமையில்

மார்கோனியின் உதவி!


கம்பியில்லாத் தந்தியைக் கண்டு பிடித்த மார்கோனியிடம் அவரது நண்பருடைய மகன் வந்து, ''ஐயா, தாங்கள் ஆண்டவனுடன் பேச முடியுமா?'' என்று கேட்டான். அதற்கு அவர், ''ஏன் இப்படிக் கேட்கிறாய்?'' என்றார்.

''என்னுடைய நாய்க்குட்டி நோயினால் மிகவும் துன்பப்படுகிறது. 'அதை சொர்க்கத்திற்கு அனுப்பி விடு' என்கிறார் என் அப்பா. ஆனால், நானோ அந்த நாயை என்னுடனே வைத்துக் கொள்ள விரும்புகிறேன்.



அதற்கு ஆண்டவன் அருள் புரிய வேண்டும்'' என்றான். உடனே மார்கோனி ''இயல்பான வழியில் ஆண்டவனை அடைய முடியாது'' என்று கூறாமல், தேவையான நடவடிக்கையைத் தான் எடுப்பதாகக் கூறி, அந்த நாய்க் குட்டியைக் கொண்டு வரச் செய்து, அதற்குத் தகுந்த வைத்தியம் செய்து நோயைக் குணப்படுத்தி அவனிடம் ஒப்படைத்தார். சிறுவன் அவருக்குப் பல முறை நன்றி கூறினான்.

ஆதாரம்: ஒலியின் கதை
தகவல்: வி. விஜயலட்சுமி,
சென்னை — 7.



வாடும் குழந்தைகளுக்கும்தான் வரும். காரணம் — அவர்களால்தான் சத்துள்ள உணவுகளை உண்ண இயலாது. பொதுவாக உன்னை மாதிரி பள்ளி செல்லும் குழந்தைகளுக்குத் தினமும் நீங்கள் சாப்பிடும் உணவில் 5500 I. U. Units வைட்டமின் — ஏ சத்து அவசியம்இருக்கவேண்டும். இந்தச்சத்தின் அளவு குறையும் எந்தக் குழந்தைக்கும் மாலைக் கண் நோய் வரலாம். நம் நாட்டில்மட்டும்சுமார் இரண்டுமில்லியன் குழந்தைகள் மாலைக் கண் நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றால் பார்த்துக் கொள்ளேன்!

தினகர்: சரி, சித்தப்பா, மாலைக் கண் நோயை எப்படிக் கண்டுபிடிப்பது? அதற்கென்று ஏதேனும் அறிகுறிகள் உண்டா?

நான்: உண்டு. இந்நோயின் ஆரம்பத்தில் குழந்தைகளுக்கு இரவு நேரங்களிலும், குறைவான வெளிச்சம் உள்ள இடங்களிலும் பார்வை குறைய ஆரம்பிக்கும். அப்போதே சுதாரித்துக் கொண்டு மருத்துவரின் ஆலோசனையோடு, தகுந்த மாத்திரைகளையோ, சத்துள்ள உணவுகளையோ எடுத்துக் கொண்டால், கண் — பார்வை இழப்பதைத்தவிர்த்துவிடலாம். அறியாமையின் காரணமாகவும் வறுமையின் காரணமாகவும் பலரும் மருத்துவரின் ஆலோசனையை நாடுவதில்லை. அம்மாதிரிக் குழந்தைகளின் கண்களில் விழி வெண் படலம் வறண்டு, நீர்ப்பசையிழந்து காணப்படும். இன்னும் நாள் படும்போது விழி வெண் படலத்தில் முக்கோண வடிவில் புள்ளிகள் தோன்றும். மேலும், சத்து குறைந்து, நோய் தீவிரமடையும்போது கருவிழி பாதிப்படைந்து பார்வை இழக்க நேரிடும்.

தினகர்: பாவம், சித்தப்பா! பார்வை போய் விட்டால் எத்தனை கஷ்டம்! இந்நோய் வந்து விட்டால் என்ன செய்ய வேண்டும் சித்தப்பா? அதையும் சொல்லுங்களேன்...

நான்: நோயின் ஆரம்பக் கட்டத்திலேயே மருத்துவரின் உதவியை நாட வேண்டும். மருத்துவர் தகுந்த பரிசோதனைகளுக்குப் பின் டானிக்குகளையும் கொடுப்பார். அவற்றை மருத்து

வர் சொல்லும் காலம் வரை தொடர்ந்து சாப்பிட வேண்டும். வைட்டமின் — ஏ சத்து உள்ள ஊசிகள் உள்ளன. அவற்றையும் மருத்துவர் பயன்படுத்துவார். அதுமட்டுமல்லாமல் வைட்டமின் — ஏ சத்து நிறைந்த உணவுகளையும் உண்ண வேண்டும்... அம்மாதிரிச் சத்துள்ள உணவுகளை உட்கொண்டால்தான் மீண்டும் மாலைக் கண் நோய் வராமல் தடுக்க முடியும்.

தினகர்: அந்தச் சத்துள்ள உணவுகளை எனக்கும் சொல்லுங்கள், சித்தப்பா!

நான்: சொல்கிறேன், கேள். முட்டை, பால், மீன், கீரை, காரட், முருங்கை, பூசணி, பப்பாளிப்பழம், மாம்பழம் போன்றவற்றில் வைட்டமின் — ஏ சத்து அதிகமாக உள்ளது. இவற்றில் ஏதேனும் ஒன்றைத் தினமும் நம் உணவில் சேர்த்துக் கொண்டால் போதும். நமக்கு வைட்டமின் — ஏ சத்துக் குறைவும் வராது; மாலைக் கண் நோயும் வராது.

தினகர்: அப்படியென்றால் நீங்கள் சொன்ன இந்தச் சத்துள்ள உணவுகளை எல்லாக் குழந்தைகளும் சாப்பிட்டு வந்தால் மாலைக் கண் நோயை வரவிடாமல் தடுத்து விடலாம் என்று சொல்கிறீர்கள்... அப்படித்தானே சித்தப்பா?

நான்: ஆமாம், தினகர். சத்துள்ள உணவுகளைச் சாப்பிட்டால் மாலைக் கண் நோய் போன்ற சத்துக் குறைவு நோய்களை நிச்சயம் தடுத்து விடலாம். அது போக நோய் வந்த பிறகு மாத்திரைகளுக்கும் மருந்துகளுக்கும் பணத்தைச் செலவழிப்பதற்குப் பதிலாக, அதே பணத்தைக் கொண்டு நோய் வருவதற்கு முன்பே சத்துள்ள உணவுகளை வாங்கி உட்கொண்டால் நோய் நொடியின்றி உடலும் உறுதியாக இருக்கும். கண்களில் பார்வையும் ஒளி படைத்ததாய் இருக்கும்! இல்லையா தினகர்?

தினகர்: உண்மை, சித்தப்பா! நான் ஊருக்குத் திரும்பியதும் என் நண்பனுக்கு இந்நோயைப் பற்றி விளக்கிச் சொல்லி, அவன் பார்வை இழப்பதைத் தவிர்த்து, ஒளி படைத்த கண்களை மீட்பதற்கு நான் உதவப் போகிறேன், சித்தப்பா!

நான்: மிக்க சந்தோஷம். வா, கீழே போய் டிபன் சாப்பிடுவோம். நேரமாகிவிட்டது! (இருவரும் கிளம்பினோம்).



சங்கருக்குத் தெரியாது!

பெரியநம்பி

மணி அடித்து ஓய்ந்தது.

கூட்டில் இருந்து தப்புகின்ற கிளிகளைப் போல குழந்தைகள் பாய்ந்து வந்தனர், பள்ளியில் இருந்து. அவர்களுடைய முகத்தில்தான் எத்தனை மகிழ்ச்சி!

அம்மா வீட்டில் எனக்காக ஏதாவது செய்து வைத்திருப்பார் என்று ஓடுகின்ற குழந்தைகள் பலர். அலுவலகம் சென்று திரும்புகின்ற அப்பா, ஆசையுடன் தின்ன ஏதாவது வாங்கி வந்து இருப்பார் என்று எண்ணிப் பாய்கின்ற குழந்தைகள் பலர். வீட்டில் அம்மாவிடம் காசு வாங்கிக் கொண்டு போய் தின்னப் பிடித்தவற்றை வாங்கித் தின்ன ஓடுகின்ற குழந்தைகள் பலர்.

பத்துப் பதினைந்து நிமிடங்களில் பள்ளி வெறிச்சோடி விட்டது.

சங்கர் அந்தக் குழந்தைகளில் ஒருவன். படிப்பில் கெட்டிக்காரன். சங்கரின் அப்பா ஒரு பழ வியாபாரி. ஆப்பிள் பழங்களைத் தலைச்சுமையாய்க் கொண்டு போய் விற்பவர்.

வீட்டிற்கு வந்த சங்கர், முகம் கை கால் கழுவி பந்தாடப் போவதற்கு முன்பாக அவன் அம்மா அவனுக்குப் பிடித்தமான இரண்டு வாழைப் பழங்களைத் தந்தார்.

பந்தாடி விட்டு வரும் போது, அவனுக்காக அவன் அப்பா காத்திருந்தார்.

இரவு ஒன்றாகத்தான் உண்பது அவர்கள் வழக்கம்.

காலையில் அவன் பள்ளித் தோழன் இரத்தினம், சங்கரிடம் சொன்னதைத் தன் அப்பாவிடம் சொல்ல வேண்டும் என்று ஆவலுடன் காத்து இருந்தான்.

அம்மா உணவு பரிமாறினாள், சங்கருக்கும் அவன் அப்பாவிற்கும்.


இருவரும் உண்ண அமர்ந்தனர்.

''அப்பா! எனக்கு இரத்தினம்னு ஒரு நண்பன். அவனிடம் யாரோ ஒரு பழக் கூடைக்காரர் இன்று காலை அநியாய விலைக்கு ஒரு டஜன் ஆப்பிள் பழத்தை விற்று விட்டாராம். பேரம் பேசத் தெரியாத இரத்தினமும் பழக் கூடைக்காரர் சொன்ன விலைக்கு அந்தப் பழங்களை வாங்கியிருக்கிறான். பழக் கூடைக்காரர் சொன்ன விலை நியாயமாகத்தான் இருக்கும் என்று நம்பி வாங்கிய இரத்தினத்திற்கு திட்டோ திட்டு என்று அவன் அம்மாவிடம் இருந்து நிறையக் கிடைத்து இருக்கிறது. இன்று காலையில் அவன் யார் முகத்தில் விழித்தானோ, தெரியவில்லை. பாவம், இரத்தினம்'' என்று பேசத் தொடங்கினான் சங்கர்.

''அப்படியா? பாவம்! ஒரு டஜன் எத்தனை ரூபாய்க்கு வாங்கினானாம், அவன்?''

''என்ன கொடுத்தான் என்று தெரியவில்லை. ஆனாலும் அநியாய விலைதானாம். சின்னப் பையன், குறைத்துக் கேட்கத் தெரியாது என்ற தைரியத்தில் நூற்றுக்கு நூறு இலாபம் வைத்து விற்று இருக்கிறார். அதாவது பத்து ரூபாய்க்குக் கிடைக்கின்ற பழத்தை இருபது ரூபாய்க்கு விற்று விட்டாராம்.

''அந்தச் சிறுவன் பழம் வாங்க மாட்டான், விளையாட்டிற்கு விலை கேட்கிறான், என்று அந்தக் கடைக்காரர் அப்படிச் சொல்லியிருக்கலாமல்லவா?''



மனிதனின் கையில் உள்ள நடுவிரல் நகம் மற்ற நகங்களை விட வேகமாக வளர்கிறது. கட்டை விரல் நகம் மிக மெதுவாக வளர்கிறது.

— ஆர். எஸ். சுப்பிரமணியன்.

''இருக்கட்டுமே. பழம் கொடுத்த பிறகாவது நியாயமான விலையைப் பெற்றுக் கொண்டிருக்கலாமே!''

''ஆம். அப்படித்தான் செய்திருக்க வேண்டும்!''

''இப்படிப்பட்ட கூடைக்காரர்கள் இருந்தால், ஒரு சின்னப் பையனை வஞ்சித்த பாவம் எல்லாருக்கும் அல்லவா வருகிறது. அது மட்டுமா? கூடைக்காரர்கள் என்றாலே, கொள்ளை லாபம் அடிப்பவர்கள் என்ற கெட்ட பெயரும் அல்லவா ஏற்பட்டு விடுகிறது! சங்கரின் அப்பா கேட்டுக் கொண்டே இருந்தார். பதில் ஒன்றும் சொல்லவில்லை.

சங்கரின் அம்மா செய்திருந்த ஊத்தப்பம் சுவைக்கவில்லையோ என்னவோ, அவர் பாதியைத் தட்டில் வைத்து விட்டு எழுந்து விட்டார்.

சங்கர், அம்மா செய்திருந்த ஊத்தப்பத்தைச் சுவைத்துத் தின்ற பின் கை அலம்பி எழுந்து வந்தான்.

சங்கரை அழைத்தார் அவன்



அப்பா.

''சங்கர்! உனக்கு உன் நண்பன் இரத்தினத்தின் வீடு தெரியும் அல்லவா? நீ ஒரு காரியம் செய். நான் கொஞ்சம் பழங்கள் தருகிறேன். நீ அதைக் கொண்டு போய் அவனிடம் கொடுத்து விட்டு வா'' என்றார்.

'சரி' என்று சொல்லி, அப்பாவிடம் பழங்கள் சிலவற்றை வாங்கி ஒரு பையில் இட்டு, இரத்தினத்தின் வீட்டை நோக்கி விரைந்தான்.

காலையில் ஒரு சின்னப் பையனுக்கு ஒரு டஜன் ஆப்பிளுக்கு, இரண்டு டஜன் பழங்களுக்கு உரிய விலையை வாங்கி இருந்தது, அவனுடைய அப்பாதான் என்ற விவரம் சங்கருக்குத் தெரியாது!

சங்கர், இரத்தினத்தின் வீடு நோக்கி விரைந்து கொண்டு இருந்தான், மகிழ்ச்சியுடன்!

Parry's

Funpage



மிட்டாய் மன்னன் சொல்லித் தருகிறார்—
கற்றுக்கொள்ளவும் பொழுது போக்கவும்
குதூகலமான யோசனைகள்!

மிட்டாய் மன்னன் என்ன செய்கிறார்? புள்ளிகளை இணைத்துப் பாருங்கள். பிறகு படத்திற்கு வர்ணம் பூசுங்கள். உங்கள் அபிமான மிட்டாய் மன்னனின் படத்தை உங்கள் ஆல்பத்தில் ஒட்டி வையுங்கள்.




மிட்டாய் மன்னன் உங்களைப் பற்றி தெரிந்துகொள்ள விரும்புகிறார். ஆகவே, உங்கள் பெயர், விலாசம், பிறந்த தேதி ஆகிய விவரங்களுடன் அவருக்கு கடிதம் எழுதுங்கள். விலாசம்:

The King of Sweets
P.O. Box No. 2040
Madras-600 001.

HTA 7132

சுவரொட்டி

வி.ர. வசந்தன்



தேர்வும் நெருங்கிக் கொண்டிருந்தது. தேர்தலும் நெருங்கிக் கொண்டிருந்தது.

ஊர் முழுவதும் தோரணங்களும், கொடிகளும், ஒலிபெருக்கியுமாகத் திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. தேர்தலுக்கு இன்னும் சில நாட்களே இருந்ததால், போட்டி போட்டுக் கொண்டு யானைக் கட்சியைச் சேர்ந்தவர்களும், பானைக் கட்சியைச் சேர்ந்தவர்களும், தங்கள் கட்சிகளுக்காக வலிந்து பிரசாரம் செய்தனர். போட்டி மிகவும் கடுமையாக இருக்கும் போலிருந்தது.

இந்த ஆரவாரங்களுக்கெல்லாம் அவ்வளவு செவிசாய்க்காது தன் பாடங்களில் கருத்தைச் செலுத்தினான் கருணாகரன்.

ஆனால், அன்று மாலை அவனது நண்பன் பழனிவேலு மிகவும் வற்புறுத்தியதன் பேரில் வேறுவழியின்றி யானைக்கட்சியின் சார்பில் போட்டியிடும் பூதலிங்கத்தின் சொற்பொழிவைக் கேட்க அவனுடன் சென்றான்.

வண்ணவிளக்கு அலங்காரங்களுடன் அமைக்கப்பட்டிருந்த பிரம்மாண்டமான மேடையில் பூதலிங்கம் பேசிக் கொண்டிருந்தார். பெருந்திரளான மக்கள் அவரது பேச்சை மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்தனர்.

“நேர்மையும், தூய்மையும் எனக்கு இரண்டு கண்களைப் போல; அன்பும், அகிம்சையும் வளர்ந்த இந்தப் புண்ணிய தேசத்தில் பிறந்தவன் நான், அநீதியும், அக்கிரமமும் நான் அறியாதவை. நான் வெற்றியடைந்தால், இந்தத் தேசத்தை நேர்மையின் பாதையில் இட்டுச் செல்லும் வழிகாட்டியாய்த் திகழ்வேன்...”

மேடையில் பேசிக் கொண்டிருந்த பூதலிங்கத்தின் பேச்சில் கவரப்பட்டு, கூட்டம் கைகளை, படபடவென்று தட்டியது.

நேர்மை, நேர்மையென்று முழங்கிய அந்த நேர்மையாளரின் பேச்சில் பெரிதும் மனம் பறி கொடுத்தான் கருணாகரன்.

கல்வியிலும், தொழிற்துறையிலும் தேசம் பின் தங்கியிருப்பது குறித்து அவர் மிகவும் கவலைப்பட்டார். தூய்மையான மனத்தோடு, நேர்மையாக ஒவ்வொருவரும் உழைத்து, இந்த நாட்டை முன்னேற்ற வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

கருணாகரனின் மனம் இப்போது அவரை ஓர் ஒப்பற்ற தலைவராக ஏற்றுக் கொண்டு விட்டது. 'இந்த அருமையான சொற்பொழிவைக் கேட்காமல் தவற விட இருந்தேனே!' என்று அவன் தன்னையே கடிந்து கொண்டான்.

அவர் சொற்பொழிவை முடித்துக் கொண்டதும் கூட்டம் கலைய ஆரம்பித்தது. கருணாகரனுக்குப் படிக்க வேண்டிய பாடங்கள் நினைவுக்கு வந்தன. அவன் அவசரமாக வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்த போது, பின்னால் வேகமாக வந்த பழனிவேலு அவன் முதுகைத் தட்டினான்.

''என்ன கருணாகரா? அதுக்குள்ளே திரும்பிட்டே'' என்று கேட்டுப் புன்னகை புரிந்தான் அவன்.

''கூட்டந்தான் முடிஞ்சு போச்சே, அப்புறம் என்ன?'' என்றான் கருணாகரன்.

''இல்லேப்பா, இன்னைக்கு இராத்திரி முழுவதும் வேலை இருக்கு. நீயும் வந்து கொஞ்சம் உதவி செய்தால் நல்லாயிருக்கும்.'' என்றான் பழனிவேலு.

''என்ன வேலை?'' என்று கருணாகரன் கேட்க, ''தலைவருக்கு ஆதரவா, இன்றைக்கு நகர் முழுவதும் சுவரொட்டி ஒட்டணும். அதுதான் நீயும் வந்தேன்னா உதவியாக இருக்கும்'' என்று சொன்னான் அவன்.

கருணாகரன் தயங்கினான். படிக்க வேண்டிய பாடங்கள் அதிகம் இருப்பது அவனை அச்சுறுத்தியது. அதே நேரம் நேர்மையும், தூய்மையும் நிறைந்த ஒரு பண்பாளருக்கு உதவுவதில் தப்பில்லையே என்றும் இன்னொரு மனம் நினைத்தது.

சற்றுநேரம் யோசித்த கருணாகரன் ''சரி பழனி, நான் வீட்டுக்குப் போய்க் கொஞ்ச நேரம் படிச்சுட்டு, அம்மாகிட்டே சொல்லி அனுமதி வாங்கிட்டு வந்துடறேன்'' என்றான்.

''சரிடா, நம்ம மணிக்கூண்டு இருக்கே, அங்கே ராத்திரி பத்து மணிக்குள்ளே வந்திடு. அங்கே இருந்துதான் சுவரொட்டி ஒட்ட ஆரம்பிக்கணும்'' என்றான் பழனிவேலு.

எப்படிப் பெற்றோரிடம் அனுமதி பெறுவது என்ற சிந்தனையில் வீட்டை நோக்கி நடந்தான் கருணாகரன்.

அன்று இரவு கருணாகரனுக்கும் அவன் தந்தைக்கும் உணவு பரிமாறிக் கொண்டிருந்தாள் அவன் தாயார். எப்படிப் பேச்சை ஆரம்பித்து அனுமதி பெறுவது என்று புரியாமல் மனத்துக்குள்ளேயே தயங்கிக் கொண்டிருந்தான் அவன். அப்பா எதற்கும் அவ்வளவு சுலபத்தில் அனுமதியளித்து விடமாட்டார். எதையும் தீர ஆலோசித்துச் செயலில் இறங்கும் பழக்கம் உடையவர் அவர்.

The following particulars regarding the ownership of 'GOKULAM' the Tamil Monthly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication: Madras
2. Periodicity of Publication: Monthly
3. Name of Printer: V. Murali
   Nationality: Indian
   Address: AA-117, Shanthi Colony,
   Anna Nagar,
   Madras-600 040
4. Name of Publisher: V. Murali
   Nationality: Indian
   Address: AA-117, Shanthi Colony,
   Anna Nagar,
   Madras-600 040
5. Name of Editor: K. Rajendran
   Nationality: Indian
   Address: 1, Fifth Street,
   Lake Area,
   Nungambakkam,
   Madras-600 034.
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital: Bharathan Publications Private Limited, 84/1-C, Race Course Road, Guindy, Madras-600 032.

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

V. Murali
Publisher

1.3.1988

ஒருவாறாக மனத்தைத் திடப்படுத்திக் கொண்ட கருணாகரன் மெதுவாக, ''அப்பா! நம்ம பூதலிங்கம் ஐயா இல்லே, தேர்தலுக்கு நிக்கறாரே. அவருக்கு உதவியாக இன்றைக்கு ராத்திரி சுவரொட்டி ஒட்டணும்னு என்னையும் கூப்பிட்டிருக்காங்க. போயிட்டு வரட்டுமா?'' என்று கேட்டான்.

அதைக் கேட்டதும் புருவத்தை உயர்த்தி அவனை வியப்புடன் பார்த்தார் தந்தை. ''தேர்தலுக்குச் சுவரொட்டி ஒட்ட நீ போறியா! படிக்கிற பையனுக்கு இதென்ன ஆசை?'' என்று அவனைப் பார்த்தார்.

''எனக்கு ஆசை இல்லேப்பா. என்னோட படிக்கிறானே பழனிவேலு, அவன்தான் இதையொரு உதவியாகக் கேட்டான். அதுதான் மறுக்க முடியல்லே'' என்று மென்று விழுங்கினான் அவன்.

''ஏன் மறுக்க முடியல்லே?'' என்ற கேள்வியுடன் அவனை ஏறிட்டார் தந்தை.

''ரொம்பவும் நேர்மையான ஒரு மனிதருக்காக ஓர் உதவியைச் செய்யறதிலே தப்பில்லேன்னு நினைச்சேம்பா'' என்றான் கருணாகரன்.

அதைக் கேட்டதும் இதுவரை கடுமையாக இருந்த தந்தையின் முகம் மாறி அமைதியடைந்தது. அவனைப் பார்த்து, ''ஏம்பா, அவர் ரொம்பவும் நேர்மையானவர்னு உனக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டார்.

அப்பாவின் குரல் சாந்தமாகிவிட்டதைக் கவனித்த கருணாகரன் நிம்மதியடைந்தான். ''இன்னிக்கு அவரோட பேச்சை நான் கேட்டேம்பா. நேர்மையையும், தேச முன்னேற்றத்தையும் பற்றி ரொம்ப அழகாப் பேசினாரு; அவரை மாதிரி ஆளுகளாலே நம்ம நாடு முன்னேறும்னு எம் மனசுல பட்டுச்சு. அதுதான் நம்மாலே ஆன உதவியை அவருக்குச் செய்யலாமேன்னு ஒத்துக்கிட்டேன்.'' என்றான்.

அப்பாவின் முகத்தில் புன்முறுவல் தோன்றியது. ''கருணாகரா, நேர்மை என்கிறது வெறும் பேச்சிலே இல்லே. அது நம்முடைய ஒவ்வொரு செயலிலேயும் வெளிப்படணும். தேர்தலிலே தான் வெற்றியடைவதற்காக ஆயிரம் பேசலாம். தன்னை அரிச்சந்திரனாகக் காட்டிக்கலாம். உண்மை எது, பொய் எதுன்னு பகுத்தறிகிற வயசு உனக்கு இன்னும் வரலே. வெறும் பேச்சில் மயங்குகிற மனம் உன்னுடையது. பேச்சுக்குப் பின்னால் இருக்கிற சுயநலம், ஏமாற்று இதையெல்லாம் உன்னால் சரியாக இப்ப உணர முடியாது; அதனாலேதான் கல்வி கற்கிற இந்தச் சின்ன வயசிலே வேறு எந்தக் காரியத்திலேயும் மனத்தைச் சிதற விடாமல் படிக்கணும்; அடுத்தவங்களுடைய நேர்மையையும், தூய்மையையும் பற்றிக் கவலைப்படாமே, நாமே ஒரு நேர்மையாளனாக வாழ்ந்தா, அதுதான் இந்த நாட்டுக்கு நாம் செய்கிற பெரிய கடமையாகும். என்னவோ நீ ஒத்துக்கிட்டு வந்துட்டதாலே, இந்த ஒரு தடவை மட்டும் அனுமதியளிக்கிறேன். இனிமேல் இதுமாதிரிக் காரியங்களுக்கு நீ போகக் கூடாது'' என்று கண்டிப்புடன் சொன்னார் அப்பா.

''சரிப்பா'' என்று தலையசைத்தான் அவன்.



அன்று இரவு யானைக் கட்சியின் சுவரொட்டிக் கட்டுடன் பழனிவேலு முன்னால் நடக்க, பசையைக் காய்ச்சி ஒரு வாளியில் எடுத்துக் கொண்டு கருணாகரன் பின்னால் நடந்தான். அவன் வயதையொத்த இன்னும் இரண்டு மூன்று சிறுவர்களும் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர்.

ஊர் அடங்கிவிட்ட அந்த நள்ளிரவில் அவர்கள் கண்ணுக்குத் தட்டுப்பட்ட சுவர்களிலெல்லாம் தேர்தல் விளம்பரச் சுவரொட்டியை ஒட்டலாயினர்.

அவர்களுக்கு முன்பே பானைக் கட்சியினர் தங்கள் சுவரொட்டிகளை எல்லா இடங்களிலும் ஒட்டிவிட்டுப் போயிருந்தனர். அதைப் பார்த்துச் சலிப்பும் கோபமும் அடைந்தான் பழனிவேலு. ''என்னடா இது, பானைக்காரன் எல்லாச் சுவத்திலேயும் ஒட்டிட்டுப் போயிட்டான்! நமக்கு இடமேயில்லியே!'' என்று அங்கலாய்த்தான்.

''அவங்க ஒரு பக்கம் ஒட்டிக்கிட்டுப் போயிருக்காங்க, நாம வேறொரு பக்கமா ஒட்டலாமே! பொறுமையாகத் தேடினால் நமக்கும் இடம் அகப்படாமலா போகும்?'' என்று அவனை அமைதிப்படுத்தினான் கருணாகரன்.

திரைப்படச் சுவரொட்டிகளும், தேர்தல் பிரசாரங்களும், விளம்பரங்களும் அநேகமாக எல்லாச் சுவர்களையும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன. அவர்கள் வெற்றுச்சுவர் தேடி நடக்க ஆரம்பித்தனர்.

'ஆலயச்சுவர் — இதில் தயவுசெய்து எந்த விளம்பரமும் செய்ய வேண்டாம்' என்றும், 'விளம்பரம் செய்யக் கூடாது; மீறினால் தண்டிக்கப்படுவார்கள்' என்றும் சுவர்களில் ஆங்காங்கே எழுதியிருந்த வாசகங்கள் கருணாகரனைச் சங்கடப்படுத்தின.

''டேய், கோயில் சுவரிலேயும், தனியாருக்குச் சொந்தமான இடங்களிலேயும் நாம் சுவரொட்டி ஒட்டுறது எனக்குச் சரியாப்படல்லே; நம்ம தலைவர் நேர்மையைப் பற்றி எவ்வளவு பேசினாரு. அவர் கட்சி சுவரொட்டிகளையே இப்படித் தடைசெய்யப்பட்ட இடங்களிலே ஒட்டினால் எப்படி?'' என்றான்.

கருணாகரனின் கேள்வி பழனிவேலுக்கு எரிச்சலைத் தந்தது. ''யார்டா இவன், ஒரு சுவர் பாக்கி இல்லாமே எல்லா இடத்திலேயும் பானைக்காரன் ஒட்டிக்கிட்டுப் போயிருக்கான். நாம மட்டும் இப்படியெல்லாம் யோசிச்சா ஒரு போஸ்டர் கூட ஒட்ட முடியாது. பேசாமல் வா'' என்று அவனை அடக்கினான்.

கண்ணில்பட்ட இடங்களிலெல்லாம் அவர்கள் தங்கள் சுவரொட்டிகளை ஒட்டித் தள்ளிக்கொண்டு ஒரு தெருவுக்குள் நுழைந்தார்கள்.

அங்கு புதிதாக வெள்ளையடிக்கப்பட்டு, பளபளவென்று அழகான ஒரு நீண்ட மதில்சுவர் அவர்கள் கண்ணுக்குத் தட்டுப்பட்டது. சுற்றிலும் இருந்த சுவர்களிலெல்லாம் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்க, அந்தச் சுவர் மட்டும் தூய்மையாக இருந்தது அவர்களுக்கு வியப்பைத் தந்தது.

''சட்டுன்னு இந்தச் சுவரிலே நாலைஞ்சு இடங்களிலே ஒட்டிடலாம்'' என்று பழனிவேலு துரிதப்படுத்த, அவர்கள் சுவரொட்டிகளையும், பசை



வாளிகளையும் தூக்கிக்கொண்டு அங்கு ஓடினார்கள்.

அவசர அவசரமாகச் சுவரொட்டியைக்கீழே பரப்பி, பசையைத்தடவி, அந்தச் சுவரில் பழனிவேலு ஒட்ட முயன்ற போது, ''யார்டா அது, சுவரிலே போஸ்டர் ஒட்டறது?'' என்று கட்டைக் குரலில் உறுமிக் கொண்டு அந்தப் பங்களாவின் காவல்காரன் அங்கு வந்தான்.

''தேர்தல் சுவரொட்டிங்க இது. எல்லா இடத்திலேயும் ஒட்டிக்கிட்டு வர்றோம். அதுதான்....'' என்று தலையைச் சொறிந்தான் பழனிவேலு.

''எல்லாச் சுவத்திலேயும் ஒட்டுங்க; ஆனா இங்கே ஒட்டப்படாது. இது யாருடைய பங்களான்னு தெரியுமில்லே?'' என்று கேள்வியுடன் அவர்களை உருட்டி விழித்து நோக்கினான் அந்தக் காவலாள்.

''யாருடைய பங்களாங்க இது?'' என்று ஆர்வமும் தயக்கமும் போட்டியிடக் கேட்டான் கருணாகரன்.

''இது தலைவர் பூதலிங்கம் பங்களா. கடைசியா இங்கேயே போஸ்டர் ஒட்ட வந்துட்டீங்களா, ஓடுங்கடா'' என்று மிரட்டினான் காவல்காரன்.

''ஓ! இது அவர் பங்களாவா! அம்மன் கோயில் பக்கத்திலேயிருக்கிற வீட்டிலேதான் அவரை அடிக்கடி பார்த்திருக்கேன்'' என்றான் பழனிவேலு.

அதைக் கேட்டதும் கருணாகரனுக்கு எல்லையில்லாத தைரியம் வந்தது. ''அவருடைய தேர்தல் சுவரொட்டியைத்தான் நாங்க ஒட்ட வந்திருக்கோம்'' என்று குதூகலத்துடன் சொன்னான்.

அதைக் கேட்டதும் முகத்தைச் சுளித்தான் காவல்காரன். ''எந்தச் சுவரொட்டியையும் இங்கே ஒட்டப்படாது; அதுக்குத்தான் தனியா என்னைக் காவலுக்குப் போட்டிருக்கு'' என்றான்.

மேற்கொண்டு என்ன பேசுவது என்று தெரியாமல் அவர்கள் திகைத்து நிற்கையில், முகப்பிலிருந்த இரும்புக் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது.

கதவைத் திறந்து கொண்டு பூதலிங்கமே வெளியே வந்தார். அங்கு நின்று கொண்டிருந்தவர்களைப் பார்த்ததும் ''என்னடா தம்பிகளா, இங்கே சத்தம்?'' என்று கேட்டார்.

''போஸ்டர் ஒட்ட வந்தாங்க, ஒட்டக் கூடாதுன்னு தடுத்தேன். இது நம்ம கட்சிப் போஸ்டர்தான், அதனாலே ஒட்டுவோம்னு பிடிவாதம் பிடிக்கிறாங்க'' என்று புகார் சொன்னான் காவல்காரன்.

பூதலிங்கத்தின் உதட்டில் புன்னகை அரும்பியது. அவர்களைக் கனிவு ததும்பப் பார்த்து, ''தம்பிகளா, உங்களோட ஆர்வத்தை ரொம்பப் பாராட்டறேன், இது நம்ம பங்களா. இப்ப பெயின்ட் அடிச்சு மூணு நாள்தான் ஆச்சு. இங்கே ஒட்ட வேண்டாம். நாலு பெரிய மனுஷங்க என்னைப் பார்க்க வருவாங்க. அதனாலேதான் இங்கே ஒட்டிச் சுவரை அசிங்கப்படுத்த வேண்டாம்னு சொன்னேன்.'' என்று கூறிவிட்டு அவர்கள் தோள்களைத் தட்டிக் கொடுத்தார். பின் ஒரு புன்னகையுடன் கையை அசைத்துவிட்டு உள்ளே சென்றார்.


கருணாகரன் அதிர்ந்து போய் நின்றான். 'ஊரில் இருக்கிற சுவரிலெல்லாம் இவரது தேர்தல் விளம்பரச் சுவரொட்டியை ஒட்டலாமாம், இவரது வீட்டுச் சுவரில் மட்டும் ஒட்டக் கூடாதாம்! எப்படி நியாயம்? நேர்மை நேர்மை என்று மேடையில் முழங்கியவர் இந்தச் சிறு காரியத்திலேயே எப்படி நேர்மையைத் தவறவிடுகிறார்! இவர்தானா இந்தத் தேசத்தை நேர்மையின் பாதையில் அழைத்துச் செல்லப் போகிறார்?'

'நேர்மை என்பது பேச்சில் அல்ல, நம் செய்கையில் வெளிப்பட வேண்டும்' — அப்பா சொன்னது அப்போது அவன் காதில் ஒலித்தது.

''என்ன கருணாகரா, பேசாமே நின்னுட்டே, அடுத்த தெருவிலே போய்ப் பார்க்கலாம்'' என்று பழனிவேலு கேட்டபோது, அவன் சட்டென்று மறுத்துவிட்டுத் தன் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

'வீட்டில் இருந்திருந்தால், தேர்வுக்குப் படிக்க வேண்டிய பாடங்களைப் படித்திருக்கலாமே!' என்று அவன் மனம் வருந்தியது.

விபுலானந்த அடிகள்



இனிய இசையைத் தருகின்ற இசைக் கருவி யாழ். யாழிலே பல வகை: வில்யாழ், பேரியாழ், மகரயாழ், செங்கோட்டியாழ், சகோட யாழ். ஆயிரம் ஆண்டுகளாக மறைந்திருந்த இந்த இசைக் கருவிகளைப் பற்றி, 14 ஆண்டுகள் நுட்பமாக ஆராய்ந்து 'யாழ் நூல்' என்னும் ஒரு பெரிய நூலை இயற்றியவர் விபுலானந்த அடிகள்.

ஈழ நாட்டிலுள்ள காரைத் தீவு என்னும் ஊரில் பிறந்த இவரது இயற்பெயர் மயில் வாகனம். இளமையிலே துறவியாக வேண்டும் என்று ஆசைப்பட்டார். அந்த ஆசையுடன் சென்னை வந்தார். ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்து தொண்டாற்றினார். அப்போது இவருக்குக் காவி உடை வழங்கி, ஞான உபதேசம் செய்து 'சுவாமி விபுலானந்தர்' என்ற திருப்பெயர் சூட்டப் பெற்றது. பிறகு, ஈழநாடு திரும்பி அங்கு ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் கிளை ஒன்றை நிறுவினார். பற்பல கல்வி நிலையங்களையும், மாணவர் இல்லங்களையும் அமைத்தார். கொழும்பு, திரிகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் ஆசிரமங்களை உண்டாக்கினார்.

தமிழ் மொழியில் இவருக்கு இருந்த பெரும் புலமையைக் கண்டு, இவரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு அழைத்து வந்து முதல் தமிழ்ப் பேராசிரியர் பதவியை அளித்தார்கள். மூன்று ஆண்டுகள் அங்கு பணியாற்றினார். பின்னர், இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் முதல் தமிழ்ப் பெரும் பேராசிரியராக அமர்ந்து தமிழ் மொழிக்குப் பெருந் தொண்டாற்றினார்.

'மதங்க சூளாமணி', 'நடராஜ வடிவம்' போன்ற பல நூல்களை இயற்றியதோடு, கர்மயோகம், ஞான யோகம், விவேகானந்த தீபம், விவேகானந்த சம்பாஷணை போன்ற பல நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தும் தந்திருக்கிறார். இவர் நடத்திய 'பிரபுத்த பாரதா' என்ற வேதாந்தப் பத்திரிகை சிறந்த கருத்துக்களை விளக்கிக் கூறும் உயர்தர இதழாகத் திகழ்ந்தது.

விமர்சனப் போட்டி

1987 ஜனவரி முதல் டிசம்பர் முடிய 12 கோகுலம் இதழ்களிலும் வெளிவந்த கதைகளில் உங்களுக்கு மிகவும் பிடித்தமான கதை எது? எந்த எந்தக் காரணங்களால் அது உங்களுக்குப் பிடித்திருக்கிறது' என்று கருதுகிறீர்கள்? அந்தக் கதையை விமர்சனம் செய்து, முழுத்தாளில் ஒரு பக்கம் வரும்படி எழுதி அனுப்புங்கள்.

உறையின் மேல் 'விமர்சனப் போட்டி' என்று மறக்காமல் குறிப்பிடுங்கள்.

சிறந்த விமர்சனத்திற்கு முதற் பரிசு ரூ.50/–, இரண்டாவது பரிசு ரூ.25/–.

அனுப்ப வேண்டிய கடைசித் தேதி: 31.3.1988.

— ஆசிரியர்.

கேளுங்கள்; சொல்லுகிறோம்

*** சரஸ்வதியைப் பற்றி ஏதாவது கவிதைப் புத்தகம் இருக்கிறதா?**

— சி. மீனலோசனி, திருச்சி — 1.

ஒன்றல்ல; பல நூல்கள் இருக்கின்றன. அவற்றுள் குமரகுருபரர் எழுதிய 'சகலகலா வல்லி மாலை'; கம்பர் எழுதிய 'சரஸ்வதி அந்தாதி' என்ற நூல்கள் மிகவும் குறிப்பிடத் தக்கவை.

*** சப்பாத்திக் கள்ளியை நான் பார்த்திருக்கிறேன். ஆனால், கள்ளியிலே பல இனங்கள் இருப்பதாகச் சொல்கிறார்களே, உண்மையா?**

— க. பாண்டியன், மேலூர்.

ஆம். சதுரக் கள்ளி, இலைக்கள்ளி, திருகு கள்ளி, கொடிக் கள்ளி, மண்டங்கள்ளி என்று பல இனங்கள் நம் நாட்டில் இருக்கின்றன.

*** எங்கு பார்த்தாலும் திருக்குறளை எழுதி வைக்கிறார்கள். திருக்குறளைப் பற்றிப் பேசுகிறார்கள். திருக்குறளைப் பரப்பச் சங்கங்கள் நடத்துகிறார்கள். ஆனாலும், நன்மை பெருக வில்லையே! என்ன காரணம்?**

— வெ. பரமன், தூத்துக்குடி.



திருவள்ளுவர் உயர்ந்த நீதிகளையும், வாழ்க்கை முறைகளையும், ஒழுக்கங்களையும் தமது நூலில் கூறினார். அவற்றின்படி மக்கள் நடக்க வேண்டும் என்று விரும்பினார். ஒரு சிலர்தான், குறளைப் படித்து, அதன்படி நடக்கிறார்கள்; அல்லது நடக்க முயலுகிறார்கள். ஆயினும், பலர், எடுத்ததற்கெல்லாம் மேற்கோள் காட்டிப் பேசிவிட்டு விரும்பத்தகாத, நாட்டுக்குத் தீங்கு விளைவிக்கும், செயல்களில் ஈடுபடுகிறார்களே! என்ன செய்வது?

திருமண வீட்டில், தாலி கட்டும் போது யாராவது தும்மினால் அபசகுனமாகி விடுமே என்று தும்மல் சத்தம் கேட்காமல் இருக்க அப்போது 'கெட்டிமேளம்' கொட்டச்சொல்வார்கள். அதேபோல், பலர் தாங்கள் செய்யும் தீய செயல்கள் பிறருக்குத் தெரியாமல் இருக்க, திருக்குறளைப் பற்றிப் பேசிப் பேசி ஏமாற்றுவதால்தான், நாட்டில் ஒழுக்கக் கேடுகளும், வன்முறைகளும், மோசடிகளும் பெருகி வருகின்றன.

*** இந்தியாவில் சாரணர் இயக்கத்தைத் தொடங்கியவர் யார்?**

— பெ. கமலசாமி, கரந்தை.



அன்னி பெசன்ட் அம்மையார்தான் 1916 இல் தொடங்கினார்.

*** நகைச்சுவைக் கதை, துணுக்குகளுக்கு நீங்கள் படங்கள் வரைந்து கொள்வீர்களா? அல்லது, நாங்கள் வரைந்து அனுப்ப வேண்டுமா?**

— கா. சவிதா, திருவையாறு.

படங்கள் போடத் தெரிந்தால், இந்தியன் இங்கில் வரைந்து கதை, நகைச்சுவைத் துணுக்குகளுடன் அனுப்பலாம். ஆனால், படங்கள் அனுப்ப வேண்டுமென்ற கட்டாயமில்லை. எங்கள் ஓவியர்களைக் கொண்டு உங்கள் படைப்புக்களுக்கு ஏற்றவாறு படங்கள் வரையச் செய்து அச்சிடுவோம்.

*** முதல் முதலாக பாரத ரத்னா விருது பெற்றது யார்?**

— க. ஜெயமணி, பம்பாய்.



பாரதரத்னா விருதை முதல் முதலாகப் பெற்றவர்கள் மூவர். ராஜாஜி, டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன், சர் சி. வி. ராமன்.

*** நம் தேசத் தலைவர்களைப் பற்றி நிறையத் தெரிந்து கொள்ள எனக்கு ஆசை. அவர்களைப் பற்றிய புத்தகங்கள் எங்கு கிடைக்கும்?**

— டி. சீனிவாசன், பெரம்பூர்.

பல பதிப்பகங்கள் நம் தேசத் தலைவர்களைப் பற்றிய புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அநேகமாக எல்லாத் தலைவர்களைப் பற்றியும் 'நாட்டுக்குழைத்த நல்லவர்கள்' என்ற வரிசையில் பல புத்தகங்களை வெளியிட்டிருப்பவர்கள்: பழனியப்பா, பிரதர்ஸ், 14, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை — 14.

*** உங்களைத் தேடிவரும் ஒவ்வொருவருக்கும் நீங்கள் இல்லை என்று கூறாமல் வழங்குவது எது?**

— எப். ஷர்புதீன், மேட்டுப்பாளையம்.

அன்பு.

*** சில வௌவால்கள் பழங்கள் சாப்பிடுகின்றனவாமே, உண்மையா?**

— கோ. நாகேஸ்வரன், குடியாத்தம் — 2.

ஆம். பழந்தின்னி வௌவால்கள் என்று வௌவால்களில் ஒரு வகை உண்டு. அவை பல ஒன்று சேர்ந்து ஒரே மரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும். பழங்களின் சாற்றை உறிஞ்சிக் குடித்துவிட்டு, சக்கையைத் துப்பி விடும்.

*** மூதறிஞர் இராஜாஜியின் பெயரில் ஏன் ஒரு மாவட்டம் தொடங்கக் கூடாது?**

— வேத. வரதகணேஷ், செருவாமணி.

தொடங்கலாம். ஆனால், இராஜாஜி எக்காலத்திலும் இத்தகைய விளம்பரங்களை விரும்பியவரல்ல. அவர் கடைப்பிடித்த கண்ணியம், நேர்மை, சத்தியம், போன்ற நற்குணங்களை நாம் பின்பற்றினால், அதுவே அவருக்குச் செய்யும் கைமாறாகும்.

*** தமிழில் குழந்தை நூல்களை அதிகமாக எழுதியவர் யார்?**

— கே. சுப்பிரமணியன், மேலகரம்.

தங்கமணி இதுவரை 200 — க்கும் மேற்பட்ட புத்தகங்களை உங்களுக்காக எழுதியிருக்கிறார்.

*** 'சுதந்திரம் எங்களது பிறப்புரிமை. அதை அடைந்தே தீருவோம்' என்று முழக்கமிட்ட தேசத் தலைவர் யார்?**

— ஜி. ஜபருன்னா, சோழபுரம்.

பாலகங்காதர திலகர்.


*** யாழ்களின் இலக்கணங்களைப் பற்றிக் கூறும் 'கல்லாடம்' என்ற நூலின் ஆசிரியர் யார்? அவர் வாழ்ந்த காலம் எது?**

— வெ. தியாகராஜன், ஆலம்பூண்டி.

'கல்லாடம்' இலக்கண நூல் அல்ல. அது ஓர் அகப்பொருள் இலக்கிய நூல். அந்த நூல் மதுரையில் நடந்த பல திருவிளையாடல்களைப் பற்றிக் கூறுகிறது. அதை எழுதியவர் பெயர் கல்லாடர். அவர் வாழ்ந்த காலம் சரியாகத் தெரியவில்லை.

*** மாட்டுத் தோலினால் செருப்புத் தைப்பது எல்லாருக்கும் தெரியும். ஆனால், மீன் தோலில் கூடச் செருப்புத் தைக்கலாம் என்கிறான் என் நண்பன். அதைக் கேட்டு என்னால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. நீங்களே சொல்லுங்கள். மீன் தோலால் செருப்புத் தைக்க முடியுமா?**

— சி. கண்ணுசாமி, பேராவூரணி.



உன் நண்பன் சொன்னதிலும் உண்மை இருக்கிறது. ஆனால், எல்லா மீன்களின் தோல்களிலும் செருப்புத் தைக்க முடியாது. சுறா மீன் தோலிலே செருப்புத் தைக்கிறார்கள். அதன் தோல் பெரிதாகவும் சொர சொரப்பாக இருப்பதாலும், அத்தோலினால், பை, கண்ணாடிக் கூடு, செருப்பு போன்ற பொருள்களைச் செய்கிறார்கள்.

பிருந்தாவனம்



சிரிப்பு

"உங்களுக்கு இரத்தக் கொதிப்பு உள்ளது. ஆகவே, நீங்கள் நகைச்சுவைப் படங்களைப் பார்க்க வேண்டும்" என்றார் டாக்டர்.

டாக்டர் சொன்னபடி அந்த மனிதர் பல நகைச்சுவைப் படங்களைப் பார்த்தும் பயனில்லை. மீண்டும் டாக்டரிடம் சென்று கேட்டார்:

"நீங்கள் அந்தப் படங்களைப் பார்த்துச் சரியாகச் சிரித்திருக்க மாட்டீர்கள். கடைசியாக உங்களுக்கு ஒரு வழி சொல்கிறேன். நம் ஊரில் சர்க்கஸ் நடக்கிறது. அங்கு போய், சர்க்கஸ் கோமாளி செய்யும் அட்டகாசங்களைப் பார்த்தால், நீங்கள் குலுங்கக் குலுங்கச் சிரிப்பீர்கள்" என்றார்.

உடனே அந்த மனிதர் படுபயங்கரமாகச் சிரித்தார். டாக்டருக்கு ஒன்றும் புரியவில்லை. "ஏன் இப்படிப் படுபயங்கரமாகச் சிரிக்கிறீர்?" என்று கேட்டார்.

"ஒன்றுமில்லை. அந்த சர்க்கஸில் வரும் கோமாளி நானேதான்!" என்று சிரிப்பை அடக்க முடியாமல் கூறினார் அந்த மனிதர்.

— சி. எல். சரவணன் (706), மதுரை — 1.

காது இருக்கும் இடம்

நமக்குத் தலையின் இருபுறமும் காதுகள் இருக்கின்றன. பறவைகளுக்குக் காதுகள் சிறு இறகுகளில் மறைந்திருக்கின்றன. சில பூச்சிகளுக்கு முன் கால்களில்தான் சத்தத்தை உணரும் சக்தி இருக்கிறது. பாம்புக்குக் காது இல்லை. தரையில் ஏற்படும் அதிர்வுகளைக் கொண்டே அது மற்றவர்கள் வருவதைத் தெரிந்து கொள்ளும்.

ஏ. பிரபு (641), பரோடா.



புகழ் பெற்ற மன்னர்கள்

கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு புகழ்பெற்ற மன்னர்களைக் கண்டுபிடிக்கவும்.

1. கன்றுக்குட்டி, தேர்க்கால்
2. முரசு, கட்டில்
3. புறா, அம்பு
4. சிலம்பு, முத்துப் பரல்
5. இமயமலை, கண்ணகி



6. நெல்லிக்கனி, பாட்டி
7. மயில், போர்வை
8. முல்லை, தேர்
9. சிற்பக்கலை, கடற்கரைக் கோயில்
10. காவிரி, கல்லணை.

விடைகள்: 1. மனுநீதிச் சோழன், 2. பெரும் சேரலிரும்பொறை, 3. சிபிச் சக்கரவர்த்தி, 4. பாண்டியன் நெடுஞ்செழியன், 5. சேரன் செங்குட்டுவன், 6. அதியமான், 7. பேகன், 8. பாரி, 9. மாமல்லன், (நரசிம்ம பல்லவன்), 10. கரிகால் சோழன்.

— வித்யப்ரசன்ன (16,598), சென்னை — 28.

ஊர்களில் சில கண்டுபிடிப்புகள்

கும்பகோணம்— கணக்கில் வருவது
குளித்தலை — உடலில் ஓர் உறுப்பு,
குண்டக்கல்— வீடு கட்ட உதவுவது,
புலியூர் — காட்டில் வசிப்பது,
மத்தளம்பாறை — இசைக் கருவி.

— ர. ஸ்ரீவித்யா (14,682), நஞ்சைபுகலூர்.



இலைப்பூ, ஓலைப்பூ

மலர்களைக் கண்டு மயங்காத மாந்தர் இவ்வுலகில் இல்லை. எத்தனையோ பூக்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஆயினும், அவைகளிலே தனித்திருக்கும் இருவகை மலர்களைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? இலைப்பூ என்றும் ஓலைப்பூ என்றும் அவற்றைக் கூறுவர்.

இலைப்பூ — மருக்கொழுந்து,
ஓலைப்பூ — தாழம்பூ.

— க. ஸ்ரீராம் (8477), நெய்வேலி — 1.



இடித்தவன் யார்?

பைத்தியம் — 1: நேத்து ராத்திரி நான்



ராக்கெட்லே போனப்போ, பின்னாலே ஏதோ இடிச்ச மாதிரி இருந்துச்சு.


பைத்தியம் — 2: அட, நான்தான் நேத்து ராத்திரி லாரியிலே வந்து இடிச்சேன்.

— ஆர். மதியழகன் (17,162), காவேரிப்பட்டணம்.



கலப்பு இனம்

ஆடுதுறை-27 — இது ஜப்பான் நாட்டு நெல் இனங்களில் ஒன்றையும், இந்திய நெல் இனங்களில் ஒன்றையும் கொண்டு உருவாக்கப்பட்டது. சோளம், கோதுமை, திராட்சை, கரும்பு ஆகியவற்றிலும் கலப்பினம்



உண்டாக்குகிறார்கள்.

மிருகங்களில் கூடக் கலப்பினம் உண்டு. கோவேறு கழுதை என்கிறோமே அது ஆண் கழுதைக்கும் பெண் குதிரைக்கும் பிறந்ததுதான்.

— பழ. சாந்தி (5939),
இராயவரம்.

சமாதிகளின் பெயர்கள்

காந்தி சமாதி — ராஜ்காட்,
நேரு சமாதி — சாந்திவனம்,
லால்பகதூர் சமாதி — விஜய்காட்,
இந்திரா காந்தி சமாதி — சக்தி ஸ்தலம்,
சரண்சிங் சமாதி — கிசான்காட்.

— ப. விஜயகுமார் (241),
சென்னை — 7.

வேதியியல் ஆய்வுக்கூடப் பழ (புது) மொழிகள்



ஆசிட் இல்லா லேபும், ஆசிரியர் இல்லா வகுப்பும் பாழ்.

ஆயிரம் டெஸ்ட் ட்யூப் உடைத்தவன் அரை சயின்டிஸ்ட்.

அட்டெண்டரை நம்பி புரொஜீசரைக் கைவிடாதே.

ஆசிட் அன்றே ஓட்டையிடும்; பேஸ் நின்றே ஓட்டையிடும்.

கைநழுவிய பீக்கரும், வாய் நழுவிய வார்த்தையும் திரும்பவே திரும்பாது.

— பி. என். ஸ்ரீதர் (7035),
சங்கர் நகர்.



பூம்புகாரில் காணோமே!

பூம்புகாருக்கு நான் சமீபத்தில் சென்றேன். அங்கு சிலப்பதிகாரக் காட்சிகளை மிக அழகாகச் சுவரில் செதுக்கியிருக்கிறார்கள். ஆயினும், எனக்கு ஒரு குறை தெரிந்தது. அரண்மனைக்குச் சென்ற கண்ணகி 'கோவலன் கள்வன் அல்லன்' என்ற உண்

மையை எடுத்துக் காட்டி உணர்த்தியதும், பாண்டிய மன்னன் தன் தவறை உணருகிறார். உடனே மனம் வருந்தி உயிர் துறக்கிறார். மன்னர் உயிர் துறந்ததும், அவருடைய மனைவியாகிய கோப்பெருந்தேவியும் இறந்து விடுகிறாள். ஆனால், இக்காட்சி அங்கு காணப்படவில்லை!

ஏ.எல். ராமு (3674), மதுரை—2.

அபூர்வம்



பிறந்த நாளும் இறந்த நாளும் ஒன்றாக அமைவது அபூர்வமே. ஹெலன் கெல்லர் — தமது 88 வது வயதில் காலமானார்.

அவர் பிறந்தது. 27.6.1880.

அவர் மறைந்தது. 27.6.1968.

— சை. மைவிழி (13840), திண்டுக்கல் — 9.

சிறையிலே பாடிய பாடல்கள்



மந்திரியாக இருந்த மாணிக்க வாசகர், பாண்டிய மன்னர் குதிரை வாங்கக் கொடுத்த பணத்தில் சிவன் கோயில் கட்டினாரல்லவா? அவரைப் போலவே, தானேஷா என்ற நவாப்பின் ஆட்சியில் தாசில்தாராயிருந்த இராமதாசர் என்பவர் அரசாங்க வரிப் பணத்திலிருந்து ஆறு லட்ச ரூபாயை எடுத்து இராமபிரானுக்குப் பத்ராசலத்தில் கோயில் கட்டி விட்டார். இதை அறிந்த நவாப் அவரைச் சிறையில் அடைத்தார். இராமரும் இலட்சுமணரும் மனித உருவில் வந்து, அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய பணத்தைக் கட்டி இராமதாசரை விடுதலை செய்தனர். சிறையில் இருந்த போது இராமபிரானைப் பற்றி இராமதாசர் பாடிய பாடல்கள் மிக இனிமையானவை. உருக்கமானவை.

ஏ. ஆர். ஆனந்த் (421), காரைக்குடி.

மன்னருக்குத் தண்டனை!

இங்கிலாந்து மன்னராயிருந்த ஏழாவது எட்வர்ட் ஒரு குற்றம் செய்து விட்டார். அதனால், அவருக்குத் தண்டனை அளிப்பது என்று பிரிட்டிஷ் பார்லிமெண்ட் முடிவு செய்தது. ஆனால், எப்படிப்பட்ட தண்டனையை வழங்குவது என்று தீர்மானிக்க முடியவில்லை.



அப்போது பிரிட்டனின் ஆட்சிக்கு உட்பட்ட எல்லா நாடுகளிலும் உள்ள நீதிபதிகளுக்கு விவரத்தை எழுதி என்ன தண்டனை கொடுக்கலாம் என்று கேட்டார்கள். சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாக இருந்த சர் டி. முத்துசாமி ஐயர், "மன்னரின் தலையில் கிரீடம் இல்லாமல் மொட்டைத் தலையுடன் இருப்பது போல் ரூபாய் நாணயங்களை அச்சடித்து வெளியிடலாம்" என்று யோசனை கூறினார்; அவரது யோசனை 'மிகச் சிறந்த யோசனை' என்று ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஒரு கோடி ரூபாய் நாணயங்கள் கிரீடம் இல்லாமலேயே வெளியிடப்பட்டன!

ஆர். ராஜா (1006) சென்னை—17.



எல்லாம் நன்மைக்கே!

குழந்தைக் கவிஞர்

என்ன நடந்த போதும், உடனே
 'எல்லாம் நன்மைக்கே'
என்று கூறும் அமைச்சர் ஒருவர்
 இருந்து வந்தாராம்.
அன்று மன்னர் தமது வாளை
 எடுத்துக் கொண்டாராம்.
ஆப்பிள் பழத்தைக் கையில் பிடித்து
 வெட்ட லானாராம்.

துண்டு விரலில் வாளும் படவே
 துண்ட மானதாம்!
துடிது டித்தே அரசர் அழுது
 துயர முற்றாராம்.
என்ன என்று அமைச்சர் கேட்டுத்
 தெரிந்து கொண்டாராம்.
என்றும் போலக் கூறி னாராம்
 "எல்லாம் நன்மைக்கே"

அரசர் இதனைக் கேட்டு மிகவும்
 கோபம் கொண்டாராம்.
அமைச்ச ரையே சிறையில் வைக்க
 ஆணை யிட்டாராம்.
சிறையை நோக்கிச் செல்லும் போதும்
 "எல்லாம் நன்மைக்கே
சென்று வருவேன்" என்றே அமைச்சர்
 சிரித்துச் சென்றாராம்.

அரசர் ஒருநாள் வேட்டை யாடக்
 காட்டில் சென்றாராம்.
அழகு மானைக் கண்டே அவரும்
 பின் தொடர்ந்தாராம்.

துரத்திச் சென்ற மானும் எங்கோ
 துள்ளி மறைந்ததாம்.
திரும்ப வழியும் தெரிந்தி டாமல்
 திணறிப் போனாராம்.

அரசர் மிகவும் கவலை யோடு
 அலைய லானாராம்.
அங்கு மிங்கும் சென்று சென்று
 அலுத்துப் போனாராம்.
இரவு நேரம் வந்த வுடனே
 என்ன செய்வது?
என்றே அவரும் எண்ணி எண்ணி
 ஏங்கி நின்றாராம்.

எட்டு ஆதி வாசி மக்கள்
 எதிரில் வந்தாராம்.
ஏதும் கூறி டாமல் அவரைச்
 சூழ்ந்து கொண்டாராம்.
கட்டிப் பிடித்தே அவரைத் தூக்கிக்
 கொண்டு சென்றாராம்.
காட்டி லுள்ள பெரிய குகையில்
 இறக்கி விட்டாராம்.

தலைவன் முன்னே நிறுத்தி வைத்துத்
 தாழ்ந்து பணிந்தபின்,
"தகுந்த ஆளைப் பிடித்து வந்தோம்"
 என உரைத்தாராம்.
"தலையை வெட்டிப் பலி கொடுக்கக்
 காளி தேவிக்குத்
தகுந்த ஆள்தான்" என்று கூறி
 அவன் மகிழ்ந்தானாம்.

அரசர் தம்மைக் காளி கோயில்
கொண்டு சென்றாராம்.
அங்கே தலைவ னோடு பலரும்
அமர்ந்தி ருந்தாராம்
பெரிய வாளைக் கையில் ஏந்தி
ஒருவன் நின்றானும்.
பெரிதும் மகிழ்ச்சி யோடு மக்கள்
பார்த்தி ருந்தாராம்.

கைகள் கூப்பி அரசர் அங்கே
வணங்கி நின்றாராம்.
''காளி தேவி, என்னைக் காக்க
வேண்டும்'' என்றாராம்.
ஐயம் கொண்ட தலைவன் உடனே
அருகில் வந்தானும்.
''ஐந்து விரலில் ஒன்றைக் காணோம்''
என்று சொன்னானும்.

''ஊன முற்ற மனிதனை நாம்
பலி கொடுப்பதா?
உடனே நிறுத்து! நிறுத்து!'' என்றே
ஆணை யிட்டானும்.
''ஏனோ இவனைப் பிடித்து வந்தீர்?
காட்டின் எல்லையில்,
இன்றே கொண்டு விடுவீர்'' என்றே
தொடர்ந்து சொன்னானும்.

''எல்லாம் நன்மைக் கென்று கூறும்
இனிய அமைச்சரே,
இழந்த விரல்தான் எனது உயிரைக்
காத்த'' தென்றாராம்.
''நல்ல வார்த்தை சொன்ன உம்மைச்
சிறையில் அடைத்ததால்,
நானே பெரிய பாவி'' என்று
வருத்த முற்றாராம்.

''சிறையில் வைக்கச் சொன்ன போதும்
'எல்லாம் நன்மைக்கே.
சென்று வருவேன்' என்று நீரும்
சொன்னி ரல்லவா?
தெரிந்து கொள்ள லாமோ அதற்கே
உரிய காரணம்?
தெளிவு படுத்தும்'' என்றே அரசர்
கேட்டுக் கொண்டாராம்.

''சிறையில் வைக்க வில்லை யானால்
வேட்டை யாடவே
சேர்ந்தே நாமும் சென்றி ருப்போம்
வழக்கம் போலவே.
விரலை இழந்த உங்க ளுக்குப்
பதிலாய்க் காளிக்கு
வெட்டி என்னைப் பலி கொடுத்தே
இருப்பா ரல்லவோ!




அரண்ம னைக்கு அரசர் வந்து
சேர்ந்த வுடனேயே,
அளவில் லாத மகிழ்ச்சி யோடு
விரைந்து சென்றாராம்.
சிறையி லிருந்த அமைச்சர் தம்மை
அழைத்து வந்தாராம்.
''செத்துப் பிழைத்தேன் உங்களாலே''
என்று சொன்னாராம்.

ஆத லாலே நீங்கள் என்னைச்
சிறையில் வைக்கவே,
ஆணை யிட்ட போதும் சொன்னேன்
'எல்லாம் நன்மைக்கே'.
சேதம் இன்றி உங்கள் ஆணை
என்னைக் காத்தது.
சிறந்த நன்மை தானே?'' என்று
அமைச்சர் சொன்னாராம்.



பாரதன் அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக, அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: வி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: 431543, 434157.



அமரர் அகிலன்

தோற்றம்: 27-6-1922 மறைவு: 31-1-1988

